பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்

அருளிய

# உள்ளூர்ச் சிவசுப்பிரமணியர் சதகம்

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்

அருளிய

# உள்ளூர்ச்
# சிவசுப்பிரமணியர் சதகம்

உரை விளக்கம்:

நக்கீரன் வழியடிமை புலவர் பி.மா. சோமசுந்தரனார்

பதிப்பாசிரியர்

முனைவர் **நல்லூர் சா. சரவணன்**
பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்
சைவ சித்தாந்தத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.

வெளியீடு

**சைவ சித்தாந்தப் பெருமன்றம்**

எண். 7, முதல் மாடி, வேங்கடேச அக்கிரகாரம் சாலை,
மயிலாப்பூர், சென்னை–600 004.

**2017**

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் அருளிய
உள்ளூர்ச் சிவசுப்பிரமணியர் சதகம்

பதிப்பாசிரியர்: முனைவர் நல்லூர் சா. சரவணன்

முதல் பதிப்பு: ஜூன்,2017

பக்கங்கள்: 204

ஒளி அச்சு & நூல் வடிவமைப்பு : 'உள்ளூர்' சு. அசோக்குமார்

அட்டை வடிவமைப்பு : காயத்ரி

அச்சாக்கம்: கேபிடல் இம்பரசன், சென்னை - 600 014

விலை: ₹ 120

வெளியீடு:

சைவ சித்தாந்தப் பெருமன்றம்
எண். 7, முதல் மாடி, வேங்கடேச அக்கிரகாரம் சாலை,
மயிலாப்பூர், சென்னை-600 004.
போன்: 044-24935109

# முன்னுரை

**தி**ருக்கோயில் வழிபாடு வகையில், அருளாளர்களின் இயக்கம் வழிபாட்டில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. திருஞானசம்பந்தர் தொடங்கி அருணகிரிநாதர் வரை திருக்கோயில்கள்தோறும் சென்று பாடல்கள் பாடியுள்ளனர். அருளாளர்களால் பாடப்பெற்ற நிலையில் 'பாடல் பெற்ற தலம்' என்ற அடையாளம் திருக்கோயில்களுக்குக் கிடைக்கிறது. இம்முறையில் திருக்கோயில்களில் அவ்வக்கோயிலின் வரலாற்றுத் தொடர்புடைய பாடல்கள் கல்வெட்டில் பதிவு செய்யப்படுகின்றன. இம்முறையின் வேறாகப் பொதுவான சில பாடல்கள் பல திருக்கோயில்களிலும் பதிக்கப்படுகின்றன. இம்முறைக்கு உரிய பாடல்களில் பாம்பன் சுவாமிகளின் பாடல்கள் தலை நிற்கின்றன. பெரும்பான்மையும் பெருமைசான்ற அனைத்துத் திருக்கோயில்களிலும் பாம்பன் சுவாமிகளின் 'குமாரஸ்தவம்' கல்வெட்டு காணப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து 'சண்முக கவசமும்' இணைகின்றது. இவ் உயரிய பாராயண மந்திரப் பாக்களை உலகிற்கு அளித்தவர் 'பாம்பன் சுவாமிகள்' என்று எல்லோராலும் உரிமையாக அழைக்கப்படுகிற **'அத்தியாச்சிரம சுத்தாத்வைத வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்'** ஆவார். அண்மைக்காலத்து அருளாளராக இருந்து தொன்மைக் காலத்து அடியார்களுடன் இணைந்த ஞானத்தொண்டு ஆற்றியவர் பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்.

**'வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க'** வந்தவர் என்று திருஞானசம்பந்தரைப் பற்றிச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார். திருஞானசம்பந்தரின் அந்தத் தொண்டினை ஞானமரபின் முறைகளில் நிலை பெறுத்தி நிறைவு பெறச் செய்தவர் பாம்பன் சுவாமிகள்.

(ii)

திருஞானசம்பந்தர் தலைமை என்பது சைவத்திற்கு எதிரான புறச் சமயங்களான சமண, பௌத்த எதிர்ப்பு மட்டுமல்ல, இந்து மரபின் மூலமான அல்லது வேதச் சிந்தனையைத் தெளிவான முடிவுக்குக் கொண்டு வந்ததும் ஆகும். திருஞானசம்பந்தரின் மிக முக்கியமான பணி வேதாந்தத்தைத் தெளிவுபடுத்தியது ஆகும்.

**'மறுவிலா மறை ஓர் கழுமல முதுபதிக் கவுணியன்'** என்று திருஞானசம்பந்தர் தன்னைத் திருஎழு கூற்றிருக்கையில் தெளிவுபடுத்துகிறார். அந்தப் பாடலில் கடவுள் குறித்த ஆய்வு முடிவையும் தெளிவுபடுத்துகிறார்.

"ஆறுபதமும் ஐந்தமா் கல்வியும்
மறை முதல் நான்கும்
மூன்று காலமும் தோன்ற நின்றனை
இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறை ஓர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்
அனைய தன்மையை ஆதலின் நின்னை
நினைய வல்லவா் இல்லை நீள் நிலத்தே"

இது திருஞானசம்பந்தர் பாடிய திருஎழு கூற்றிருக்கையின் இறுதிப் பகுதி. இதில் கடவுளைப் பற்றிய, தான் கூறுகின்ற, தன் அனுபவ முடிவைத் தவிர வேறு முடிவுகள் சரியானதல்ல என்று கூறுகின்றார். குற்றமில்லாத இந்த முடிவைக் கொண்டதுதான் வேதம் என்று அறுதியிட்டுக் கூறுகின்றார். இந்த முடிவான அனுபவத்தால்தான் கடவுளாகிய உன் உண்மையைத் தெளிய முடியும் என்று கடவுளிடமே தெரிவித்து கடவுளின்

*சாட்சியும் பெற்று விடுகிறார் திருஞானசம்பந்தர். மேலும் கடவுள் பற்றிய முடிவை 'உலகப் பொருள் ஆய்வின் முடிவாக' தத்துவமாக விரிவுபடுத்தியும் விளக்கியுள்ளார்.*

ஈறாய் முதல் ஒன்றாய் இருபெண் ஆண் குணம் மூன்றாய்
மாறா மறை நான்காய் பூதம்மவை ஐந்தாய்
ஆறார் சுவை ஏழ்ஓசையோடு எட்டுத்திசை தானாய்
வேறாய் உடன் ஆனான் இடம் வீழிம் மிழலையே

[முதல் திருமுறை, பதிகம், 11, பாடல் 2]

*எனும் பாடலில் திருஞானசம்பந்தர், இறைவன் எல்லாவற்றிலும் இருப்பதைக் காட்டி இறைவனின் காரண இருப்புத் தன்மையைத் தெளிவுபடுத்துகிறார்.*

*இறைவன் எல்லாப் பொருள்களிலும் இருந்தாலும் எல்லாவற்றிலிருந்தும் விலகித் 'தானாய்' இருக்கிறான். ஆனால், அவனின் வேறான பொருள்களில் 'உடனாய்' இருக்கிறான் என்று கூறுகின்றார்.*

*'தானாய்' இறைவன் இருப்பது இரண்டு முறைகளில், ஒன்று: 'தான் எனும் ஒரு தனிப்பொருள் நிலை'; இரண்டு: 'பொருள்களில் பொருள்களாகவே இருக்கும் நிலை'.*

*இறைவன் தானே தனியாக நிற்பதற்கு என்று ஒன்றும் இல்லை. இறைவன் வேறானவைகளோடு இணைந்து 'அது அதுவாக இருக்கிறான்'. வேறான அவைகளிலிருந்து வேறுபட்டு இருக்கும் தனித்தன்மை உடைய அவன், அவைகளாக இருப்பது; பொருள்களின் இயக்கத்திற்குத் துணையாக/உடனாக இருப்பது என்பது இயக்கும் நிலை. இதில் அவற்றை 'இயக்கி இயங்குவதாக' இருப்பதுதான்* **கடவுள்** *என்பதும்* **இயவுள்** *என்பதும்.*

*பரம்பொருள் அல்லது கடவுள் அல்லது இறைவன் 'தான் ஒன்றாக இருந்து', 'ஒருமையாகப் பொருள்களுடன் கலந்து இருக்கிறான்' என்பதை விளக்குவதே 'இரண்டல்லாத ஒன்று' எனும் பொருள்படும் 'அத்துவிதம்' ஆகும். இதையே 'ஏகமேவாத்வதீயம்' என்று*

மஹா வாக்கியத்திற்கு - மறைக்கு 'உரிய குற்றமற்ற முடிவு' என்றார் திருஞானசம்பந்தர். இதன் அனுபவத்தை உணர்வதே உயிரின் நோக்கம் என்று அதை அடைவதற்கான தடைகளான 'வினை' முதலானவற்றை நீக்குவதே தன் செயல்பாடு என்று திருக்கோயில்கள் தோறும் சென்று பதிகங்கள் பாடினார்.

(iii)

கடவுள் அனுபவத்தை வேதத்தில் ஆராயப்பட்ட முறைகளையும் உபதேசங்களையும் உள்வாங்க கடவுள் நிலையின் முடிவைக் காணுகிறார் திருஞானசம்பந்தர். கடவுளுக்கு அயலாகப் பொருள்கள் உண்டு; கடவுள் இல்லாமல் அவை இல்லை. தானாவே இருந்து, வேறானவைகளிலும் கடவுள் இருப்பதை முடிவு கட்டிய திருஞான சம்பந்தரின் தத்துவ முடிவுதான் 'வேத நெறியை' தெளிவுபடுத்திய நிலை.

அடுத்து அனுபவ முடிவாக - சித்தாந்தம் விளங்குவதையும் திருஞானசம்பந்தர் மூலம் தெளிவாவதைக் காண்கிறோம். உயிரின் விடுதலை அல்லது 'இறையுடன் உயிர் பின்னமிலா ஒருமை பெறுதல்' குறித்தும் திருஞானசம்பந்தர் மேலே கூறப்பட்டதன் உண்மையில் எளிமையாக உணர வைத்து விடுகிறார். இதற்கும் உபாயம் அல்லது சாட்சியை வேத உபநிடதப் பகுதியைத் தொட்டுநின்றே தெளிவுபடுத்து கிறார்.

கடவுளை அடைவது குறித்த விசாரணையில் உடம்பில், உயிர் தொடர்பில் கடவுளின் இடமும் கடவுள் பெருமையும் நாரதருக்கு ஸ்கந்தர் உபதேசமாக உபநிடதத்தில் காட்டப்படுகின்றன. சாமவேதம் சார்ந்த சாந்தோக்கிய உபநிடதத்தில் வருவது ஸ்கந்தரிடம் நாரதர் உபதேசம் பெறும் பகுதி. இதன் விளக்கத்தில் வருவது தகரவித்தை. உடலிடத்து 'தகரம் எனும் வெளி' இருப்பது

இதயம் சார்ந்த இடம். நான் என்று ஒருவர் தன்னைச் சுட்டும் இடத்துள்ளே இருப்பது அவ்வெளி. அது தகரவெளி - இதயவெளி - தகராலயம் - இதயகாயம். அது தாமரை வடிவினது ஆதலால் கமலாலயம், வல்லீபுரம், புண்டரிகபுரம். அது ஞான வடிவினது எனவே 'சிதம்பரம்'. இதுவே 'பிரம்மம்' எனும் கடவுள் வாழிடம். எனவே, 'பிரமபுரம்'. இந்த பிரம்ம சொரூபம் வெளி. அதனை அடைவதே முடிவானது. இதன் அனுபவமும் இருமையின் ஒருமை. இது ஆன்மா தன் உள் உள்ள 'வெளியான இறைவனுடன்' கலக்கவும், பெருவெளியாய் உள்ள இறைவனுடன் இருப்பதாகிறது. இதனை விரும்பிச் செயல்படுவதே 'பெருநெறியாகிய பிரமபுரம் விரும்புவது'. இதனை விரும்பிச் செயல்பட்டவரே திருஞானசம்பந்தர்.

அருநெறிய மறைவல்ல முனியகன் பொய்கையலர் மேய
**பெருநெறிய பிரமாபுர(ம்) மேவிய பெம்மா**ன் இவன் தன்னை
ஒருநெறிய மனம் வைத்து உணர் ஞானசம்பந்தன் உரை செய்த
திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிது ஆமே

[முதல் திருமுறை, பதிகம் 1, பாடல் 11]

இது, திருஞானசம்பந்தர் பாடியவற்றுள் முதல் பதிகமாகக் கூறப்படுவதன் இறுதிப் பாடல் (திருக்கடைக் காப்பு).

சிதம்பரம், தகராகாயம், பிரம்மபுரம் என்னும் வேதநெறி உபதேச அடையாளத்தினை அனுபவமாகப் பெற்று, வேதவிசாரத்திற்கு அனுபவத் தெளிவும் முடிவும் கட்டிய திருஞானசம்பந்தர் இந்து ஞான மரபின் தலைமைக் குருவாகிறார். இதன் தடைவிடைகளைத் தகர்க்க, வேத உபநிடத புராண ஆகம திருமுறை மேற்கோள்களுடன் அனைத்து ஐயங்களையும் தெளிய வைத்து ஆதாரங்களை முறைப்படுத்தி முடிவை உணர வைப்பவர் ஆகிறார் பாம்பன் சுவாமிகள்.

108 உபநிடத மேற்கோள்கள் தொடங்கி, அனைத்து ஆப்த வாக்கியங்களையும் எடுத்துக்காட்டி அனைத்து

ஐயங்களுக்கும் விடையாகும் மூல ஆதாரமும் மொழிபெயர்ப்பும் விளக்கமும் தந்து ஞானநூல் மரபில் சித்தாந்தத்தைத் தெளிவித்தவர் பாம்பன் சுவாமிகள். அனுபவ முடிவை ஒப்பிட்டுப் பார்க்கவும் உபதேசத் தொடர்கள் தெரிவிப்பதைச் சரியாக அறியவும் இம்முறையைக் கையாள்கிறார் பாம்பன் சுவாமிகள்.

திருஞானசம்பந்தர் தழைத்தோங்கச் செய்த வேதநெறி (ஞானம்) விளங்கக் காட்டிய மிகு சைவத்துறை (அனுபவம்) பாம்பன் சுவாமிகளால் **'அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்தம்'** என விளக்கப்பட்டது.

திருஞானசம்பந்தரின் தொண்டின் அடிப்படையை இந்து மரபின் சாரமாக நிலைநாட்டுவதற்கு:- நூல், விளக்கம், தெளிவு என எல்லா வகையிலும் எடுத்துரைத்துப் பணியாற்றினார் பாம்பன் சுவாமிகள். **பரிபூரணானந்த போதம், தகராலய ரகசியம்** எனும் நூல்கள் அவற்றில் தலையாயவை. இரண்டும் தத்துவ மரபை ஒரு முடிவின் கீழ் தெளிவுபடுத்தும் வரலாற்று நோக்கம் கொண்டவை. அதனால் ஞான நூல்கள் அனைத்தும் உரிய வகையில் உரை விளக்கப் பகுதியாக எடுத்துக் காட்டப்பெற்று இணைக்கப்பட்டுள்ளன.

தகராலய ரகசியம் பாம்பன் சுவாமிகளின் அனுபவ மாகவும் அமைந்து ஞான மரபாலும் விளக்கம் பெற்றது.

திருஞான சம்பந்தரின் அனுபவத்தையும் தொண்டினையும் தானும் பெற்று ஞானநூல் வரலாற்றுள் தெளிவுபடுத்தித் தெளிவுபடுத்தி பாம்பன் சுவாமிகள் நிற்பதோடுகூட, திருஞானசம்பந்தர் மரபிலேயே பண்/ பாடல்களையும் அருளியவராக உள்ளார். **திருஞான சம்பந்தர் ஆதியாக அமைய பாம்பன் சுவாமிகள் அந்தமாக அமைந்திட அந்தாதி அமைப்பில் 'வேத நெறியும் சைவத்துறையும்' முழுமை பெற்று நமக்குச் சாட்சியாகிக் காட்சியாகின்றன.**

(iv)

வழிபாட்டுப் பாடல்களில் தலையாயதாக அனுபவிக்கப் பெறுவது பாம்பன் சுவாமிகள் அருளிச் செய்த ‘சண்முக கவசம்’. பாம்பன் சுவாமிகள் தொடக்கத்தில் கந்த சஷ்டி கவசம் பாடியவர். ஆனால் புதியதாக ‘சண்முக கவசத்தை’ மக்களுக்கு அருளுகிறார். அதற்கான அடிப்படைக் காரணம் என்னவென்றால் பாராயணப் பாடலின் மூலமே முடிவான முழுமையான நோக்கத்தை மக்களுக்கு வழங்க வேண்டும் என்பது கருத்தாகும்.

திருஞானசம்பந்தர்தான் முதன்முதலில் மக்கள் குறைகளை வினை அடிப்படையில் மக்கள் விடுதலை பெறுவதற்கு வகை வகையாகப் பாடித் தருகிறார். நோய் தீர, செல்வம் பெற, பகை ஓட என அனைத்து நோக்கங்களுக்கும் பாடல் பாடினார் திருஞானசம்பந்தர். அவர் வழிகோலிய திருமுறை மரபில் அவ்வப் பாடலுக்குரிய தலமும் இணைந்து விடுகிறது. தலக்காப்பு இல்லாமலும் அனைத்து வேண்டுதல்களுக்கும் தீர்வளிக்க சண்முக கவசம் தருகிறார், பாம்பன் சுவாமிகள். சிக்கல்களின் தொகுப்பில் தீர்வுகளை வேண்டி ‘சண்முக கவசம்’ சகலருக்கும் தரப்பெற்றுள்ளது.

கடவுள் வரலாற்றில் சமயம் சார்ந்து கடவுளை வழிபடுதல்தான் இன்றைய நடைமுறையாக உள்ளது. நமக்குத் தெரிந்தோ தெரியாமலோ நாம் இதில்தான் இருக்கிறோம். அப்படி, உருவ வழிபாட்டை உடையனவாக ஆறு சமயங்கள் சொல்லப்படுகின்றன. இவற்றுள் ஒன்றாக முருகனை வைத்து வேண்டுதல் களைப் பெறுவதற்கு உதவுவது ‘கந்த சஷ்டி கவசம்’. ஆனால் ஒரு முழுமைப் பரம்பொருளை நமக்குத் தெரியாமல் சென்று அடையும் சரியான பாதையைக் கொண்டு செலுத்துவது ‘சண்முக கவசம்’.

ஒரு பெரிய கடவுள் நம்முடைய சிக்கல்களைத் தீர்த்து நம்மை வாழ வைக்கிறது என்று எந்தக் கவலையும் இல்லாமல் பாராயணம் செய்ய உதவியாக இருப்பதே 'சண்முக கவசம்'.

"அண்டமாய் அவனியாகி அறியொணாப் பொருள் அது ஆகித்
தொண்டர்கள் குருவும் ஆகி"

என்பது 'சண்முக கவசம்' நூலின் தொடக்கம். அண்டம் எனும் உருவம், அறியொணாத அருவம், நமக்கு அருளும் குரு என முழுமைப் பொருளை அனுபவத்திற்கு ஆதாரப்படுத்தித் தொடங்குவது 'சண்முக கவசம்'.

இறுதியாக,

'தனிமையில் கூட்டம் தன்னில்
சரவணபவனார் காக்க'

என்று முடியும் பகுதியில் வாழ்வியல் நிலைப்பாட்டை நம்முள் நிறுத்துவது 'சண்முக கவசம்'. நாம் எல்லாவற்றிலும் விலக்கப்பட்டு கடவுளோடு வாழும் சொல்லொணா இழப்பிலா சுத்தத் தன்மையிலும், கடவுள் வாழிடமாக நாம் ஆகும்போது நம்மைச் சுற்றியிருக்கும் கூட்டத்தின் தலைமையிலும் நிறுத்திக் காப்பதாக அம் 'முழுமைப் பொருளை' அனுபவமாகப் பெறுவதைக் காட்டுகிறார்.

'சொரூப அகலம்' என 'வெளி' எனும் சொரூப இலக்கணமாக உள்ளது பரம்பொருள் அது 'குகேசன்' என்பது. உடம்புள் நாம் வாழும் இடத்தை வெளியாக அமைத்து அந்த வெளியிலேயே தானும் வாழ்பவன் குகேசன். அந்த வெளிதான் தகரவெளி. குகையாக உள்ள அந்த வெளியில் இருக்கும் ஈசனே குகேசன் (குகை ஈசன்) என்றார். இந்தப் பெயர் உருவம் இல்லாத பரம்பொருள் சிறு வெளியாக நமக்காக இருப்பது. அது தன் பரவெளியில் நம்மைக் கலக்க வைப்பதே தகராலய ரகசியம். இதனை பிரப்பன்வலசையில் தவம் இருந்து உபதேசமாகப் பெற்ற பாம்பன் சுவாமிகள், தன்

அனுபவமாகச் சென்னையில் பெற்றார்கள். உபதேசத்தை நூலாகவும் அனுபவத்தை ஞானவியலான உரையாகவும் தெளிவுபடுத்தி வழங்கி உள்ளார்கள். இந்த பெரிய அனுபவத்திற்குரிய அடிப்படைப் பாராயணம் சண்முக கவசம். இதன் மூலம் அவசியமற்ற வேண்டுகோள் தொடங்கி ஆதாரமற்றதும் ஆதாரமாவதுமான பரமரகசிய பரம்பொருள் அனுபவம்வரை கூடும்.

முருகனை நம் எதிரே நிறுத்தும்/ஆவாஹனம் செய்ய வைக்கும் பாராயணமான **'பகை கடிதல்'**; நம் வாழ்வியல் படிகளைக் கடக்கச் செய்யும் **'பஞ்சாமிர்த வண்ணம்'** இரண்டும் அனுபவப் பிரசித்தமானவை.

முருகனைக் கேட்க வைத்து (ராமேஸ்வரம் இல்லத்தில் பாடியது), வரவைத்து (பிரப்பன் வலசை), நிற்க வைத்து (பஞ்சாமிர்த வண்ணம், திருச்செந்தூர்) நமக்காக 6666 பாடல்களை விளக்கங்களை அருளியவர் பாம்பன் சுவாமிகள்.

நம்முடைய குறைகள் நாலாபக்கங்களிலும் சூழ்ந்திருக்கின்றன. அவற்றில் நம்மால் நமக்கு வந்தவையும் நமக்குப் பிறரால் வந்தனவும் என அவை நம்மை இறுக்கிக் கொண்டிருக்கின்றன. இவை நாலா பக்கமும் சிதற வேண்டும். இதற்குப் பல வகையாலும் பாராயணம் செய்தும் செயலில் உண்மையும் நன்றியும் காட்டியும் நிற்க உதவும் வகையில் பாம்பன் சுவாமிகளால் பாடல்கள் படைக்கப்பட்டு இருக்கின்றன.

(v)

குகேசன் நம் இதய ஆகாயத்தில் இருக்கிறான் என்று எண்ண வேண்டும். அதற்கு உருவம் இல்லை, அது வெளி. அதை அடைய குருவின் உருவத்தை எண்ண வேண்டும். பின் குகேசன் மந்திரம்/பாராயணம் உபாசிக்க வேண்டும். இந்த முறையை தகராலய ரகசியம் இரண்டாம் காண்டத்தில் குறிப்பிடுகிறார் பாம்பன் சுவாமிகள்.

*பாம்பன் சுவாமிகள் பாடல்களில் அருணகிரிநாதரை அடையாளம் காணாமல் இருக்க முடியாது. அருணகிரி நாதரைச் சாட்சியாக வைத்தே குகேசனை அனுபவித்தார் நம் சுவாமிகள்.*

(vi)

*பாம்பன் சுவாமிகள் 6666 பாடல்களை அருளி உள்ளார். அவை ஆறு மண்டலங்களாகத் தொகுக்கப்பட்டு உள்ளன. முதல் மண்டலத்தில் உள்ள நூல்* ***'உள்ளூர்ச் சிவசுப்பிரமணியர் சதகம்'.***

*நூறு பாடல்களால் ஆன நூல் சதகம். பாம்பன் சுவாமிகள் முருகனைச் சுப்பிரமணியர் எனக் குறிப்பிட்டுப் பாடிய நூறு பாடல்களால் ஆனது உள்ளூர்ச் சிவசுப்பிரமணியர் சதகம். 'உள்ளூர்' என்பது பாம்பன் சுவாமிகள் இருந்த ஊர் என்ற வகையில் தலைமை பெறுகிறது.*

*பாம்பன் சுவாமிகள் உள்ளூர் சார்ந்து இருந்த பெருங்கோயிலே திருஇராமேச்சுரம். அதன் மேலை வாயிலில் உள்ள முருகன் பாம்பன் சுவாமிகள் வழிபடும் பாடலும் பெற்றவர். அவ்வகையிலும் இராமேச்சுரத்து முருகப்பெருமான் உள்ளூர்ப் பெருமான் ஆகிறார்.*

*பாம்பன் சுவாமிகள் மலையாள நாட்டிற்கும் சென்றார். கேரளாவில் உள்ள ஒரு ஊர் 'உள்ளூர்'. அவ்ஊர் குறித்தும் இச்சதகத்தைப் பயன் கொள்ளலாம்.*

*பொருள் அடிப்படையில் 'உள்ளூர்' என்பது நம்மிடம் கடவுள் இருக்கும் இடம். இதனை வேத-உபநிடதங்களும் 'பிரமபுரம்' என்கின்றன. பிரமம் என்பது கடவுள். பிரமத்தின் இடம் பிரமபுரம் என்பது.*

*பிரமபுரம் என்பதனை அனுபவ உரிமையில் 'உள்ளூர்' என்றார் பாம்பன் சுவாமிகள் எனவும் கொள்ளலாம்.*

*உள்ளூர்ச் சிவசுப்பிரமணியர் சதகத்தில் சைவ சித்தாந்த மரபை மெய்ப்பொருளியலாகவும் வாழ்விய*

லாகவும் அமைத்துப் பாடியுள்ளார், பாம்பன் சுவாமிகள். தத்துவத்தை வாழ்க்கை அனுபவத்தில் காணும் நடைமுறையில் உள்ள இந்நூலைச் சென்னைப் பல்கலைக்கழகச் சைவ சித்தாந்தம் முதுகலைப் பட்டத்திற்குப் பாடமுறையிலும் வைக்கப்பட்டுள்ளது.

(vii)

'உள்ளூர்ச் சிவசுப்பிரமணியர் சதகம்' நூலினைத் தத்துவ-அனுபவ மரபில் பாடியுள்ளார். சைவ சித்தாந்தத் தத்துவ விளக்கமாகப் பின்வருமாறு நூலின் பொருண்மைகளை வரிசைப்படுத்தியுள்ளார் சுவாமிகள்.

முதல் இருபது பாடல்களில் பரம்பொருள் தன்மையை விவரித்துள்ளார்.

அடுத்த பத்துப் பாடல்களில் (21-30) சைவ சித்தாந்தத்தின் மாயை, கன்மம், ஆணவம் ஆகியன விவரிக்கப்பட்டு பிறப்பு விடுதலை நிலைகளும் விவரிக்கப்பட்டுள்ளன.

மனிதப் பிறப்பு எடுத்த வகையில் அறிந்தும் அறியாமலும் ஈடுபடுகின்ற தவறான செய்கைகளைப் பட்டியலிட்டு அவற்றில் ஈடுபடாமையையும் விடுதலையையும் விவரிக்கிறார் (31-50).

பரம்பொருள் அனுபவத்திற்குரிய யோக முறைகளையும் அதன் ஞான நிலைகளையும் விவரிக்கிறார் (51-60).

சைவ சித்தாந்த சாத்திர மரபு, அருளாளர்கள் மரபு என சித்தாந்த சைவ வரலாற்றை நியாயப்படுத்துகிறார். சித்தர் சிவப்பிரகாசர் வரலாறும் குறிப்பிடப்படுவது முக்கியமானது (61-70).

வேத-உபநிடத மகா வாக்கியத்திற்கான பொருள் விளக்கத்தைச் சித்தாந்த சைவ மரபில் விளங்கிக்கொள்ள வேண்டிய விளக்கங்களைத் தருகிறார் (71-80).

*பரம்பொருளின் அருள் அனுபவம் கைவரப் பெறுதலை விவரிக்கிறார் (81-90).*

*இறுதியாக (91-100), அத்துவித ஞானம் கைவருதலையும் பிறப்பு இனி வாராமையையும் பரம்பொருளுடன் கலத்தலையும் விவரிக்கிறார்.*

(viii)

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளின் ஞான மரபில் தலைநின்ற நக்கீரன் வழியடினாக புலவர் பி.மா. சோமசுந்தரரும் ஒருவர். ஞான மோதலில் வெட்டென வேறுபடுத்தி ஒரு கருத்தில் தலை நிற்பவர் புலவர் பி.மா. சோமசுந்தரனார் அவர்கள். அவர்களுடைய பொழிப்புரையுடன் 'உள்ளூர்ச் சிவசுப்பிரமணியர் சதகம்' நூல் பெருமன்ற வெளியீடாக வெளிவருகின்றது. இவ்வெளியீட்டிற்கு நல்லாதரவு நல்கிய பெருமகனார் மயில்வாகனம் சிவத்திரு வெங்கட்ராமன் அவர்கள்.*

*இவ்வெளியீடு வெளிவரத் துணைநின்ற அன்பர்கட்கும் சைவ சித்தாந்தப் பெருமன்ற அன்பர்கட்கும் நன்றி உரியது.*

*(நூலின் முகப்பு அட்டைப்படம் சிதம்பரம் மேலைக் கோபுர உட்புறத்திலிருந்து வாயிலின் இடதுபுற மதிலில் உள்ள சிற்பம்.)*

சென்னை 'சித்தாந்தச் செம்மணி', 'சைவத் தமிழ்ச்செல்வர்'
22.06.2017 முனைவர் நல்லூர் **சா. சரவணன்**

***தலைவர்:*** *சை.சி.பெருமன்றம்*
***ஆசிரியர்:*** *'சித்தாந்தம்' மாத இதழ்*
**பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்**
*சைவ சித்தாந்தத் துறை, சென்னைப் பல்கலைக்கழகம்*
***ஒருங்கிணைப்பாளர்***, *சுவாமி விவேகானந்தர் கல்வி மற்றும் உயராய்வு மையம், சென்னைப் பல்கலைக்கழகம்*

உ

### பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்

அருளிய

# உள்ளூர்ச் சிவசுப்பிரமணியர் சதகம்

*(1 முதல் 20 வரையுள்ள பாடல்கள் இறைவன் தன்மை குறித்தன.)*

### பன்னிருசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

1. திருவேறும் வேதநவி லொருவர்குரு வேநந்தி
தெளியவுரை தந்தகுருவே
சிவமகிமை நாரதற் கோதுகுரு வேபொதிகை
திகழ்முனிக் கருள்செய்குருவே
கருதரிய வொருசொல்லை யாறுபெயர் பக்குவங்
கண்டன்று சொற்றகுருவே
கங்குல்பக லற்றபே ரின்பவீ டடையரா
கவனுக் குரைத்தகுருவே
இருளற வெனச்சுக முனிக்கருள்செய் குருவேயெ
னிதயத் தமர்ந்தகுருவே
ஏதிலுணர் வுயர்வாம தேவர்குரு வேயுலக
மெங்குமவிர் கின்றகுருவே
திருவுள முவந்தருள் புரிந்தென்னை யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

**திரு ஏறும் வேத நவில் ஒருவர் குருவே நந்தி**
**தெளிய உரை தந்த குருவே**
**சிவ மகிமை நாரதற்கு ஓது குருவே பொதிகை**
**திகழ் முனிக்கு அருள் செய் குருவே**
**கருத அரிய ஒரு சொல்லை ஆறுபெயர் பக்குவம்**
**கண்டு அன்று சொற்ற குருவே**
**கங்குல் பகல் அற்ற பேரின்ப வீடு அடைய**
**ராகவனுக்கு உரைத்த குருவே**
**இருள் அற எனச் சுகமுனிக்கு அருள் செய் குருவே**
**என் இதயத்து அமர்ந்த குருவே**
**ஏது இல் உணர் உயர் வாமதேவர் குருவே உலகம்**
**எங்கும் அவிர்கின்ற குருவே**
**திருஉளம் உவந்து அருள் புரிந்து என்னை ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*இனிமை கொண்ட வீட்டுப் பேற்றின் தலைவனே! தெளிந்த அறிவு என்னும் கடலானது விளங்குகின்ற (உள்ளத் தாமரையாகிய) உள்ளூரில் எழுந்தருளியுள்ள சிவசுப்பிரமணிய தெய்வமே! மேம்பாடு மிகுந்த வேதங்கள் முழுமுதல்வன் எனவும், பிரமன், திருமால், உருத்திரன் ஆகியவர்களைப் படைத்த நான்காவது கடவுள் எனவும், போற்றுகின்ற ஒப்பற்ற சிவபெருமானுக்குப் பிரணவப் பொருளை அருளிய குருவே! திருத்தணியில் தவம் செய்த நந்தியெம்பெருமானின் உள்ளம் தெளியும்படி சிவதத்துவப் பதிஞானத்தை அருளி முடிவில்லாத இன்பமான முத்தி நிலையில் இருக்கச்செய்த குருவே! சிவபிரானின் திருக்கோல மாண்பை உணரவேண்டித் தணிகை மலையில் தவம் கிடந்த நாரத முனிவருக்குச் சிவபெருமான் பெருமையை அறிவுறுத்திய குருவே! பொதியமலையில் விளங்கும் அகத்திய முனிவருக்கு அருள்செய்த குருவே!*

*திருப்பரங்குன்றில் தவம் செய்த (பராசர முனிவரின் மைந்தரும், வியாச முனிவரின் தமையன்மாரும் ஆகிய) தப்தர், அனந்தர், நந்தி, சதுர்முகர், சக்கரபாணி, மாலி எனப்படும் ஆறுபேர்களின் பக்குவ நிலையை அறிந்து கருதுவதற்கு அரிய ஒரு மொழியை அன்று அவர்களுக்கு அருளிய குருவே! இரவு பகல் என்ற பாகுபாடு இல்லாத பேரின்ப வீட்டை அடையும் நெறியை இராமபிரானுக்கு அருளிய குருவே! வியாசரின் மகனாகிய சுக முனிவரின் அறியாமை நீங்கும்படி அருள்செய்த குருவே! என் உள்ளத்தாமரையில் வீற்றிருந்து அருளும் குருவே! குற்றமற்ற அறிவால் உயர்ந்த வாமதேவ முனிவரின் குருவே! உலகம் எங்கும் நீக்கமற நிறைந்து விளங்கும் குருவே! உனது திருவுள்ளம் உவந்து எளியேன் கடைத்தேறும் வண்ணம் அருள்புரிந்து ஆட்கொள்வாயாக.*

*(முருகனே ஆசிரியத் தலைமை பூண்டவன் என்பது இப்பாடலில் விளக்கப்பட்டது. முழுமுதல்வனும் தட்சிணாமூர்த்திக் கோலத்தில் யாவருக்கும் ஆசிரியனாக விளங்குபவனும் ஆகிய சிவபெருமானே முருகன் தனக்கும் ஆசிரியன் எனக்காட்டும் ஆடல் புரிந்தானன்றோ? அதனால் மெய்ப்பொருளை அவன் ஒருவனே உணர்த்தத்தக்கவன் என்று அறிக).*

2. ஆக்கைக்கு மாவிக்கு மாதார மாயிருந்
தாட்டுவிக் கின்றசிவமே
அறிவினுக் கறிவா யிருந்ததனை யறிவிக்க
வறிவா யியங்குசிவமே
வாக்குக்கு மனதுக்கு மெட்டாத வத்துவித
வத்துவா யுள்ளசிவமே
வளர்பிறவி யாழ்கடல் கடக்குநர் களுக்குறுதி
மல்குபுணை யாகுசிவமே
சூக்குமங் கட்குமொரு சூக்கும மெனப்பனுவல்
சொல்லழிவி லாதசிவமே

தொல்லைவினை யாவுந் துமித்துமதி யமுதச்
சுகானந்த வீடெய்துவான்
சீக்கிரமெனைத்தடுத் தடிமைகொண் டாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

ஆக்கைக்கும் ஆவிக்கும் ஆதாரமாய் இருந்து
ஆட்டுவிக்கின்ற சிவமே
அறிவினுக்கு அறிவாய் இருந்து அதனை அறிவிக்க
அறிவாய் இயங்கு சிவமே
வாக்குக்கும் மனதுக்கம் எட்டாத அத்துவித
வத்துவாய் உள்ள சிவமே
வளர்பிறவி ஆழ்கடல் கடக்குநர்களுக்கு உறுதி
மல்கு புணையாகு சிவமே
சூக்குமங்கட்கும் ஒரு சூக்குமம் எனப் பனுவல்
சொல் அழிவு இலாத சிவமே
தொல்லை வினையாவும் துமித்து மதி அமுதச்
சுகானந்த வீடு எய்துவான்
சீக்கிரம் எனைத் தடுத்து அடிமை கொண்டு ஆள்அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*உடலுக்கும் உயிருக்கும் ஆதாரப் பொருளாய் விளங்கி, உயிர்கள் வினைப்பயனை நுகரும்படி ஆட்டுவிக்கின்ற சிவமே! அறிவுக்கு அறிவே இறைசற் சொரூபம் என்பதை உயிர்களுக்கு அறிவிக்கின்ற அறிவாக இயங்குகின்ற சிவமே! மனம் மொழிகளுக்கு எட்டாத அத்துவிதப் பொருளாய் உள்ள சிவமே! மேன்மேலும் பெருகும் ஆழமான பிறவிக் கடலைக் கடப்பவர்களுக்கு உறுதிமிக்கத் தெப்பமான சிவமே! நுண்ணிய பொருள்களிலும் நுண்ணிய பொருள் என்று தைத்திரீய ஆரணியகம், கடம், சுவேதாசுவதரம், கைவல்லியம்*

*முதலிய உபநிடதங்கள் பேசும் அழிவற்ற சிவமே! பிறவித் தொல்லைக்குக் காரணமான நல்வினை, தீவினை ஆகிய இரண்டையும் ஒழித்து அறிவமிழ்தமாகிய பேரின்ப வீட்டை அடைவதற்கு உலகமயக்கத்தில் நான் சிக்கிக் கொள்ளாதபடி விரைந்து வந்து தடுத்து உன் அடிமையாக என்னை ஏற்று ஆட்கொள்வாயாக.*

3. மானமறு பேரண்ட பகிரண்ட மெங்கனு
மலிந்துள விலாசவொளியே
மாயைநெடு வலிகடிந் தருணெறியி னின்றுளார்
வழிபட் டடைந்தவொளியே
ஞானிகள் புலத்திறையு மணுகாம லிருள்போழு
ஞானவா னந்தவொளியே
நலிவில்பே ரின்பவீ டென்றும்பிர காசிக்க
நாணாளு நிலவுமொளியே
ஊனரம் பென்புரு வினுக்குள்வதி தருமுயிர்க
ளுண்ணிலையி லொளிருமொளியே
உற்றுணர வுரியவிழி யாயவொளி யேயென்ற
னுள்ளத்தை நேர்படுத்தித்
தேனிற் சிறந்ததிரு வருளளித் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

மானம் அறு பேர்அண்டம் பகிரண்டம் எங்கணும்
மலிந்து உள விலாச ஒளியே
மாயை நெடுவலி கடிந்து அருள் நெறியில் நின்று உளார்
வழிபட்டு அடைந்த ஒளியே
ஞானிகள் புலத்து இறையும் அணுகாமல் இருள் போழு
ஞான ஆனந்த ஒளியே
நலிவு இல் பேரின்ப வீடு என்றும் பிரகாசிக்க
நாள் நாளு நிலவும் ஒளியே

**ஊன் நரம்பு என்பு உருவினுக்குள் வதிதரும் உயிர்கள்**
**உள் நிலையில் ஒளிரும் ஒளியே**
**உற்று உணர உரிய விழியாய ஒளியே என்றன்**
**உள்ளத்தை நேர்படுத்தித்**
**தேனில் சிறந்த திரு அருள் அளித்து ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*அளவில்லாத பேரண்டங்கள், பகிரண்டங்கள் யாவற்றினும் நிறைந்துள்ள இன்ப ஒளியே! மாயையின் பெருவலிமையை விலக்கித் திருவருள் நெறியில் ஒழுகுபவர்கள் வழிபட்டு அடைந்த ஒளியே! ஞானிகள் உள்ளத்தில் சிறிதும் நெருங்காதபடி ஆணவ இருளைப் பிளக்கும் அறிவாகிய இன்ப ஒளியே! அழிவில்லாத பேரின்பவீடு எக்காலத்தும் விளங்கும்படி எப்போதும் விளங்கும் ஒளியே! ஊன், நரம்பு, எலும்பு ஆகியவற்றால் உண்டான உடம்பில் வாழும் உயிர்களின் உள்ளத் தாமரையில் விளங்கும் ஒளியே! நன்னெறி பற்றி மெய்ப்பொருளை அறிவதற்குரிய விழியாகிய ஒளியே! எனது உள்ளத்தை மெய்ந்நெறியில் நடத்தி; தேனினும் சிறந்த இன்பந்தரும் நினது திருவருளை வழங்கி அருளி அடியவனை ஆட்கொள்வாயாக.*

4. போதவெளி யாயுள்ள நாதநிலை மேலொளிசெய்
பொருவறு சுயஞ்சோதியே
பூதப்ர பஞ்சநிலை யெங்கணு நிறைந்தபரி
பூரண வியன்சோதியே
கோதில்சிவ ராசயோ கத்திருவர் முன்னர்க்
குதிக்குஞ் செழுஞ்சோதியே
குன்றாத பேரின்ப மன்றக மிலங்குமொரு
கோலப் பரஞ்சோதியே
மூதறி வெனங்கடலின் மூழ்கறிஞர் போதத்தை
மூசிமின் னுஞ்சோதியே

மூடவடி யேன்மூல விருளிரிய வென்னுளு
முயங்குசெம் பொற்சோதியே
தீதிலா னந்தமா வருள்புரிந் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

போத வெளியாய் உள்ள நாதநிலை மேல் ஒளிசெய்
பொருவு அறு சுயஞ்சோதியே
பூதப்ரபஞ்சநிலை எங்கணும் நிறைந்த பரி
பூரண வியன் சோதியே
கோது இல் சிவராச யோகத்து இருவர் முன்னர்க்
குதிக்கும் செழுஞ் சோதியே
குன்றாத பேரின்பம்அன்று அகம் இலங்கும் ஒரு
கோலப் பரஞ்சோதியே
மூது அறிவு எனும் கடலில் மூழ்கு அறிஞர் போதத்தை
மூசி மின்னும் சோதியே
மூட அடியேன் மூல இருள் இரிய என்உளும்
முயங்கு செம்பொன் சோதியே
தீது இல் ஆனந்த மா அருள் புரிந்து ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*ஞானவெளியாக விளங்கும் நாத நிலை மேல் ஒளிவிடும் ஒப்பற்ற சுயஞ்சோதியே! ஐம்பூதக் கலவையான உலகம் எங்கும் நிறைந்த பரிபூரணப் பெருஞ்சோதியே! குற்றமற்ற சிவராசயோகச் செல்வர் முன்பு கூத்தாடும் செழுஞ்சோதியே! அழியாத பேரின்பம் என்னும் சிற்சபையுள் விளங்கும் ஒப்பற்ற அழகிய பரஞ்சோதியே! பேரறிவாகிய கடலில் ஆழ்ந்துள்ள, ஞானிகளின் அறிவை மொய்த்து ஒளிவிடும் சோதியே! மூடனாகிய அடியவனைப் பற்றியுள்ள மூல இருள் (ஆகிய ஆணவம்) நீங்கும்படி என் உள்ளத்திலும், கூடுகின்ற*

*செம்பொன் போல் சுடரும் சோதியே! தீங்கற்ற இன்பமாகிய செல்வத்தை வழங்கி அருளி அடியவனை ஆட்கொள்வாயாக.*

5. அண்டமெனு முண்டைபல வருள்வெளியில் வைத்தகண்
டாகார மானபொருளே
அளவற்ற பெரியவெளி பெரியவெளி யென்றறிஞ
ரறையுமொரு பெரியபொருளே
பண்டுநான் மறையந்த மாகத் திகழ்ந்துமுப்
பாழ்கடந் துள்ளபொருளே
பல்லுரு விலுங்கலந் தறிவீன ரறியப்
படாதவியல் புடையபொருளே
தொண்டர்க ளகப்புலங் குடிகொடெந் நாளுமொரு
துணையின் றியங்குபொருளே
துரியமெய்ஞ் ஞானப் பெருஞ்சோதி யாயேழை
துயர்நூற வந்த பொருளே
செண்டுமுகை யார்மையல் சீத்தென்னை யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

அண்டம் எனும் உண்டை பல அருள்வெளியில் வைத்தஅகண்
டாகாரமான பொருளே
அளவற்ற பெரிய வெளி பெரிய வெளி என்ற அறிஞர்
அறையும் ஒரு பெரிய பொருளே
பண்டு நான்மறை அந்தமாகத் திகழ்ந்து முப்பாழ்
கடந்து உள்ள பொருளே
பல் உருவிலும் கலந்து அறிவீனர் அறியப்
படாத இயல்பு உடைய பொருளே
தொண்டர்கள் அகப்புலம் குடிகொடு எந்நாளும் ஒரு
துணையின்று இயங்கு பொருளே
துரிய மெய்ஞ்ஞானப் பெருஞ்சோதியாய் ஏழை
துயர் நூற வந்த பொருளே

**செண்டு முகையார் மையல் சீத்து என்னை ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*உருண்டை வடிவமான பல அண்டங்களை உன் அருள்வெளியிலே தங்கவைத்த அகண்டாகாரமான பொருளே! அளவிட முடியாத பெரிய வெளி, பெரிய வெளி என்று அறிஞர் கூறும் ஒப்பற்ற பெரியப்பொருளே! பழமையான நான்கு வேத முடிவுப் பொருளாக விளங்கி, முப்பாழ் கடந்துள்ள பொருளே! எல்லாப் பொருளிலும் கலந்து நின்றும், மடம் உடையோர் அறியமுடியாத தன்மையுடைய பொருளே! அன்பர்களின் உள்ளத் தாமரையில் குடிகொண்ட ஒப்பிறரில்லாமல் விளங்கும் பொருளே! மேம்பட்ட மெய்யறிவாகிய பேரொளியாய் ஏழையேனுடைய துயரை அழிக்க வந்த பொருளே! கூரிய அரும்பை ஒத்த கொங்கைகளுடைய மங்கையர் மேற் செல்லும் காமத்தை நீக்கி என்னை ஆட்கொள்வாயாக.*

*(முப்பாழ்:- 1) மாயை 2) உயிர் 3) அருள் இவற்றின் விவரம் திருமந்திரத்தில் காண்க).*

6. முத்தர்க டெவிட்டப் புசித்துக் களிக்குநிஜ
மோனவா னந்தவமுதே
முப்பாழ் கடந்துளவொர் சிற்பர நபத்தினடு
மூலத்து நல்லவமுதே
பத்திமையர் பத்திவயி ராக்கிய நிலைக்குமா
பண்ணுநிலை யின்பவமுதே
பவக்கலி கடக்கவுள் வலித்துத் துறந்தவர்
பசிக்கெடுத் துண்ணுமமுதே
நித்தமுனை நினையுமென் புத்திகரு துற்றபடி
நிலையின்றி யோடுநெஞ்சை
நேர்பட நடத்தியைம் பொறிகளை யடக்குமொரு
நெறிநின் றெனைத்தெரிந்துன்

சித்தொடுங் கூடியினி துய்யவெனை யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

முத்தர்கள் தெவிட்டப் புசித்துக் களிக்கும் நிஜ
மோன ஆனந்த அமுதே
முப்பாழ் கடந்து உள ஓர் சிற்பர நபத்தின் நடு
மூலத்து நல்ல அமுதே
பத்திஇமையர் பத்திவயிராக்கிய நிலைக்குமா
பண்ணு நிலை இன்ப அமுதே
பவக்கவி கடக்க உள் வலித்துத் துறந்தவர்
பசிக்கு எடுத்து உண்ணும் அமுதே
நித்தம் உனை நினையும் என் புத்தி கருது உற்றபடி
நிலையின்றி ஓடு நெஞ்சை
நேர்பட நடத்தி ஐம்பொறிகளை அடக்கும் ஒரு
நெறி நின்று எனைத் தெரிந்து உன்
சித்தொடும் கூடி இனிது உய்ய எனை ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*முத்தர்கள் தேக்கும்படி உண்டு மகிழும் மெய்ப் பொருளாகிய மோன இன்ப அமுதே! முப்பாழைக் கடந்த அப்பாலான ஒப்பற்ற ஞானப் பெருவெளியின் நடுமூலத்து நல்ல அமுதே! அன்பர்கள் தம் அன்புக்கு இனியதாக நிலைக்கும்படி செய்யும் நிலைத்த இன்ப அமுதே! பிறவித் துன்பத்தைக் கடக்கவேண்டும் என்று மன உறுதிக்கொண்டு துறவு பூண்ட பெரியோர் தம் உயிர்ப்பசி தணிய எடுத்து உண்ணும் அமுதே! நாள்தோறும் உன்னையே எண்ணும் என் அறிவுக் கருதுமண்ணம் ஒரு நிலையில் இல்லாமல் ஓடியலையும் என் மனம் ஒழுங்குபடுமாறு செலுத்தி, மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளையும் அடக்கும் ஒப்பற்ற*

*நெறியில் ஒழுகி, என்னை நான் அறிந்துகொண்டு உன் அறிவோடும் கூடி, நன்கு உய்தி பெறுமாறு என்னை ஆட்கொள்வாயாக.*

7. நில்லாத பிரபஞ்ச வாழ்விலுழ லாருள
நிறைந்தநித் தியானந்தமே
நிட்டையின் மனோலயங் கண்டபொழு துச்சிமே
னிற்குநித் தியானந்தமே
பொல்லாத மனமருட் டுன்பினை யெருக்குசிவ
போதநித் தியானந்தமே
புகலரிய பதிஞான கதிநாடு நர்க்கருள்
புரக்குநித் தியானந்தமே
பல்லா யிரங்கோடி யண்டங்க ளெங்கணும்
பரவுநித் தியானந்மே
பத்தனென தெண்ணக் குறிப்பினை யறிந்தினிப்
பருவரல்க ளுள்ளநெறியிற்
செல்லாது செய்துனக் காளாக வாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

நில்லாத பிரபஞ்ச வாழ்வில் உழலார் உள
நிறைந்த நித்தியஆனந்தமே
நிட்டையின் மனோலயம் கண்டபொழுது உச்சிமேல்
நிற்கு நித்தியஆனந்தமே
பொல்லாத மனம் மருள் துன்பினை எருக்கு சிவ
போத நித்தியஆனந்தமே
புகல் அரிய பதிஞான கதி நாடுநர்க்கு அருள்
புரக்கு நித்தியஆனந்தமே
பல்லாயிரம் கோடி அண்டங்கள் எங்கணும்
பரவு நித்தியஆனந்தமே
பத்தன் எனது எண்ணக் குறிப்பினை அறிந்து இனிப்
பருவரல்கள் உள்ள நெறியில்

**செல்லாது செய்து உனக்கு ஆளாக ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*நிலையற்ற உலகவாழ்வில் உழலாத பெரியோர் உள்ளத்து நிறைந்துள்ள நித்தியானந்தமே! நிட்டையில் மனோலயம் கைக்கூடியப் பொழுது அதன்முடிவில் விளங்கும் நித்தியானந்தமே! கொடிய மன அறியாமையால் விளையும் துன்பத்தை ஒழிக்கும் சிவஞான நித்தியானந்தமே! சொல்லுவதற்கு அரிய பதிஞான நிலையை விரும்புபவர்களுக்கு அருள் புரக்கும் நித்தியானந்தமே! பல்லாயிரம் கோடி அண்டங்கள் முழுவதும் பரவுகின்ற நித்தியானந்தமே! உனது அன்பனாகிய எனது எண்ணக் குறிப்பைத் திருவுள்ளத்தில் கொண்டு துன்பங்கள் சூழ்ந்த நெறியில் நான் செல்லாத படி செய்து உன் அடிமையாக என்னை ஆட்கொள் வாயாக.*

8. ஆதார மாறிற்கு மாதார மாயிருந்
தரசுபுரி கின்றவரசே
அண்டவெளி தன்னிலே யானந்த நிர்த்தமி
டகண்டசிவ யோகவரசே
மாதா பிதாவாக நின்றெனை யிரக்ஷித்து
மதியதர் கொடுத்தவரசே
மானாபி மானவச டறவன்பர் பக்கலருள்
வருஷிக்கு முகிலினரசே
சூதா முடங்குகா திடுமொரு மருந்தைச்
சுறுக்கினி லுரைக்குமரசே
தோற்றமே ழையும்வகுத் தாளுமர சேதொண்டர்
தோத்திர மதிக்குமரசே
தீதான செயிர்துமித் தென்னைநீ யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

**ஆதாரம் ஆறிற்கும் ஆதாரமாய் இருந்து**
**அரசு புரிகின்ற அரசே**
**அண்டவெளி தன்னிலே ஆனந்த நிர்த்தம் இடு**
**அகண்ட சிவயோக அரசே**
**மாதா பிதாவாக நின்று எனை இரட்சித்து**
**மதி அதர் கொடுத்த அரசே**
**மானஅபிமான அசடு அற அன்பர் பக்கல் அருள்**
**வருஷிக்கு முகிலின் அரசே**
**சூதாம் முடங்குகாது இடும் ஒரு மருந்தைச்**
**கறுக்கினில் உரைக்கும் அரசே**
**தோற்றம் ஏழையும் வகுத்து ஆளும் அரசே தொண்டர்**
**தோத்திர மதிக்கம் அரசே**
**தீதான செயிர் துமித்து என்னை நீ ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை எனப்படும் ஆறு ஆதாரங்களுக்கும், ஆதாரமாக விளங்கி ஆட்சி செய்யும் அரசே! அண்டவெளியிலே இன்பக் கூத்து ஆடும் அகண்ட சிவயோக அரசே! தாயும் தந்தையுமாக இருந்து என்னைக்காத்து ஞானநெறி அருளிய அரசே! மானம், அபிமானம் என்னும் அறியாமை நீங்க அன்பர்கள்பால் அருள்மொழியும் மேகம் ஒத்த அரசே! மாயை ஆகிய நோயை அழிக்கும் ஒப்பற்ற மருந்தை விரைந்து கூறும் அரசே! தாவரம், ஊர்வன, நீர்வாழ்வன, பறவை, விலங்கு, மக்கள், தேவர் எனப்படும் ஏழுவகைப் பிறப்பையும் படைத்து ஆளும் அரசே! அடியவர்கள் புகழுரையை ஏற்கும் அரசே! தீங்காகிய குற்றங்கள் என்பால் தங்காதபடி அழித்து என்னை ஆட்கொள்வாயாக.*

9. ஈரே ழுலோகமெல் லாம்வகுத் திடையின்றி
யேகநிறை வானபரமே
எளியனை யணைத்தழிவி லாதவனு பூதிதர
வீசனா மருவுபரமே
தீராத கோசபா சப்பின்னை லைத்தொண்டர்
சேதித் தறிந்தபரமே
செப்பரிய பேரின்ப வாரியிறை யாமன்னு
சின்மயா னந்தபரமே
பேரூர் குலங்குடி பிறப்பிறப் பென்பவைகள்
பேசவிசை யாதபரமே
பிண்டநீ டண்டபந் தங்கடந் துன்பதம்
பெற்றுமுட் டாதசெல்வச்
சீரோ டிருக்கவருள் செய்தென்னை யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

ஈர்ஏழு லோகம் எல்லாம் வகுத்து இடையின்றி
ஏக நிறைவான பரமே
எளியனை அணைத்து அழிவிலாத அனுபூதி தர
ஈசனா மருவு பரமே
தீராத கோச பாசப் பின்னலைத் தொண்டர்
சேதித்து அறிந்த பரமே
செப்பரிய பேரின்ப வாரி இறையா மன்னு
சின்மய ஆனந்த பரமே
பேர் ஊர் குலம் குடி பிறப்பு இறப்பு என்பவைகள்
பேச இசையாத பரமே
பிண்டம் நீடு அண்டம் பந்தம் கடந்து உன் பதம்
பெற்று முட்டாத செல்வச்
சீரோடு இருக்க அருள் செய்து என்னை ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம் என்னும் ஏழு மேலுலகங்களையும், அதலம், விதலம், சுதலம், தராதலம், மகாதலம், இரசாதலம், பாதாளம் என்னும் ஏழு கீழுலகங்களையும் படைத்து யாவற்றினும் இடையீடு இன்றி ஒரே நிறைவாயுள்ள பரமே! எளியவனை அணைத்து அழிவில்லாத அனுபூதியை வழங்கக் குகப்பரமனாய் வரும் பரமே! ஒருமுடிவுக்கும் வர இயலாத முரண்பாடுகள் மலிந்த சமய நூல்களின் பற்றை அறுத்த தொண்டர்கள் உணர்ந்த பரமே! சொல்லுக்கு அடங்காத பேரின்பக் கடலின் தலைவனாய் விளங்கும் ஞானமயமான இன்ப பரமே! ஊர், பேர், குலம், குடி, பிறப்பு, இறப்பு என்பவைகட்கு உட்படுவனாகப் பேச ஒவ்வாத பரமே! பிண்டம், நீண்ட அண்டம் ஆகியவற்றின் பந்தத்தைக் கடந்து உன் திருவடியைப் பெற்றுக் குறையாத முத்திச் செல்வச் சிறப்போடு நான் இருக்குமாறு அருள்புரிந்து என்னை ஆட்கொள்வாயாக.*

10. முக்குண மிலாதசட் குணசாசு வதயோக
முதல்வனா யுள்ளவிறையே
மும்மலங் களுமிலா நின்மல நிராகார
மோனவருண் மூலவிறையே
மிக்களி யுள்ர்க்கமுத நற்கனியை நல்கருள்
விருக்கமா மன்னுமிறையே
வேதங்க டேடிமுடி வறியாத வற்புத
விலாசப்பிர காசவிறையே
துக்கசுக மொட்டுணர்வு முற்பவ மயக்கமுந்
தொடரா வதீதவிறையே
துவிதத்தை நீக்கியத் துவிதத்தி னினைநெஞ்சர்
தோயின்பி னிற்குமிறையே
திக்கொன் றிலாவென்னை யாதரித் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

**முக்குணம் இலாத சட்குண சாசுவத யோக**
**முதல்வனாய் உள்ள இறையே**
**மும்மலங்களும் இலா நின்மல நிராகார**
**மோன அருள் மூல இறையே**
**மிக்கு அளி உளர்க்கு அமுத நற்கனியை நல்கு அருள்**
**இருக்க மாமன்னும் இறையே**
**வேதங்கள் தேடி முடிவு அறியாத அற்புத**
**விலாசப் பிரகாச இறையே**
**துக்க சுகம் ஒட்டுஉணர்வும் உற்பவம் மயக்கமும்**
**தொடரா அதீத இறையே**
**துவிதத்தை நீக்கி அத் துவிதத்தின் நினைநெஞ்சர்**
**தோய் இன்பில் நிற்கும் இறையே**
**திக்கு ஒன்று இலா என்னை ஆதரித்து ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*உயிர்களுக்கு உரிய இராசதம், தாமதம், சாத்துவிகம் என்ற முக்குணங்கள் அல்லாதனவாய, ஐசுவரியம், திரு, வீரியம், வைராக்கியம், புகழ், ஞானம் என்னும் ஆறு குணங்கள் கொண்ட பகவனாய், நிலைத்தயோக முதல்வனாயுள்ள இறையே! ஆணவம், மாயை, கன்மம் என்ற மும்மலங்கள் பற்றாத, நின்மலமாய், வடிவமற்றதாய், மோனநிலைக்கு அருள்மூலமாய் உள்ள இறையே! பேரருள் கொண்டவர்களுக்கு இன்பமான நல்ல பழத்தைத் தரும் அருள்மரமாக விளங்கும் இறையே! வேதங்கள் தேடியும், முதலும் முடிவும் காணமுடியாத ஞானஒளி வீசும் இறையே! இன்ப துன்பங்கள் பற்றும் அறிவுப்பிறவி மயக்கமும், தொடர முடியாத கடந்த நிலையில் உள்ள இறையே! இரண்டு பொருளாகக் காணும் நிலைகடந்து, இரண்டு எனவும், ஒன்று எனவும் கூறமுடியாத அத்துவித நிலையில் நினைக்கும் உள்ளம் கொண்ட ஞானிகள் திளைக்கும் இன்ப நிலையில் நிலவும்*

*இறையே! உன்னைத்தவிர வேறு கதியற்ற என்னை ஆதரித்து ஆட்கொள்வாயாக.*

11. ஆதித்தர் கடவுளா யவிர்பொருளை யாலம்ப
மற்றுண்மை யுற்றபொருளை
அபிதான வபிதேய நீத்தவொரு பொருளையெனை
யன்பாய் வளர்த்தபொருளை
நாதத்தி னந்தமா யுளபொருளை யிதயத்தி
னடுவே யமர்ந்தபொருளை
ஞானவா னாநிறைந் தெங்குமுள பொருளையென்
னட்புக் குகந்தபொருளை
வாதத்தி னாலளவி டற்கரிய பொருளையென்
மனுவிற் கிரங்குபொருளை
வழியடிய வர்க்கண்மை நொதுமலர்க் கதிதூர
மாகநின் றுள்ளபொருளைச்
சீதத் திருப்பரிவி னல்கியெனை யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

ஆதித்தர் கடவுளாய் அவிர்பொருளை ஆலம்பம்
அற்று உண்மை உற்ற பொருளை
அபிதான அபிதேயம் நீத்த ஒரு பொருளை எனை
அன்பாய் வளர்த்த பொருளை
நாதத்தின் அந்தமாய் உள பொருளை இதயத்தின்
நடுவே அமர்ந்த பொருளை
ஞானவானா நிறைந்து எங்கும் உள பொருளை என்
நட்புக்கு உகந்த பொருளை
வாதத்தினால் அளவிடற்கு அரிய பொருளை என்
மனுவிற்கு இரங்கு பொருளை
வழி அடியவர்க்கு அண்மை நொதுமலர்க்கு அதிதூர
மாசு நின்றுள்ள பொருளைச்

**சீதத் திருப்பரிவு நல்கி எனை ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*தேவதேவனாக விளங்கும் பொருளை, ஒரு பற்றுக்கோடும் இல்லாத மெய்ப்பொருளை, பெயரோ, பெயரிடுவதற்குரிய தன்மையோ, இல்லாத ஒப்பற்ற பொருளை, அன்போடு என்னை ஆளாக்கிய பொருளை, நாதமுடிவாய் உள்ள பொருளை, இருதயக் குகை நடுவே எழுந்தருளியுள்ள பொருளை, ஞானவெளியாக எங்கும் நிறைந்துள்ள பொருளை, என் நட்புக்கு உகந்தருளிய பொருளை, அளவை நூல்களால் அளவிட முடியாத பொருளை, என் விண்ணப்பம் கேட்டு இரங்கியருளும் பொருளை, தூயநெறி பற்றும் அடியவர்கட்கு நெருக்க மாகவும், அயலவர்கட்குப் பெரிதும் விலக்கமாயும் நின்றுள்ள பொருளை, குளிர்ந்த அழகிய அருளால் வழங்கி என்னை ஆட்கொள்வாயாக.*

12. சகலபுத் தேள்களு மிறைஞ்சிப் பழிச்சுஞ்
சதானந்த நாயகத்தைச்
சருவபரி பூரண வனாரத சிதாகாச
சபைநடன நாயகத்தைச்
சகமாயை மருவாத மௌனமெய்ஞ் ஞானிகளி
தயமேவு நாயகத்தைச்
சந்தேகர் நெஞ்சினில் லாதசிவ ஞானோ
தயப்பிரம நாயகத்தை
அகரவுயி ரைப்போல விகபர மிரண்டிலு
மளாவியவிர் நாயகத்தை
அறிவதற் கெண்ணினே னறிவுதந் தறிவித்
தருட்பரவை யிடையமிழ்த்தித்
திகழுநின் சேவடியில் வதியவைத் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

**சகல புத்தேள்களும் இறைஞ்சிப் பழிச்சும்**
**சதானந்த நாயகத்தைச்**
**சருவபரி பூரண அனாரத சிதாகாச**
**சபை நடன நாயகத்தைச்**
**சக மாயை மருவாத மௌன மெய்ஞ்ஞானிகள்**
**இதய மேவு நாயகத்தைச்**
**சந்தேகர் நெஞ்சில் நில்லாத சிவ ஞானோ**
**தயப்பிரம நாயகத்தை**
**அகர உயிரைப் போல இகபரம் இரண்டிலும்**
**அளாவி அவிர் நாயகத்தை**
**அறிவதற்கு எண்ணினேன் அறிவு தந்து அறிவித்து**
**அருட்பரவை இடை அமிழ்த்தித்**
**திகழு நின் சேவடியில் வதிய வைத்து ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*எல்லாத் தேவர்களும் திருவடி பணிந்து புகழும் சதானந்த நாயகத்தை, எங்கும் நிறைந்த ஞானவெளி ஆகிய சிற்சபையில் அனவரத தாண்டவமாடும் நாயகத்தை, உலகமாயை தீண்டாத மோன நிலைகூடிய மெய்ஞ்ஞானிகள் உள்ளத்தில் விரைந்து சேரும் நாயகத்தை, கடவுள் உண்டு என்பதில் ஐயம் உடையவர்கள் நெஞ்சில் தங்காத சிவஞானத்தால் தோன்றும் பிரமமாகிய நாயகத்தை, அகர முதல எழுத்தெல்லாம் என்னும் இலக்கணப்படி இகத்துக்கும் பரத்துக்கும் காரணமாய் நிற்பதோடு அவ்விரண்டிலும் கலந்து விளங்கும் நாயகத்தை, அறிவதற்கு எண்ணினேன் அங்ஙனம் அறியும் அறிவைத் தந்து, அறிவித்து நினது திருவருட் கடலில் ஆழ்த்தி, விளக்கமான நின் திருவடிக் கீழ் வாழவைத்து என்னை ஆட்கொள்வாயாக.*

13. அடியுநடு முடியுமற் றறிவரிய பெரிதா
யலங்கும் பராபரத்தை
அருவுமற் றுருவுமற் றருவுருவு மற்றெவையு
மறியும் பராபரத்தை
மிடியுமருண் மடியுமற் றதுவிது வெனார்கண்
விளங்கும் பராபரத்தை
மிறைகுறைக ளின்றிச் சிதாகாச மெனமின்னி
விரியும் பராபரத்தைக்
குடியுமரில் வெருவுமற் றெனைநசைஇ யென்னுட்
குதிக்கும் பராபரத்தைக்
கொடியனே னுணராது குவலய மயக்கினனி
குலைகிறேன் குலையாமலே
திடவருளி னின்றுணர வருள்புரிந் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

அடியும் நடுமுடியும் அற்று அறிவரிய பெரிதாய்
அலங்கும் பராபரத்தை
அருவும் அற்று உருவும் அற்று அருவுருவும் அற்று எவையும்
அறியும் பராபரத்தை
மிடியும் அருள் மடியும் அற்று அது இது எனார்கண்
விளங்கும் பராபரத்தை
மிறைகுறைகள் இன்றிச் சிதாகாசம் என மின்னி
விரியும் பராபரத்தைக்
குடியும் அரில் வெருவும் அற்று எனை நசைஇ என்னுள்
குதிக்கும் பராபரத்தைக்
கொடியனேன் உணராது குவலய மயக்கில் நனி
குலைகிறேன் குலையாமலே
திட அருளில் நின்று உணர அருள்புரிந்து ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*முதல், நடு, முடிவு இல்லாது, உணர்வதற்கரிய பெரிய பொருளாய் விளங்கும் பராபரத்தை, அருவமாயும் இல்லாமல், உருவமாயும் இல்லாமல், அருவுருவமாயும் இல்லாமல் யாவையும் உணரும் பராபரத்தை, வறுமை, மயக்கம், சோம்பர் ஆகியவை அற்றவராய்த் துவிதப் பொருள் கூறாராய் உள்ளவர்பால் விளங்கும் பராபரத்தை, குற்றம், குறைகள் இல்லாமல் ஞானவெளியாக விளங்கிப் பரந்துள்ள பராபரத்தை, குடும்பக் கடலில் வெருவும் என்னை, நயந்து என் உள்ளத்தில் கூத்தாடும் பராபரத்தைக், கொடியவனாகிய நான் உணராமல் உலகமயக்கில் பட்டழிகின்றேன். அவ்வாறு அழியாமல் உறுதியான நின் திருவருள் வழிநின்று நான் உணரும்படி அருளி ஆட்கொள்வாயாக.*

14\. ஓங்கார சத்தத்தி னாதவடி வாகியுள்
ளூமையா நிற்குமொன்றை
ஊமையெனு மாமோன முடிவான பொருளா
யுறங்கா திருக்குமொன்றை
ஆங்கார நோயினை யறுத்தபெரி யோரறிவி
லனுதினம் விளங்குமொன்றை
ஆபாச மிறையுமில் லாதபர வெளிமுழு
தளாவிநிறை வானவொன்றைத்
தூங்காத பக்குவர்க் கருள்செய்ய விறைவடிவு
தூய்மையிற் கொள்ளுமொன்றைத்
துகளற்ற திவ்வியதே சோமயா னந்தவொளி
சுடர்பருதி யாயவொன்றைத்
தீங்கேறி யுழலெனக் கினிதுதவி யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

**ஓங்கார சத்தத்தில் நாதவடிவாகி உள்**
**ஊமையா நிற்கும் ஒன்றை**
**ஊமை எனும் மாமோன முடிவான பொருளாய்**
**உறங்காது இருக்கும் ஒன்றை**
**ஆங்கார நோயினை அறுத்த பெரியோர் அறிவில்**
**அனுதினம் விளங்கும் ஒன்றை**
**ஆபாசம் இறையும் இல்லாத பர வெளி முழுது**
**அளாவி நிறைவான ஒன்றைத்**
**தூங்காத பக்குவர்க்கு அருள் செய்ய இறை வடிவு**
**தூய்மையில் கொள்ளும் ஒன்றைத்**
**துகள் அற்ற திவ்விய தேசோமய ஆனந்த ஒளி**
**சுடர் பருதியாய ஒன்றைத்**
**தீங்கு ஏறி உழல் எனக்கு இனிது உதவி ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*ஓங்கார ஒலிக்குரிய நாதவடிவாகி உள்ளே மோனமாய் விளங்கும் ஒன்றை, பெருமை சான்ற பேச்சற்ற மோனமுடிவான பொருளாய் எப்போதும் உணர்வோடு கூடிய ஒன்றை, பிறவிக்கு உரிய செருக்கு என்னும் நோயை அறுத்த பெரியோர் அறிவில் எப்போதும் விளங்கும் ஒன்றை, ஒரு சிறிதும் கேடு இல்லாத பரவெளி முழுதும் கலந்து நிறைந்த ஒன்றை, தூக்கம் கடிந்த பக்குவர்களுக்கு அருளும் பொருட்டு தலைமைபெற்ற தூய உடம்புகொள்ளும், ஒன்றை குற்றமற்ற திவ்விய தேசோமய ஆனந்த ஒளியை வீசும் ஞாயிறாகிய ஒன்றை, தீவினை மிகுந்து உழலும் எனக்கு நன்கு உதவியருளி என்னை ஆட்கொள்வாயாக.*

15. அவலநுவ லபலமுஞ் சபலமுஞ் சலனமு
மசஞ்சலமு மில்லாததை
ஆசையு நிராசையு மடந்தரு மிடம்பமு
மழுக்காறு மில்லாததைத்

துவிதவுரை யேகவுரை கூறுபவர் வாதமுஞ்
சூனியமு மில்லாததைத்
சுத்தமு மசுத்தமுந் துக்கமு மகிழ்ச்சியுஞ்
சுட்டுணர்வு மில்லாதை
அவனெனலு மவளெனலு மவரெனலு மதுவெனலு
மவையெனலு மில்லாததை
அறியாத சிறியே னறிந்துய்ய நின்னையே
யண்டினே னகிலமெனையுஞ்
சிவமா முனக்குரிய தொண்டனென வாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

அவல நுவல் அபலமும் சபலமும் சலனமும்
அசஞ்சலமும் இல்லாததை
ஆசையும் நிராசையு மடம் தரும் இடம்பமும்
அழுக்காறும் இல்லாததைத்
துவித உரை ஏக உரை கூறுபவர் வாதமும்
சூனியமும் இல்லாததைச்
சுத்தமும் அசுத்தமும் துக்கமும் மகிழ்ச்சியும்
கட்டுஉணர்வும் இல்லாததை
அவன் எனலும் அவள் எனலும் அவர் எனலும் அது எனலும்
அவை எனலும் இல்லாததை
அறியாத சிறியேன் அறிந்து உய்ய நின்னையே
அண்டினேன் அகிலம் எனையும்
சிவமாம் உனக்கு உரிய தொண்டன் என ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*துன்பத்துக்கு ஏதுவான வன்மைக் குறைவும், வன்மை மிகுதியும் அசைவும், அசைவின்மையும் இல்லாததை, ஆசையும் ஆசையின்மையும், அறியாமையைத் தரும்*

ஆடம்பரமும் அழுக்காறும் இல்லாததை, இரண்டு பொருள் எனவும், ஒன்றே பொருள் எனவும் என்பவர்களின் தருக்கமாயும், பாழ் ஆகவும் இல்லாததை தூய்மையும், அழுக்கும், துன்பமும், இன்பமும் சுட்டியறியும், சிற்றறிவும் இல்லாததை, அவன் எனவோ, அவள் எனவோ, அவர் எனவோ, அது எனவோ, அவை எனவோ, சொல்லும்படி இல்லாததை, ஏதும் அறியாத சிறியேனாகிய நான் அறிந்து உய்தி பெற உன்னையே கதியாக அண்டினேன். எல்லா உலகங்களிலும் சிவமாகி விளங்கும் உனக்கு நான் உரிமையுடைய தொண்டன் ஆகும்படி அருளி என்னை ஆட்கொள்வாயாக.

16. பொய்யாத தாரகப் பொருளா யிருந்தருள்
புரிந்திடு சதாசிவத்தைப்
போதத்தி னிடைநின் றுணர்ச்சிதரு கின்றபரி
பூரண சதாசிவத்தை
மெய்யான வானந்த நிர்த்தன விருஞ்சபை
விளங்கொரு சதாசிவத்தை
வித்தவெளி யென்னவிட னற்றுநிலை யுற்றெங்கு
மேவிய சதாசிவத்தை
நையா வகண்டபதி ஞானச் சுயஞ்சோதி
நடுவவிர் சதாசிவத்தை
நாடா தளப்பிலக நாடிமதி கெட்டகடை
நாயனே னின்னுமதனைச்
செய்யாது நிருபதந் தொழவேவி யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

பொய்யாத தாரகப் பொருளாய் இருந்து அருள்
புரிந்திடு சதாசிவத்தைப்
போதத்தின் இடை நின்று உணர்ச்சி தருகின்ற பரி
பூரண சதாசிவத்தை

மெய்யான ஆனந்த நிர்த்தன இருஞ்சபை
விளங்கு ஒரு சதா சிவத்தை
வித்த வெளி என்ன வீடன் அற்று நிலையுற்று எங்கும்
மேவிய சதா சிவத்தை
நையா அகண்ட பதிஞானச் சுயஞ்சோதி
நடுஅவிர் சதாசிவத்தை
நாடாது அளப்பில் அக நாடி மதி கெட்ட கடை
நாயனேன் இன்னும் அதனைச்
செய்யாது உன் இரு பதம் தொழ ஏவி ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*உயிர்களைப் பந்தத்தினின்று கடக்கச்செய்வது என்று பொருள்படும் தாரகமாகிய அழிவில்லாத பிரணவப் பொருளாக இருந்து அருள்புரியும் சதாசிவத்தை, அறிவுத் தலத்தின் நடுவிலே விளங்கி ஞானத்தை வழங்கும் பரிபூரண சதாசிவத்தை, என்றும் நிலைத்ததாகிய பேரின்ப நடனசபையில் விளங்கும் ஒப்பற்ற சதாசிவத்தை, ஞானவெளியாகி எங்கும் நிலைத்த சதாசிவத்தை, அழியாத அகண்ட பதிஞானச் சுயஞ்சோதியின் நடுவில் விளங்கும் சதாசிவத்தை நாடாமல், அளவில்லாத பாவங்களையே நாடி அறிவுகெட்ட நாயினும் கடையேனாகிய அடியவன் மேலும், அப்பாவச் செயல்களையே செய்யாது உன் இருதிருவடிகளைத் தொழப் பணித்து ஆட்கொள்வாயாக.*

17. மாசற்ற வுள்ளூர் வெளித்தெருவி லேபொங்கி
வழியுஞா னாமுதத்தை
மாயைக் கடற்குளமி ழாதவ ரெடுத்துண்ணு
மதுரஞா னாமுதத்தை
ஆசைக் கசப்பினை யடித்துத் துரத்திடு
மதீதஞா னாமுதத்தை

அன்பர்க ளகப்புலங் கங்குகரை யில்லா
தலம்புஞா னாமுதத்தை
மாசொட்டு மரணசன னங்களை யறக்களைய
வல்லஞா னாமுதத்தை
மனமகிழ்ந் தேயெனக் கூட்டியூட் டிப்பொலா
மலவிரு ளெலாமிரித்துத்
தேசுற்ற செம்பொற் பதங்கொடுத் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

மாசற்ற உள்ளூர் வெளித் தெருவிலே பொங்கி
வழியும் ஞானஅ முதத்தை
மாயைக் கடற்குள் அமிழாதவர் எடுத்து உண்ணும்
மதுர ஞானஅ முதத்தை
ஆசைக் கசப்பினை அடித்துத் துரத்திடும்
அதீத ஞானஅ முதத்தை
அன்பர்கள் அகப்புலம் கங்குகரை இல்லாது
அலம்பு ஞானஅமுதத்தை
மாசு ஒட்டு மரண சனனங்களை அறக் களைய
வல்ல ஞானஅ முதத்தை
மனம் மகிழ்ந்தே எனக் கூட்டி ஊட்டிப் பொலா
மல இருள் எலாம் இரித்துத்
தேசு உற்ற செம்பொன் பதம் கொடுத்து ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*குற்றமற்ற அறிவிருக்கும் தலமாகிய உள்ளூரிலே உள்ள வெளியாகிய தெருவிலே பொங்கிவழிகின்ற ஞான அமுதத்தை, மாயை என்னும் கடலுக்குள் ஆழாதவர்கள் எடுத்து உண்ணும் இனிய ஞான அமுதத்தை, ஆசையாகிய மனத் துக்கத்தை அடித்து ஓட்டிவிடும் உயர்ந்த ஞான*

*அமுதத்தை, அன்பர்கள் உள்ளமாகிய நிலத்தில் கங்குகரை இல்லாமல் ததும்பும் ஞான அமுதத்தை, குற்றங்கள் பற்றும் பிறப்பு, இறப்புக்களை வேரோடும் களையவல்ல ஞான அமுதத்தை, நின் திருவுள்ளம் மகிழ்ந்து எனக்குப் பல தடவை ஊட்டிப் பொல்லாத ஆணவ இருள் முழுவதும் ஒழியச் செய்து ஒளிதங்கிய நினது சிவந்த பொன்னடிகளை வழங்கியருளி என்னை ஆட்கொள் வாயாக.*

18. இவ்வள வெனச்சொலற் கமையா தெனாமறை
யியம்புஞ் சுகோதயத்தை
என்றைக்கு வருமோ வெனாவப்பி யாசிகளு
ளெண்ணுஞ் சுகோதயத்தைக்
கவ்வையொடு தெவ்வமு மிலாதபதி நிட்டையிற்
காணொரு சுகோதயத்தைக்
கறையற்ற வருவமன நற்சீவன் முத்தருட்
கனியுஞ் சுகோதயத்தை
ஒவ்வருவ மனமுமில் பரமுத்த ரிடையறா
துறையுஞ் சுகோதயத்தை
உன்னருளின் வலிகொண்டு பெறவென்று கருதினே
னுள்ளுவந் தருளிநாளுஞ்
செவ்விய திருக்கழற் காளாக வாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

இவ்வளவு எனச் சொலற்கு அமையாது எனா மறை
இயம்பும் சுகஉதயத்தை
என்றைக்கு வருமோ எனா அப்பியாசிகள் உள்
எண்ணும் சுகஉதயத்தை
கவ்வையொடு தெவ்வமும் இலாத பதிநிட்டையில்
காண் ஒரு சுகஉதயத்தைக்

**கறைஅற்ற அருவ மன நற்சீவன் முத்தருட்**
**கனியும் சுகஉதயத்தை**
**ஒவ்வு அருவ மனமும் இல் பரமுத்தர் இடைஅறாது**
**உறையும் சுகஉதயத்தை**
**உன் அருளின் வலிகொண்டு பெற என்று கருதினேன்**
**உள் உவந்து அருளி நாளும்**
**செவ்விய திருக்கழற்கு ஆள் ஆக ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*இந்த அளவினது என்று சொல்லுதற்குக் கூடாதது என்று வேதங்கள் கூறும் சுகோதயத்தை, இறைநெறி பயில்வோர்கள் என்றைக்கு வருமோ என்று உள்ளத்து எண்ணுகிற சுகோதயத்தை, துன்பமும் பகையும் இல்லாத பதிநிட்டையில் காட்சியுறும் ஒப்பற்ற சுகோதயத்தை, குற்றமற்ற அருவ மனமுடைய நல்ல சீவன் முத்தர்கள் உள்ளத்தில் பழுக்கும் சுகோதயத்தை, கூடும் அருவ மனமும் இல்லாத பர முத்தர்களை நீங்காது தங்கும் சுகோதயத்தை, உனது திருவருள் துணைகொண்டு பெறுமாறு எண்ணினேன். நின்திருவுள்ளம் உவந்தருளி செம்மையான நினது கழலணிந்த திருவடிக்கு நான் என்றும் அடிமையாக ஆட்கொள்வாயாக. (சுகோதயம்: இன்பம் தோன்றுவதற்கு மூலமான பொருள்).*

19. அட்டாங்க நிட்டையிலு மெட்டாத வத்துவெனு
மத்துவித சின்மயத்தை
ஆனந்த மேயியல்ப தாயகண் டாகார
மானசிவ சின்மயத்தைத்
தட்டாத சுத்தவெளி தன்னினிறை வானசிவ
சாயுச்சிய சின்மயத்தைத்
தானென்ப தின்றியது தானென் றுணர்ந்தவுயிர்
சார்பரம சின்மயத்தைக்

கிட்டாத மட்டியைக் கிட்டவர வொட்டாத
கேடற்ற சின்மயத்தைக்
கிருபையண வாவறிய னேனறிய வென்றுனது
கிருபையை யவாவுகின்றேன்
சிட்டனிவ னெனவந்தவ் வாறுசெய் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

அட்டாங்க நிட்டையிலும் எட்டாத வத்து எனும்
அத்துவித சின்மயத்தை
ஆனந்தமே இயல்பதாய் அகண்டாகார
மானசிவ சின்மயத்தைத்
தட்டாத சத்தவெளி தன்னில் நிறைவான சிவ
சாயுச்சிய சின்மயத்தைத்
தான் என்பது இன்றி அதுதான் என்று உணர்ந்த உயிர்
சார் பரம சின்மயத்தைக்
கிட்டாத மட்டியைக் கிட்டவர வொட்டாத
கேடுஅற்ற சின்மயத்தைக்
கிருபை அணவா வறியனேன் அறிய என்று உனது
கிருபையை அவாவுகின்றேன்
சிட்டன் இவன் என வந்து அவ்வாறு செய்து ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி எனப்படும் எட்டு உறுப்புக்களைக் கொண்ட நிட்டையில் இருந்தாலும், எட்டாத பொருளாகிய அத்துவித சின்மயத்தை, இன்பமே தன் இயல்பாகவுள்ள அகண்டாகாரமான சிவ சின்மயத்தை, குறைவற்ற தூயவெளியிலே நிறைந்துள்ள சிவசாயுச்சிய சின்மயத்தை, தான் என்னும் செருக்கு நீங்கி*

*அப்பொருளேதான் என்று உணர்ந்து கொண்ட உயிர்கள் கூடும் பெரிய சின்மயத்தை, தன்னை நெருங்காத மூடரைத் தன்னருகே வர ஒட்டாத அழிவற்ற சின்மயத்தை, இதுநாள்வரை நின் அருள் கூடாத வறியவனாகிய நான் உணர விரும்பி உன் திருவருளை அவாவி நிற்கின்றேன். என்னையும் நின் அடியவனாக ஏற்று வந்து என் விருப்பின்வண்ணம் செய்து ஆட்கொள் வாயாக. (சின்மயம்: ஞானமயம் அட்டாங்கயோகம் பற்றிப் பின்னர் விவரிப்போம்).*

20. இறப்புறு பிறப்பின்றி யென்றுமொரு நீர்கொண்ட
வேகபரி பூரணத்தை
எத்துணை விகாரமு மிலாவமல வறிவா
யிலங்குபரி பூரணத்தை
அறப்பொரு ளருட்பொருள் விரும்புவா ருள்ளுணர்ந்
தருள்செய்பரி பூரணத்தை
அறிஞர்தங் கண்ணே யறிந்தத்து விதமென்
றடைந்தபரி பூரணத்தைக்
குறிப்பினு மதிப்பினு மடங்காத வொருதன்மை
கொண்டபரி பூரணத்தைக்
கோதில்வே தாந்தசித் தாந்தசம ரசநிபுணர்
கூறுபரி பூரணத்தைச்
சிறப்புட னளாவிநான் வாழநீ யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

இறப்பு உறு பிறப்பு இன்றி என்றும் ஒரு நீர்கொண்ட
ஏக பரிபூரணத்தை
எத்துணை விகாரமும் இலா அமல அறிவாய்
இலங்கு பரி பூரணத்தை
அறப்பொருள் அருட்பொருள் விரும்புவார் உள் உணர்ந்து
அருள்செய் பரிபூரணத்தை

**அறிஞர் தம் கண்ணே அறிந்து அத்துவிதம் என்று**
**அடைந்த பரிபூரணத்தை**
**குறிப்பினும் மதிப்பினும் அடங்காத ஒரு தன்மை**
**கொண்ட பரிபூரணத்தை**
**கோது இல் வேதாந்த சித்தாந்த சமரச நிபுணர்**
**கூறு பரி பூரணத்தைச்**
**சிறப்புடன் அளாவி நான் வாழ நீ ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*பிறப்பும் அதைத்தொடரும் இறப்பும் இல்லாமல் எப்போதும் ஒரே தன்மையினைக் கொண்ட ஒரே பொருளாகிய பரிபூரணத்தை எந்த அளவிலும் விகாரப் படுதல் இல்லாத மலம் பற்றாத அறிவாகி விளங்கும் பரிபூரணத்தை, அறப்பொருளும், அருட்பொருளும் விரும்புபவர்கள் உள்ளம் அறிந்து அவற்றை அருள் செய்யும் பரிபூரணத்தை. ஞானிகள் தங்கள் உள்ளத்திலேயே அறிந்து அத்துவித நிலையில் அடைந்த பரிபூரணத்தை, சுட்டிக்கூறவும் கருதவும் அடங்காத ஒருதன்மை கொண்ட பரிபூரணத்தை குற்றமற்ற வேதாந்த சித்தாந்த சமரசம் உணர்ந்த ஞானிகள் கூறும் பரிபூரணத்தை சிறப்புடன் கலந்து நான் வாழும்படி என்னை நீ ஆட்கொள்வாயாக.*

*(**21ஆம் பாடல் முதல் 30ஆம் பாடல்** வரை **சைவ சித்தாந்த நுண்பொருள்கள்** கூறப்பட்டுள்ளன.)*

21. நிலமென்று நீரென்று மனலென்றும் வளியென்றும்
நிறையுமா காயமென்றும்
நிநதமென் றும்பரிச மென்றுமுரு வென்றுமறு
நீர்மைநவி லிரசமென்றும்
நலிகந்த மென்றுமொலி வாக்கென்று நிலைமீ
நடக்கின்ற பாதமென்றும்

நல்கவுள கரமென்று மலவிசர்க் கஞ்செய்யு
நாளவிந் திரியமென்றும்
நிலவுசுக் கிலம்விடு முபத்தமென் றுந்தொனி
நிகழ்ச்சியறி சுருதியென்றும்
நிற்குநிர லறியநினை நித்தலு நினைக்கிறே
னிட்டையி லுணர்த்தியருளித்
திலகமலி யுன்னடிப் போதில்வைத் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

நிலம் என்றும் நீர் என்றும் அனல் என்றும் வளி என்றும்
நிறையும் ஆகாயம் என்றும்
நிநதம் என்றும் பரிசம் என்றும் உரு என்றும் அறு
நீர்மை நவில் இரசம் என்றும்
நவி கந்தம் என்றும் ஒலி வாக்கு என்றும் நிலை மீ
நடக்கின்ற பாதம் என்றும்
நல்க உள கரமென்றும் மல விசர்க்கம் செய்யும்
நாள இந்திரியம் என்றும்
நிலவு சுக்கிலம் விடும் உபத்தம் என்றும் தொனி
நிகழ்ச்சி அறி சுருதி என்றும்
நிற்கு நிரல் அறிய நினை நித்தலும் நினைக்கிறேன்
நிட்டையில் உணர்த்தி அருளித்
திலக மலி உன் அடிப்போதில் வைத்து ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*நிலம், நீர், நெருப்பு, காற்று, எங்கும் நிறைந்துள்ள வெளி ஆகிய ஐந்து பூதங்கள் எனவும், அவற்றிற்குக் காரணமாய் உள்ளனவாகிய ஒலி, ஊற்றுணர்ச்சி, வடிவம் (உவர்ப்பு, கார்ப்பு, கைப்பு, இனிப்பு, துவர்ப்பு, புளிப்பு என்று) ஆறு தன்மையாகக் கூறப்படும் சுவை, நலிவை*

*உடைய மணம் எனப்படும் தன்மாத்திரைகள் ஆகிய ஐந்து நுண்பூதங்கள் எனவும் (வெளியின் கூறாகி), ஒலியை எழுப்பும் நாக்கு (நெருப்பின் கூறாகி), நிலத்தின் மீது நடக்கும் கால் (காற்றின் கூறாகிப் பற்றும் தொழிலை உடையதாய்), இல்லை என்று வந்து இரப்பவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் தக்க பொருளைக் கொடுக்கவே படைக்கப்பட்ட கை (நீரின் கூறாகி), மலம் கழிக்கும் உள்துளைக் கொண்ட உறுப்பாகிய எருவிடு வாசல் (நிலத்தின் கூறாகி), படைப்புத் தொழில் தடை படாது நிகழ்வதற்கு உதவும் விந்துவை வெளியேற்றம் கருவிடுவாசல் (ஈண்டு விந்துவை ஏற்றுக்கொள்ளும் பெண் குறியையும் கொள்க), ஆகிய (அறிவு தங்காது) தொழில் மட்டும் புரியும் ஐம்பொறிகள் (கன்மேந்திரியங்கள்) எனவும் அறிவோடு கூடிய பொறிகளுள் (ஞானேந்திரியங்களுள் வெளியின் கூறாகி) ஒலியின் நிகழ்ச்சியை உணரும் காது எனவும் விளங்கும் ஒழுங்கை உணரும் பொருட்டு எப்போதும் உன்னையே சிந்தித்துக் கொண்டு உள்ளேன். அதனை எனக்கு நிட்டையில் உணர்த்தியருளி மேம்பாடு நிறைந்த உன் திருவடித் தாமரைக்கீழ் அடியவனை வைத்து ஆட்கொள்வாயாக.*

*(இப்பாடலில் இடம் பெறாத ஞானேந்திரியங்கள் நான்கையும் அடுத்த பாடலில் அருளிச் செய்துள்ளார்).*

22. தொக்கதென் றுந்துணிகொள் சக்குவென் றுஞ்சுவைக
டுய்க்கின்ற தாலுவென்றும்
துர்க்கந்த நற்கந்த மறிநாடி யென்றுநசை
தொட்டுழலு மனமதென்றும்
தக்கபடி நிச்சயஞ் செய்புத்தி யென்றும்யோ
சனைபணுஞ் சித்தமென்றும்
தன்னக மெழுப்பிடு மகங்கார மென்றுமிவை
தருகின்ற பகுதியென்றும்

நிக்கிரக மாகாத வாணவத் தைச்சிறிது
நீக்குமொரு கருவியென்றும்
நிற்குநிர லறியநினை நித்தலு நினைக்கிறே
னிட்டையி லுணர்த்தியருளித்
திக்கற்ற வென்னையுன் னடியில்வைத் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

தொக்கது என்றும் துணிகொள் சக்கு என்றும் சுவைகள்
துய்க்கின்ற தாலு என்றும்
துர்க்கந்தம் நற்கந்தம் அறி நாடி என்றும் நசை
தொட்டு உழலும் மனம் அது என்றும்
தக்கபடி நிச்சயம் செய்புத்தி என்றும் யோ
சனை பணும் சித்தம் என்றும்
தன்னகம் எழுப்பிடும் அகங்காரம் என்றும் இவை
தருகின்ற பகுதி என்றும்
நிக்கிரகம் ஆகாத ஆணவத்தைச் சிறிது
நீக்கும் ஒரு கருவி என்றும்
நிற்கு நிரல் அறிய நினை நித்தலும் நினைக்கிறேன்
நிட்டையில் உணர்த்தி அருளித்
திக்கற்ற என்னை உன் அடியில் வைத்து ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*(காற்றின் கூறாகிய) மெய், (தீயின் கூறாகி) ஒளி பொருந்திய கண்கள், (நீரின் கூறாகி) சுவைகளையறியும் நாக்கு, (நிலத்தின் கூறாகி) நன்மணம், தீய மணங்களை அறியும் மூக்கு, ஆகிய அறிவு தங்கிய ஐந்து பொறிகள் (ஞானேந்திரியங்கள்) எனவும், (கழுத்தில் தங்கி) ஆசையினைப் பற்றி உழலும் மனம், (முகத்தில் தங்கி) தக்கப்படி முடிவு பண்ணும் புத்தி, (கொப்பூழில் தங்கி)*

*சிந்தித்தலைச் செய்யும் சித்தம், (இருதயத்தில் தங்கி) தன் உள்ளத்தைத் தூண்டிவிடும் அகங்காரம் ஆகியன அந்தக்கரணங்கள் நான்கு எனவும், (ஆக ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கும்) இவை வெளிப்படுதற்கு நிலைக்களமாய் உள்ள மகத் தத்துவமாகவும் குணத்தினை வெளியிடாது அடக்கியுள்ள அவ்வியத்தம் ஆகவும் விளங்குகின்ற மூலப் பிரகிருதி எனவும், நித்தப் பொருள் ஆகையால் அழிவடையாத ஆணவமலத்தைச் சிறிதே விலக்கிடும் ஒப்பற்ற கருவியாகிய கலை எனவும், விளங்கும் ஒழுங்கை உணரும் பொருட்டு எப்போதும் உன்னையே சிந்தித்துக் கொண்டு உள்ளேன். அதனை எனக்கு நிட்டையில் உணர்த்தியருளி தேவதேவனாகிய உன்னையன்றி வேறு கதி இல்லாதவனாகிய எளியவனை உன் திருவடிக் கீழ் வைத்து ஆட்கொள்வாயாக.*

*(அவ்வியத்தம்: காட்சிக்குப் படாதது. நாக்கு முன்பாடலில் கன்மேந்திரியங்களுள் ஒன்றாகக் கணக்கிடப்பட்டது. அந்த நாக்கே இப்பாடலில் ஞானேந்திரியங்களுள் ஒன்றாகக் கணக்கிடப்பட்டுள்ளது. நாக்கு பேசுந்தொழில் உடையது. அத்தொழிலுக்கு அறிவு தேவை இல்லை. சுவை அறிவதற்கு அந்த நாக்குக்கு அறிவு தேவை. இப்படித்தான் பேசவேண்டும் என்று நாக்கு அறியாது. அதைப் பேசவைக்கும் உயிர்தான் எச்சரிக்கையாக இருந்துக் காக்கவேண்டும். “யா காவார் ஆயினும் நாகாக்க” என்றார் திருவள்ளுவனாரும். ஆனால் உண்ணும்போது சிறிது உப்பு உணவில் மிகுதியாய் இருந்தாலும் நாக்கு ஏற்காது. வயிறு எவ்வளவு பசித்தாலும் மிக்க கசப்பான பொருளை நாக்கு ஏற்காது. எனவே, சுவையறிவு உடையது என்ற நிலையில் ஞானேந்திரியம் ஆயிற்று. பேசுந்தொழில் உடையது என்ற நிலையில் கன்மேந்திரியம் ஆயிற்று என்று உணர்க)*

23. கலையிலே தோன்றிஞா னத்தினை யெழுப்பரிய
கருமத்து வித்தையென்றும்
கருமவவ் வித்தையி லுதித்திச்சை யின்செயல்
களைத்தரு மராகமென்றும்
கலையொடு பிறந்துகரு மப்பலனை யுள்ளநாள்
காறுமீ நியதியென்றும்
காலமென் றுங்கலா தியினின் றெழும்பியிரு
கன்மநுகர் புருடனென்றும்
நிலைகொண்மோ கினிமாயை யென்றுமைங் கூறாக
நிகழ்சுத்த மாயையென்றும்
நிற்குநிர லறியநினை நித்தலு நினைக்கிறே
னிட்டையி லுணர்த்தியருளிச்
சிலைமதன் செயனணா வடியில்வைத் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

கலையிலே தோன்றி ஞானத்தினை எழுப்பு அரிய
கருமத்து வித்தை என்றும்
கரும அவ் வித்தையில் உதித்து இச்சையின் செயல்
களைத் தரும் அராகம் என்றும்
கலையொடு பிறந்து கருமப் பலனை உள்ள நாள்
காறும் ஈ நியதி என்றும்
காலம் என்றும் கலாதியினின்று எழும்பி இரு
கன்ம நுகர் புருடன் என்றும்
நிலைகொள் மோகினி மாயை என்றும் ஐம்கூறாக
நிகழ் சுத்த மாயை என்றும்
நிற்கு நிரல் அறிய நினை நித்தலும் நினைக்கிறேன்
நிட்டையில் உணர்த்தி அருளிச்
சிலை மதன் செயல் நணா அடியில் வைத்து ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

போக நுகர்ச்சியின் பொருட்டு ஆணவமாகிய மலத்தின் வன்மையைச் சிறிதே நீக்கி, உயிரின் கிரியா சக்தியை எழுப்புகின்ற கலை என்னும் தத்துவத்திலே தோன்றி ஞான சக்தியை எழுப்புகின்ற அருமையான தொழில் வித்தை எனவும், அவ்வாறான தொழிலை உடைய வித்தையில் தோன்றி, உயிரின் இச்சா சக்தியை எழுப்புகின்ற அராகம் எனவும், மேலே கூறிய கலையுடன் தோன்றிப் புண்ணிய பாவங்களாகிய வினைப்பயனை உயிர் வாழும்வரை ஊட்டுகின்ற நியதி எனவும், காலம் எனவும், இந்த ஐந்து தத்துவங்களினின்றும் தோன்றி, நல்வினைத் தீவினைகளின் பயனை நுகர்கின்ற புருடன் எனவும், நிலைபெற்ற மோகினி மாயை எனவும், நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை என்னும் ஐந்து பகுதியாக விளங்கும் சுத்த மாயை எனவும், விளங்கும் ஒழுங்கை உணரும் பொருட்டு எப்போதும் உன்னையே சிந்தித்துக்கொண்டு உள்ளேன். அதனை எனக்கு நிட்டையில் உணர்த்தியருளிக் கரும்பு வில்லைக் கொண்ட மன்மதன் செய்யும் தொழில் நெருங்காத உன்னுடைய திருவடிக்கீழ் அடியவனை வைத்தருளி ஆட்கொள்வாயாக.

24. சுத்தமா மாயையின் றோற்றமோ ரைந்தில்வினை
சோர்சுத்த வித்தையென்றும்
தொழிலேறி ஞானங் குறைந்ததத் துவமெனச்
சொல்லுமீச் சுவரமென்றும்
உத்தமக் கிரியையு முயர்ந்தவறி வுஞ்சதா
வொத்தவொரு தத்வமென்றும்
ஓவாத கிரியையா யுளசத்தி யென்றுமே
லுணர்வுள்ள சிவமதென்றும்
நித்திய மகாமாயை யென்னும்விந் துவிலே
நிலாவுசிவம் வருவதென்றும்
நிற்குநிர லறியநினை நித்தலு நினைக்கிறே
னிட்டையி லுணர்த்தியருளிச்

சித்திர மலர்ச்சரண வாழ்வில்வைத் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

சுத்தமா மாயையின் தோற்றம் ஓர் ஐந்தில் வினை
சோர் சுத்த வித்தை என்றும்
தொழில் ஏறி ஞானம் குறைந்த தத்துவமெனச்
சொல்லும் ஈச்சுவரம் என்றும்
உத்தமக் கிரியையும் உயர்ந்த அறிவும் சதா
ஒத்த ஒரு தத்துவம் என்றும்
ஓவாத கிரியையாய் உள சக்தி என்றும் மேல்
உணர்வுள்ள சிவம் அதென்றும்
நித்திய மகாமாயை என்னும் விந்துவிலே
நிலாவு சிவம் வருவதென்றும்
நிற்கு நிரல் அறிய நினை நித்தலும் நினைக்கிறேன்
நிட்டையில் உணர்த்தி அருளிச்
சித்திர மலர்ச்சரண வாழ்வில் வைத்து ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*தூயதுமாகிய மாமாயையின் பகுதிகளாகிய ஒப்பற்ற ஐந்தில் தொழில் குறைந்து ஞானம் ஏறியதாய் விளங்கும் 'சுத்தவித்தை' எனவும், தொழில் ஏறி ஞானங்குறைந்த தத்துவம் என்று சொல்லப்படும் 'ஈசுரம்' எனவும், நலமார்ந்த தொழிலும் மேம்பட்ட அறிவும் எப்போதும் ஒரே அளவில் விளங்கும் ஒப்பற்ற தத்துவமான 'சாதாக்கியம்' எனவும், ஒழியாத தொழிலே உடைய சத்தி ('விந்து') எனவும், எஞ்ஞான்றும் வாலறிவுடைய சிவம் ('நாதம்') எனவும், அழிவில்லாத மகாமாயை எனப்படும் விந்துவிலே எங்கும் விளங்கும் சிவம் வருவது எனவும், விளங்கும் ஒழுங்கை உணரும் பொருட்டு எப்போதும் உன்னையே சிந்தித்துக் கொண்டு உள்ளேன். அதனை*

*எனக்கு நிட்டையில் உணர்த்தியருளி அழகியமலர் ஒத்த நினது திருவடிப் பெருவாழ்வில் என்னை வைத்து ஆட்கொள்வாயாக.*

25. சுத்தமை யசுத்தசுத் தாசுத்த முதல்களிற்
றொழிலைந்து மருள்வலிகொடு
சோர்வறச் செயவருவ நான்குருவ நான்கொன்று
தொந்தமா வுளவென்றுமால்
எத்தலங் களிலுமத் தொழில்கள்செய றன்மையினி
லெங்குநிறை வாகியென்றும்
எதிராகு முன்னிலையி லிச்சைஞா னங்கிரியை
யென்னுமொரு மூன்றினென்றும்
நித்தம் படர்க்கையிற் பத்தெனப் பகர்வதொடு
நிகழைந் திடத்துமென்றும்
நிற்குநிர லறியநினை நித்தலு நினைக்கிறே
னிட்டையி லுணர்த்தியருளிச்
செத்திலடி யார்திருவில் வைத்தென்னை யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

சுத்தமை அசுத்த சுத்தாசுத்த முதல்களில்
தொழில் ஐந்து மருள் வலிகொடு
சோர்வு அறச் செய அருவ நான்கு உருவ நான்கு ஒன்று
தொந்தமா உள என்றும் ஆல்
எத்தலங்களிலும் அத் தொழில்கள் செயல் தன்மையினில்
எங்கும் நிறைவாகி என்றும்
எதிர்ஆகு முன்னிலையில் இச்சை ஞானம் கிரியை
என்னும்ஒரு மூன்றின் என்றும்
நித்தம் படர்க்கையில் பத்து எனப் பகர்வதொடு
நிகழ் ஐந்து இடத்தும் என்றும்
நிற்கு நிரல் அறிய நினை நித்தலும் நினைக்கிறேன்
நிட்டையில் உணர்த்தி அருளிச்

**செத்தில் அடியார் திருவில் வைத்து என்னை ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*"நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை" எனப்படும் ஐந்து பகுதிகளை உடைய சிவதத்துவமாகிய சுத்தமாயையும், "காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை" எனப்படும் ஏழு பகுதிகளையுடைய சுத்தா, சுத்தமாயையும், இருபத்துநான்கு பகுதிகளாக உள்ள ஆன்மதத்துவம் எனப்படும் இருளொத்த அசுத்தமாயையும் ஆகிய முதற்காரணங்கள் மூன்றிலும் 'படைப்பு, காப்பு, ஒடுக்கம், மறைப்பு, அருள்' எனப்படும் ஐந்து தொழில்களும் திருவருள் வலிக் கொண்டு இடையீடு இல்லாமல் நிகழ்த்துவதற்காக, 'சிவம், சத்தி, நாதம், விந்து' என்ற நான்கு அருவநிலைகளும், 'பிரமன், திருமால், உருத்திரன், மகேசன்' என்ற நான்கு உருவ நிலைகளும், 'சதாசிவன்' என்ற ஓர் அருவுருவ நிலையுமாக ஒன்பது நிலைகள் உள்ளன எனவும், எல்லா இடங்களிலும் ஐந்தொழில் களும் நிகழ்த்தும் இயல்பினில் எங்கும் நிறைந்துள்ளது எனவும், எதிர்ப்படும் முன்னிலையில் 'அவன், அவள், அது' எனப்படும் அறிவுள்ள உலகப்பொருள்களின் உள்ளத்தில் தங்கி இச்சை, கிரியை, ஞானசத்திகளால் உயிர்களைச் செலுத்தியும், ஞான, கன்மேந்திரியங்களால் செய்வித்தும், அறிவித்தும் வரும் அம்முச்சத்திகளாயும் எனவும், ஐம்பூதமாகி மூர்த்தங்களினின்றும் செய்தலாகிய படர்க்கையில் என்றும், 'மனம், புத்தி, சித்தம், அகங்காரம், உள்ளம், அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம்' எனப்படும் பத்தோடு ஐந்தொழில்களும் நிகழ்தற்கு இடமாகிய "பிரமன், திருமால், உருத்திரன், மகேசன், சதாசிவன்" என்ற ஐவராயும் எனவும், நீ விளங்கி*

*நிற்கும் ஒழுங்கை உணரும் பொருட்டு, எப்போதும் உன்னையே சிந்தித்துக்கொண்டு உள்ளேன். அதனை எனக்கு நிட்டையில் உணர்த்தியருளி ஒப்பில்லாத அடியவர் நடுவண் விளங்கும் செல்வத்தை எனக்கருளி ஆட்கொள்வாயாக.*

26. பற்றிடு மனாதிகர ணங்களை யெழுத்துக்கள்
பரிவொடு நடத்துமென்றும்
பலமுடை யெழுத்துக்க ளைத்தலைவ ரேதொழிற்
படநடத் திடுவரென்றும்
சொற்றவத் தலைவர்களை யிச்சைஞா னங்கிரியை
சோர்வற நடத்துமென்றும்
துகளிலம் மூன்றுமே லாதிபரை களுமரிய
துரியவரு ளின்கணென்றும்
நெற்றிமே னின்றுவெளி கண்டுளார் தெளிநூ
னிகழ்த்துசரி தப்படிக்கு
நிற்குநிர லறியநினை நித்தலு நினைக்கிறே
னிட்டையி லுணர்த்தியருளிச்
சிற்றறிஞ ரறியாத திருவில்வைத் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

பற்றிடும் அனாதி கரணங்களை எழுத்துக்கள்
பரிவொடு நடத்தும் என்றும்
பலம் உடை எழுத்துக்களைத் தலைவரே தொழில்
பட நடத்திடுவர் என்றும்
சொற்ற அத் தலைவர்களை இச்சை ஞானம் கிரியை
சோர்வு அற நடத்தும் என்றும்
துகள் இல் அம் மூன்று மேல் ஆதி பரைகளும் அரிய
துரிய அருளின் கண் என்றும்
நெற்றி மேல் நின்று வெளி கண்டு உளார் தெளி நூல்
நிகழ்த்து சரிதப்படிக்கு

**நிற்கு நிரல் அறிய நினை நித்தலும் நினைக்கிறேன்**
**நிட்டையில் உணர்த்தி அருளிச்**
**சிறுமைஅறிஞர் அறியாத திருவில் வைத்து ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*உயிர்களைப் பற்றிக் கொள்ளும் மனம் முதலிய அந்தக் கரணங்கள் நான்கு ஆகும். அவற்றில் மனத்தை 'மகாரம்' என்ற எழுத்தும், புத்தியை 'உகாரம்' என்ற எழுத்தும், சித்தத்தை 'விந்து'வும், அகங்காரத்தை 'அகாரம்' என்ற எழுத்தும் பரிவுடன் செலுத்தும் எனவும், அவ்வாறு செலுத்தும் வன்மையுடைய அந்த எழுத்துக்களை, அந்தக் கரணங்களின் அபிமான தெய்வங்களாய (மனத்துக்கு) திங்களும், (புத்திக்கு) ஞான சக்தியும், (சித்தத்துக்கு) பிரமன், திருமால், உருத்திரன் ஆகிய மூவரும், (அகங்காரத்துக்கு) பீமநாதனும் தொழிற்பட நடத்திடுவார்கள் எனவும், இங்குக்கூறிய இத்தெய்வங்களை உன்னுடைய இச்சை, ஞானம், கிரியை எனப்படும் மூன்று சக்திகளும் வழுவுறாதபடி நடத்தும் எனவும், குற்றமற்ற அந்த மூன்றுக்கும் மேம்பட்ட சத்திகளாய ஆதி, பரை ஆகியவை அருமையான தூயஅருளால் தொழிற்படுவன எனவும், நாசி நுனியின் நடுவெழுந்த தீபமான வெளியைக் கண்டுள்ள ஞானிகள் கூறும் வரலாற்று முறையின் விளங்கும் ஒழுங்கை உணரும் பொருட்டு எப்போதும் உன்னையே சிந்தித்துக்கொண்டு உள்ளேன். அதனை எனக்கு நிட்டையில் உணர்த்தியருளிச் சிற்றறிவினர் அறியாத பேற்றில் வைத்தருளி என்னை ஆட்கொள்வாயாக.*

27. ஆணவ மறைப்புள்ள விஞ்ஞான கலருளே
யணுசதா சிவரென்றுமா
அட்டவித் தேசுர ரரிப்பற்ற வேழ்கோடி
யருண்மகா மந்திரரென்றும்

மானுடைப் பிரளய கலருளீ ரெண்மர்கண்
வயங்கீ ருருத்திரரென்றும்
வண்மையுந் திண்மையு மமைந்தவுரு விற்றேசு
மல்குசத ருத்திரரென்றும்
நீணிலச் சகலருட் பிரமன்மா லாதியா
நிகமுயி ரனந்தமென்றும்
நிற்குநிர லறியநினை நித்தலு நினைக்கிறே
னிட்டையி லுணர்த்தியருளிச்
சேணமரா் பரசுநின் னடியில்வைத் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

ஆணவ மறைப்பு உள்ள விஞ்ஞான கலர் உளே
அணுசதாசிவர் என்று மா
அட்ட வித்தேசுரர் அரிப்பு அற்ற ஏழ்கோடி
அருள் மகா மந்திரர் என்றும்
மாண் உடைப் பிரளயா கலருள் ஈர் எண்மர்கள்
வயங்கு ஈர் உருத்திரர் என்றும்
வண்மையும் திண்மையும் அமைந்த உருவில் தேசு
மல்கு சத ருத்திரர் என்றும்
நீள்நிலச் சகலருள் பிரமன் மால் ஆதியா
நிகழ் உயிர் அனந்தம் என்றும்
நிற்கு நிரல் அறிய நினை நித்தலும் நினைக்கிறேன்
நிட்டையில் உணர்த்தி அருளிச்
சேண் அமரர் பரசு நின் அடியில் வைத்து ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*ஆணவம் என்ற ஒரு மல மறைப்பு உள்ள விஞ்ஞானகலர் எனப்படுவோரில் 'அணுசதாசிவர்' என்றும், பெருமை கொண்ட 'அனந்தர், சூக்குமர்,*

சிவோத்தமர், ஏகருத்திரர், சீகண்டர், ஏகநேத்திரர், திரிமூர்த்தி, சிகண்டி' எனப்படும் எண்மர், 'வித்தியேசுவரர்' என்றும், ஈசுவர தத்துவத்தில் குறைந்த பக்குவமுடைய அழிவற்ற ஏழுகோடி அருள் மகாமந்திரர் எனவும், ஆணவம், கன்மம் என்ற இரண்டு மலம் உள்ளவராய மாட்சிமை பெற்ற பிரளயாகலர் எனப்படுவோரில் 'சீகண்டர், வீரபத்திரர், பிரகிருதி, மத்தக உருத்திரர் எண்மர், கலை மத்தக உருத்திரர் எண்மர்' ஆகப் பதினெண்மர் 'உருத்திரர்' என்றும் வன்மையும், தின்மையும் அமைந்த திருமேனி கொண்ட புகழ்மிக்க 'உருத்திரர் நூற்றுவர்' எனவும், நீண்ட உலகத்தில் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களும் உள்ள சகலர் எனப்படுவோரில் 'திருமால், பிரமன் முதலாக எறும்பு, தாவரம், ஈறாக விளங்கும் உயிர்த்தொகைகள்' எண்ணற்றன எனவும், விளங்கும் ஒழுங்கை உணரும் பொருட்டு எப்போதும் உன்னையே சிந்தித்துக்கொண்டு உள்ளேன். அதனை எனக்கு நிட்டையில் உணர்த்தியருளி தெய்வலோகத்தில் உள்ளத் தேவர்கள் புகழும் நின் திருவடியின் கீழ் என்னை வைத்தருளி ஆட்கொள்வாயாக.

(**விஞ்ஞானா கலர்:** விஞ்ஞானத்தாலே கலாபந்தம் அற்றவர். அனாதியே மலபந்தம் மாத்திரமே உடையவர் எனவும், பிரளயாகலர் சகலரிலிருந்து, மாயாபந்தம், கன்மபந்தம் முழுதும் நீங்கி மலபந்தம் மாத்திரமே உடையவர் என்று இருவகைப்படுவர். இவர்கட்கு உடம்பு, கரணம், புவனபோகங்கள் உள்ளன. மாயையும், கன்மமும் இருப்பினும் அவற்றின் பந்தத்தில் மயங்காமை நோக்கி அவை இல்லை எனப்படும். இவர் ஒரு பிறப்பிலே முத்தியடைவர். இறைவன் அறிவுக்கறிவாய் இவர்கள் உள்நின்று உணர்த்தியருளுவான். **பிரளயாகலர்:** பிரளயத்திலே கலாதி தத்துவங்கள் நீங்கப்பட்டவர்.

*அனாதியே மலகன்மங்கள் மாத்திரமே உடையவர் எனவும், சகலரிலிருந்து இடையே பரிபக்குவமடைந்து மாயாபந்தம் மட்டும் நீங்கி, மலகன்ம பந்தம் உடையவர் என இருவகைப்படுவர். இறைவன் 'மான், மழு, நாற்கை, நீலகண்டம், முக்கண்' முதலிய வடிவங்களோடு வெளிப்பட்டு இவர்களுக்கு அருளுவான். **சகலர்:** கலையாதி தத்துவங்களோடு கூடினவர். இறைவன் குருவடிவாய் எழுந்தருளி இவர்களுக்கு அருளுவர். **விஞ்ஞானகலர்:** சுத்த வித்தைக்கும் அசுத்த மாயைக்கும் இடையே உள்ள புவனங்களிலும், **பிரளயாகலர்:** அசுத்த மாயை முதல் அராகம் ஈறான தத்துவங்களிலும், **சகலர்:** மூலப்பகுதி முதல் மண் ஈறான தத்துவங்களிலும் உள்ள புவனங்களிலும் இருப்பர். **பிரளயாகலருக்கு** ஆகாமிய கன்மம் ஏறுவதால் ஒரு சில பிறவிகளில் முத்தியடைவர். **சகலர்** எண்ணிறந்த பிறவி எடுத்தெடுத்து உழன்று இருவினையொப்பு நிகழ ஆட்கொள்ளப் பெறுவர்).*

28. செம்பிற் களிம்பரிசி யிற்றவிடு போலவே
செறியொரு களங்கமென்றும்
சிதைவின்மா யையினின்று சிட்டியிற் புத்தியைச்
சேர்பழங் கன்மமென்றும்
அம்பார கன்மமே சஞ்சித பிராரத்த
வாகாமி யங்களென்றும்
அதிர்த்தவிரு மலமன்றி மாயையெனு மோர்மல
மசுத்தமொடு சுத்தமென்றும்
நிம்பமுட னின்பமுஞ் செய்யாதி சத்தியென
நிகழுந் திரோதையென்றும்
நிற்குநிர லறியநினை நித்தலு நினைக்கிறே
னிட்டையி லுணர்த்தியருளிச்
சிம்புமரி யங்கழற் றிருவில்வைத் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

**செம்பில் களிம்பு அரிசியில் தவிடு போலவே**
**செறிஒரு களங்கம் என்றும்**
**சிதைவு இல் மாயையில் நின்று சிட்டியில் புத்தியைச்**
**சேர் பழம் கன்மம் என்றும்**
**அம்பார கன்மமே கஞ்சித பிராரத்த**
**ஆகாமியங்கள் என்றும்**
**அதிர்த்த இரு மலம் அன்றி மாயை எனும் ஓர் மலம்**
**அசுத்தமொடு சுத்தம் என்றும்**
**நிம்பமுடன் இன்பமும் செய் ஆதி சத்தி என**
**நிகழும் திரோதை என்றும்**
**நிற்கு நிரல் அறிய நினை நித்தலும் நினைக்கிறேன்**
**நிட்டையில் உணர்த்தி அருளிச்**
**சிம்பும் அரி அம் கழல் திருவில் வைத்து ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*“செம்பில் களிம்பும் அரிசியில் தவிடும் போல” உயிர்களை மூடியுள்ளதாகிய ஓர் அழுக்கு (ஆணவமலம்) எனவும், அழிவில்லாத மாயையிலிருந்து உண்டாகும் படைப்பில் புத்தியைச் சென்று அடைகின்ற ‘பழங்கன்மம்’ எனவும், மேலும், மேலும் குவிந்து கொண்டே வரும் அந்தக் கன்மமே, சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என்று மூன்று வினைகளாகப் பேசப்படும் எனவும் இப்போது கூறிய ஆணவம், கன்மம் என்னும் இரண்டு மலங்களேயன்றி மூன்றாவது மலமாக உள்ள மாயை எனப்படும் ஒரு மலமானது சுத்தமாயை அசுத்தமாயை என்று இரண்டு வகைப்படும் எனவும், உயிர்கள் செய்த புண்ணிய பாவங்களுக்கு ஒப்ப உயிர்களுக்கு இன்ப துன்பங்களை ஊட்டும் ஆதி சத்தியென்று சொல்லப்படும் திரோதை எனவும் விளங்கும் ஒழுங்கை உணரும் பொருட்டு எப்போதும் உன்னையே சிந்தித்துக் கொண்டு*

*உள்ளேன். அதனை எனக்கு நிட்டையில் உணர்த்தியருளி ஒலிக்கின்ற பரல்கள் உள்ள அழகிய கழல் அணிந்த உன் திருவடிப் பேற்றில் என்னை வைத்து ஆட்கொள்வாயாக.*

*(**சஞ்சிதம்:** என்பது பழவினை: **பிராரத்தம்:** என்பது ஊழ். அஃதாவது சஞ்சிதம் என்னும் களஞ்சியத் தானியத்தில் புசிப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட ஒரு சிறுபகுதி. **ஆகாமியம்:** என்பது பிராரத்தத்தைப் புசிக்கும்போதே அதன் விளைவாகச் செய்து ஈட்டப்படும் வினை. இருவினைப் பயனாய் நிற்கும் சஞ்சிதத்தைச் 'சூக்கும கன்மம்' என்றும், புண்ணிய பாவங்கட்குப் பலனாக வரும் இன்பமும் துன்பமுமாம் பிராரத்தத்தை 'அதிசூக்கும கன்மம்' என்றும் இருவினையாகிய ஆகாமியத்தைத் 'தூல கன்மம்' என்றும் கூறுவர்).*

29. கிஞ்சிஞ்ஞ னொன்றினுங் கூடா திருப்பதே
 கேவல வவத்தையென்றும்
 கிளர்தத்து வங்களோ டேகூடி நிற்பதே
 கேடற்ற சகலமென்றும்
 துஞ்சாது துஞ்சியச் சகலகே வலமற்ற
 துறையண்ணல் சுத்தமென்றும்
 சுத்தவருள் கொடுதனைக் கண்டபிற கருளிலே
 தோய்தல்பரை போகமென்றும்
 நெஞ்சற்ற வறிவாகி யருளினுட் பொருளண்ண
 னிலையென்று நூல்கள்சொலுமா
 நிற்குநிர லறியநினை நித்தலு நினைக்கிறே
 னிட்டையி லுணர்த்தியருளிச்
 செஞ்சரண மலர்களுக் கடிமையா வாளரோ
 தித்திக்கு முத்திமுதலே
 தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
 சிவசுப்பிர மணியதேவே.

**கிஞ்சிஞ்ஞன் ஒன்றினும் கூடாது இருப்பதே**
**கேவல அவத்தை என்றும்**
**கிளர் தத்துவங்களோடே கூடி நிற்பதே**
**கேடற்ற சகலம் என்றும்**
**துஞ்சாது துஞ்சி அச் சகல கேவலம் அற்ற**
**துறை அண்ணல் சுத்தம் என்றும்**
**சுத்த அருள் கொடு தனைக் கண்ட பிறகு அருளிலே**
**தோய்தல் பரை போகம் என்றும்**
**நெஞ்சற்ற அறிவாகி அருளினுள் பொருள் அண்ணல்**
**நிலை என்று நூல்கள் சொலுமா**
**நிற்கு நிரல் அறிய நினை நித்தலும் நினைக்கிறேன்**
**நிட்டையில் உணர்த்தி அருளிச்**
**செம்சரண மலர்களுக்கு அடிமையா ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*சிற்றறிவு உடைய உயிர் ஆணவமலமொன்று கூடி ஏனையவற்றோடு கூடாது. (அறிவுகெட்ட மயக்கம் சேர்ந்த மூலதார நித்திரை மூர்ச்சையோடு அழுந்தி) இருப்பதே 'கேவலாவத்தை' ஆகும் எனவும், அருளால் நடத்தப் படுகின்ற ஒளிவடிவகலா தத்துவங்களோடு கூடி ஆணவம் தனது காரணம் கெடாமே காரியத்தில் (சாக்கிர சொப்பனங்களில்) சிறிது நீங்கி நிற்கும் நிலையே 'சகலாவத்தை' ஆகும் எனவும், விழிப்பிலும் உறக்கத்திலும் சேராது நடுநிகழ் நிட்டையே அந்தச் சகலம், கேவலம் ஆகிய அவத்தைகள் அற்ற துறையை அடைதலாகிய 'சுத்தாவத்தை' ஆகும் எனவும், தூயதான அருளின் துணைகொண்டு தன்னைத்தான் அறிந்து கொண்ட பின்னர் (ஞானக்கண்ணுக்குப் புலப்பட்டு நிற்கும் திருவருட்காட்சியாகிய முத்திச்சகலம் நீங்கிய அளவிலே) அந்நிலைக்களத்தே தோன்றும் (அருளிலே அழுந்தி நிற்பதாகிய) முத்திக்கேவல நிலையாகிய*

*'பரையோகம்' எனவும், மனம் அழிந்த அறிவாகி (முத்திச் சகலம் முத்திக் கேவலம் என்னும் இரண்டு அவத்தைகளையும் கடந்து) அருளின் உட்பொருளாகிய சுகாதீத பரிசுத்தம் அடைதல் 'சுத்ததாத்துவித சிவானுபவ நிலை' எனவும், விளங்கும் ஒழுங்கை உணரும் பொருட்டு எப்போதும் உன்னையே சிந்தித்துக் கொண்டு உள்ளேன். அதனை எனக்கு நிட்டையில் உணர்த்தியருளி நினது சிவந்த திருவடி மலர்களுக்கு அடியவனாக ஏற்று என்னை ஆட்கொள்வாயாக.*

30. பூதமுத னாதம்வரை யாறா றெனுஞ்சடப்
பொருளுக் கதீதமென்றும்
போக்கொடு வரத்துமில் லாதவொரு பூரணப்
பொருளாக வுள்ளதென்றும்
சீதமொடு தாபமும் பகைமையொடு கேண்மையுந்
திரிபுலைவு மற்றதென்றும்
சிறுமையொடு பெருமையுஞ் சிந்தைநிர்ச் சிந்தையுஞ்
செயிருமில் யதார்த்தமென்றும்
நீதமறை யெல்லா மிழற்றுவது போலறிவு
நிபுணருஞ் சொல்வரதிலே
நிற்குநிர லறியநினை நித்தலு நினைக்கிறே
னிட்டையி லுணர்த்தியருளிச்
சீதவா ரிசவடித் திருவில்வைத் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

பூதம் முதல் நாதம் வரை ஆறு ஆறு எனும் சடப்
பொருளுக்கு அதீதம் என்றும்
போக்கொடு வரத்தும் இல்லாத ஒரு பூரணப்
பொருளாக உள்ளது என்றும்
சீதமொடு தாபமும் பகைமையொடு கேண்மையும்
திரிபும் உலைவும் அற்றது என்றும்

**சிறுமையொடு பெருமையும் சிந்தை நிர்ச்சிந்தையும்**
**செயிரும் இல் யதார்த்தம் என்றும்**
**நீதமறை எல்லாம் மிழற்றுவது போல் அறிவு**
**நிபுணரும் சொல்வர் அதிலே**
**நிற்கு நிரல் அறிய நினை நித்தலும் நினைக்கிறேன்**
**நிட்டையில் உணர்த்தி அருளிச்**
**சீத வாரிச அடித் திருவில் வைத்து ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*ஐந்து பூதங்கள் முதல் நாதம் வரையிலும் கூறப்படும் முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து உள்ளப் பொருள் எனவும், பிறப்பு, இறப்பு என்பவை இல்லாத ஒப்பற்ற பொருளாக உள்ளது எனவும், தட்பம், வெப்பம், பகை, நட்பு, மாற்றம், அழிவு ஆகியவை இல்லாதது எனவும், சிறுமை, பெறுமை, சிந்தை, சிந்தையின்மை, குற்றம் ஆகியவை இல்லாத உண்மைப் (சத்து) பொருள் எனவும், ஒழுக்கம் நிறைந்த வேதங்கள் யாவும் கூறுவது போன்றே ஞானிகளும் கூறுவர். அந்த நிலையிலே விளங்கும் ஒழுங்கை உணரும் பொருட்டு எப்போதும் உன்னையே சிந்தித்துக் கொண்டு உள்ளேன். அதனை எனக்கு நிட்டையில் உணர்த்தியருளிக் குளிர்ந்த தாமரை ஒத்த நினது திருவடிப்பேற்றில் என்னை வைத்தருளி ஆட்கொள்வாயாக.*

*(கீழ்வரும் 31ஆம் பாடல் முதல் 50ஆம் பாடல் வரையிலும் ஸ்ரீமத் சுவாமிகள் தம்மைப் பல குற்றங்களுக்கு உறைவிடமாகக் கூறிக்கொள்ளுகிறார்கள். அதுகொண்டு அவர் அந்தக் குற்றங்களைப் புரிந்தவர் என்று கொள்ளக்கூடாது. உலகத்தில் உள்ள பலதிற மக்கள் புரியும் குற்றங்களைத் தம்மேல் சார்த்தி உரைத்துக் கொண்டார் என்று கொள்க.)*

*இது பற்றி ஸ்ரீமத் சுவாமிகள் கூறுவது பின்வருமாறு:-*

*"31 முதல் 50 வரையுள்ள இருபது பாட்டுக்களிலும் கூறப்பட்ட குற்றங்கள் பலவுள், இந்நூல் பாடவந்த பிறப்பில் நூலாசிரியர் சில செய்து, பல செய்யாது இருப்பினும், செய்யாத பலவற்றை முன்னைய பிறப்புக்களில் செய்திருக்கலாம் எனும் அனுமானத் தாபனமாகவும், குயின்ற குற்றங்களைப் பிறரும் அறிந்து செய்தலொழிந்து நன்னெறியில் நடக்க அறிவுறுத்தொரு நற்போதமாகவும், மேலைப்பாடல்களில் அவைகளை விளக்கியருளினர் என இங்ஙனம் பொருள்கோடல் வேண்டும். 'ஆனந்தமுகில்' எனும் பத்தில் ஐயவினாவாக வரும் ஒகாரங்களும் இவ் அனுமானத் தாபனத்தை உறுதிப்படுத்தும். பேய்களைத் தொழுங் குற்றமில்லா நூலர் அதனையும் கூறிக்கொண்டனரே. இன்னன பற்பல)."*

31. காசாசை கொண்டே கலங்குகிற தோஷிநற்
கல்விகல் லாததோஷி
கற்றோர் களைக்கண்டு பணியாத தோஷிகெடு
கயவருற வுற்றதோஷி
ஆசார மொருசிறிது மில்லாத தோஷிமண்
ணாசையே கொண்டதோஷி
ஆசானை நிந்தித்த தோஷியரை நிமிடமு
மறத்தைநினை யாததோஷி
பேசாத பேச்சினைப் பேசிடுந் தோஷிவசை
பேசப் பிறந்ததோஷி
பீடுடைய வீடுபெற வுள்கினே னெந்தைநின்
பெரியதிரு வுளமகிழ்ந்து
தேசோ மயானந்த வாழ்வுதந் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

**காசு ஆசை கொண்டே கலங்குகிற தோஷி நல்**
**கல்வி கல்லாத தோஷி**
**கற்றோர்களைக் கண்டு பணியாத தோஷி கெடு**
**கயவர் உறவு உற்ற தோஷி**
**ஆசாரம் ஒரு சிறிதும் இல்லாத தோஷிமண்**
**ஆசையே கொண்ட தோஷி**
**ஆசானை நிந்தித்த தோஷி அரைநிமிடமும்**
**அறத்தை நினையாத தோஷி**
**பேசாத பேச்சினைப் பேசிடும் தோஷி வசை**
**பேசப் பிறந்த தோஷி**
**பீடு உடைய வீடுபெற உள்கினேன் எந்தை நின்**
**பெரிய திரு உள மகிழ்ந்து**
**தேசோ மய ஆனந்த வாழ்வு தந்து ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*நான் பணத்தாசை பிடித்து பணம் எவ்வளவு குவிந்தாலும் மன நிறைவு கொள்ளாமல் மேலும் குவியும் வழியைத் தேடிக் கலங்குகின்ற குற்றம் உடையவன். மெய்ப்பொருள் உணர்த்தும் நல்ல கல்வி கல்லாத குற்றம் உடையவன். அக்கல்வியுடைய பெரியோர்களைக் கண்டு பணியாத குற்றம் உடையவன். தீயநெறி சேரும் கயவர்களுடை உறவைக்கொண்ட குற்றம் உடையவன் நல்லொழுக்கம் என்பது ஒரு சிறிதேனும் இல்லாத குற்றம் உடையவன். மண்ணாசை கொண்ட குற்றம் உடையவன். குருவைப் பழித்த குற்றம் உடையவன். அரை நிமிடமேனும் அறநெறியை நினையாத குற்றம் உடையவன். பேசத்தகாத சொற்களைப் பேசும் குற்றம் உடையவன். பழிச்சொற்களைப் பேசுவதற்கு என்றே பிறந்த குற்றம் உடையவன். (இத்துணைக் குற்றங்களுக்கும் கொள்கலமாய் இருக்கும்) அடியவனும் பெருமையுடைய வீட்டுப்பேற்றை*

*பெறுவதற்கு எண்ணுகின்றேன். என் தந்தையாகிய நீ (எத்துணைப் பெருங்குற்றங்களையும் பொறுத்தருளும் அருள் நிரம்பிய) நினது பெரிய திருவுள்ளம் மகிழ்ச்சியுற்று ஒளிமயமான பேரின்ப வாழ்வைத் தந்தருளி ஆட்கொள்வாயாக.*

32. எல்லா மறிந்தவ ரெனைப்போல வுலகின்மிசை
 யெவரென் றறைந்ததோஷி
 எந்நேர முங்குடும் பக்கவலை கொண்டங்கு
 மிங்குமலை கின்றதோஷி
 உல்லாச வீணர்கதை சொல்லியதி லேகட்
 டுரைத்துச் சிரித்ததோஷி
 ஊனுடலை வலியகற் கோட்டையா வெண்ணிநல்
 லுணர்வற்று நின்றதோஷி
 நல்லார்கள் பொல்லார்க ளெல்லார்கள் பாலும்வெறி
 நாய்போல் விழுந்ததோஷி
 நல்லவழி கூடும் படிக்குள்கி னேனிந்த
 ஞாலத் துயர்க்கடற்குள்
 செல்லா திழுத்தணைத் தன்பினா லாளரோ
 தித்திக்கு முத்திமுதலே
 தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
 சிவசுப்பிர மணியதேவே.

எல்லாம் அறிந்தவர் எனைப் போல உலகின் மிசை
 எவர்என்று அறைந்த தோஷி
 எந்நேரமும் குடும்பக் கவலை கொண்டு அங்கும்
 இங்கும் அலைகின்ற தோஷி
உல்லாச வீணர்கதை சொல்லி அதிலே
 கட்டுரைத்துச் சிரித்த தோஷி
 ஊன் உடலை வலிய கல் கோட்டையா எண்ணி நல்
 உணர்வற்று நின்ற தோஷி
நல்லார்கள் பொல்லார்கள் எல்லார்கள்பாலும் வெறி
 நாய்போல் விழுந்த தோஷி

**நல்ல வழி கூடும்படிக்கு உள்கினேன் இந்த**
**ஞாலத்துயர் கடற்குள்**
**செல்லாது இழுத்து அணைத்து அன்பினால் ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*எல்லாம் அறிந்தவர் என்னைப்போல இந்த உலகத்தில் வேறுயார் உளர் என்று கூறிச் செருக்கிய குற்றம் உடையவன். காலமெல்லாம் குடும்பக்கவலைக் கொண்டு இங்குமங்கும் அலைந்து திரியும் குற்றம் உடையவன். சிற்றின்ப வேட்கையே கொண்ட வீணர்களின் கதைகளைச் சொல்லி அதில் என் கற்பனைகளையும் கூறிச்சிரித்த குற்றம் உடையவன். ஊன் நிரம்பிய இந்த உடலை அழிவற்ற வலிமை கொண்ட கற்கோட்டையாகக் கருதி நல்ல அறிவு அற்ற குற்றம் உடையவன். நல்லவர்கள், கெட்டவர்கள் ஆகியோர் எல்லாரிடத்திலும் வெறிநாய்போல் விழுந்த குற்றம் உடையவன். (இத்துணைக் குற்றங்களுக்கும் கொள்கலமாயிருக்கும்) அடியவனும் ஞானநெறியாகிய நல்லவழியைக் கூடும்படிக்கு எண்ணுகின்றேன். துயரமே நிறைந்த இந்த உலகமாகிய கடலினுள் ஆழாமல் என்னைப் பேரின்பக்கரைக்கு இழுத்து உன்னோடு சேர்த்து எல்லையற்ற நின் அருளினால் என்னை ஆட்கொள் வாயாக.*

33. வஞ்சிநிக ருக்கமட மங்கையர்க ளின்பமே
மாவின்ப மென்றதோஷி
வாய்க்குருசி யாகப் புசிப்பதே பேரின்ப
வாழ்வென நினைத்ததோஷி
கஞ்சுளி யணிந்துடற் கண்டைமடி புனைவதே
கண்டபல னென்றதோஷி
கந்தகத் தூரிபரி மளவத்தர் திமிர்வதே
கைகண்ட தென்றதோஷி

அஞ்சலின் றிவ்வுலக வுத்தியி லிருப்பதே
யரியபே றென்றதோஷி
அகடவிக டம்புரிந் துய்வதே யென்றைக்கு
மானந்த மென்றதோஷி
செஞ்சரண மடையவென வுள்கினே னாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

வஞ்சி நிகர்உக்கமட மங்கையர்கள் இன்பமே
மா இன்பம் என்ற தோஷி
வாய்க்கு ருசியாகப் புசிப்பதே பேரின்ப
வாழ்வு என நினைத்த தோஷி
கஞ்சுளி அணிந்து உடற் கண்டை மடி புனைவதே
கண்ட பலன் என்ற தோஷி
கந்தகத் தூரி பரிமள அத்தர் திமிர்வதே
கை கண்டது என்ற தோஷி
அஞ்சல் இன்று இவ்வுலக உத்தியில் இருப்பதே
அரிய பேறு என்ற தோஷி
அகடவிகடம் புரிந்து உய்வதே என்றைக்கும்
ஆனந்தம் என்ற தோஷி
செஞ்சரணம் அடைய என உள்கினேன் ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*கொடி போன்ற இடையைக்கொண்ட இளம் பெண்களின் கூட்டத்தில் பெறும் இன்பமே பேரின்பம் ஆகும் என்ற குற்றம் உடையவன். வாய்க்கு ருசியாகச் சாப்பிடுவதே பேரின்ப வாழ்வு என்று எண்ணிய குற்றம் உடையவன். உடலில் சட்டையும் அரையில் ஆடையும் அணிந்து மேலாடையோடு இருப்பதே இந்தப்பிறவியில் கண்ட பலன் என்ற குற்றம் உடையவன். வாசனையுள்ள கத்தூரி, நறுமணம் தரும் அத்தர் ஆகியவற்றைப்*

*பூசிக்கொள்வதே பிறவியின்கை கண்ட பலன் என்ற குற்றம் உடையவன். தீவினைகளுக்கு அஞ்சாமல் உலகத்தின் போக்குக்கு இணங்கியிருப்பதே அரியபேறு ஆகும் என்ற குற்றம் உடையவன். அகடவிகடங்கள் பண்ணி வாழ்வதே எப்போதும் இன்பமானது என்ற குற்றம் உடையவன். (இத்துணைக் குற்றங்களுக்கும் கொள்கலமாய் இருக்கும்) அடியவனும் நினது சிவந்த திருவடிகளையடைவதற்கு எண்ணுகின்றேன். அருட் கடலாகிய நீ என்னை ஆட்கொள்வாயாக.*

34. பொருவற்ற தெய்வமெனல் பொய்யென்ற தோஷியறி
பூதமெய் யென்றதோஷி
புரிவினைப் பிறவியெனல் பொய்யென்ற தோஷியுயிர்
புதிதுமெய் யென்றதோஷி
மருளிலா வறிவுநெறி பொய்யென்ற தோஷிசக
மார்க்கமெய் யென்றதோஷி
மங்காத முத்தியெனல் பொய்யென்ற தோஷியுயிர்
மாய்தன்மெய் யென்றதோஷி
துரியரது வேதகலை பொய்யென்ற தோஷியென்
சொற்கண்மெய் யென்றதோஷி
தோன்றியழி கின்றநிலை மேலறிய வென்றே
தொடர்ந்தே னயர்ந்தவினைகள்
திருவருளி னாலிரிய வன்புசெய் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

பொருவு அற்ற தெய்வம் எனல் பொய் என்ற தோஷி அறி
பூதம் மெய் என்ற தோஷி
புரிவினைப் பிறவி எனல் பொய் என்ற தோஷி உயிர்
புதிது மெய் என்ற தோஷி
மருள் இலா அறிவு நெறி பொய் என்ற தோஷி சக
மார்க்கம் மெய் என்ற தோஷி

**மங்காத முத்தி எனல் பொய் என்ற தோஷி உயிர்**
**மாய்தல் மெய் என்ற தோஷி**
**துரியரது வேதகலை பொய் என்ற தோஷி என்**
**சொற்கள் மெய் என்ற தோஷி**
**தோன்றி அழிகின்ற நிலை மேல் அறிய என்றே**
**தொடர்ந்தேன் அயர்ந்த வினைகள்**
**திருவருளினால் இரிய அன்பு செய்து ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*ஒப்பின்றி விளங்கும் தெய்வம் ஒன்று உண்டு என்பது பொய் என்ற குற்றம் உடையவன். நம் கண்களுக்குத் தெரிகின்ற ஐம்பூதங்களே (மண், நீர், நெருப்பு, காற்று, வெளி) உண்மை என்ற குற்றம் உடையவன். நாம் செய்த வினையின் பயனாகவே பிறவி உண்டாகிறது என்பதை பொய் என்ற குற்றம் உடையவன். ஐம்பூதச் சேர்க்கையால் உயிர் புதியதாக உண்டானது என்பதை உண்மை என்ற குற்றம் உடையவன். மயக்கம் அற்ற ஞானநெறி ஒன்று இருப்பதாகக் கூறுவது பொய் என்ற குற்றம் உடையவன். உலகநடையே உண்மை என்ற குற்றம் உடையவன். அழியாத வீட்டுப்பேறு என்பது கட்டுக்கதை என்ற குற்றம் உடையவன். உயிர் அழிந்துபடும் என்பதை உண்மை என்ற குற்றம் உடையவன். உலக நிலை கடந்த ஞானிகள் அருளிய வேத கலைகள் யாவும் பொய், புரட்டுக்களே என்ற குற்றம் உடையவன். நான் கூறுவனவே உண்மை என்ற குற்றம் உடையவன். (இத்துணைக் குற்றங்களுக்கும் கொள்கலமாய் இருக்கும் அடியவனும்) உலகும், உயிர்களும் தோன்றி அழிகின்ற நிலையினைக் கடந்துள்ள உண்மையை உணரும்படி உன்னைத் தொடர்ந்து நிற்கின்றேன். நான் இதுகாறும் செய்துள்ள வினைகள் யாவும் உனது திருவருளால் ஒழிந்துபடும்படி அன்புசெய்து என்னை ஆட்கொள்வாயாக.*

35. வேதாக மங்களல் லாதபுன் கதைகளை
விரும்பிப் படித்ததோஷி
வேசையர்க ளாசைகொண் டாசையை யழித்துள்ள
வெட்கமுங் கெட்டதோஷி
மாதரர் மிதுனித்த மார்க்கவகை சொலிவீணர்
மகிழ்கான் மகிழ்ந்ததோஷி
வாசமலர் கொண்டையிற் சூடித் தெருத்தோறு
மதிகெட் டலைந்ததோஷி
கோதுறுங் குத்திரம் புரிவோ ரெவர்க்குமொரு
குருவா யிருந்ததோஷி
குறைவற்ற கைவல்லிய முறவுள்கி னேனெண்
குணம்பெருகு பரதெய்வமே
தீதெலா மோட்டிவழி காட்டியெனை யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

வேத ஆகமங்கள் அல்லாத புன் கதைகளை
விரும்பிப் படித்த தோஷி
வேசையர்கள் ஆசை கொண்டு ஆசையை அழித்து உள்ள
வெட்கமும் கெட்ட தோஷி
மாதரார் மீதுனித்த மார்க்க வகை சொலி வீணர்
மகிழ்கான் மகிழ்ந்த தோஷி
வாசமலர் கொண்டையில் சூடித் தெருத்தோறும்
மதிகெட்டு அலைந்த தோஷி
கோது உறும் குத்திரம் புரிவோர் எவர்க்கும் ஒரு
குருவாய் இருந்த தோஷி
குறைவு அற்ற கைவல்லியம் உற உள்கினேன் எண்
குணம்பெருகு பர தெய்வமே
தீதுஎலாம் ஒட்டி வழி காட்டி எனை ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*வேதம், ஆகமம் முதலிய ஞான நூல்களை விடுத்து இழிவு தரும் கதைகளை விரும்பிப்படித்த குற்றம் உடையவன். விலைமாதர்பால் வேட்கைக்கொண்டு பொருளை அழித்து உயிருக்கு உரியதாகிய நாணத்தையும் அழித்த குற்றம் உடையவன். பெண்களைப் புணர்ந்த வகைகளை எல்லாம் கூறி வீணர்கள் களித்தபோது நானும் நாணாமல் களித்த குற்றம் உடையவன். மணம் நிறைந்த மலர்களைத் தலையில் அணிந்து தெருக்கள் தோறும் அறிவுகெட்டு அலைந்த குற்றம் உடையவன். குற்றத்தைக் கூட்டும் வஞ்சகம் செய்வோர் யாவருக்கும் ஒப்பற்ற குருவாயிருந்த குற்றம் உடையவன். (இத்துணைக் குற்றங்களுக்கும் கொள்கலமாய் இருக்கும் அடியவனும்) குறைவற்ற வீட்டுப்பேறு பெற எண்ணுகின்றேன். "பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, முற்றும் உணர்தல், வரம்பில் இன்பம் உடைமை, தூய உடம்பினன் ஆதல், தன்வயத்தன் ஆதல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், இயற்கை உணர்வினன் ஆதல்" எனப்படும் எட்டுக்குணங்களும் பெருகும் பெரிய கடவுளே! என் தீங்குகளையெல்லாம் போக்கி உன்னை அடைவதற்கு உரிய வழிகாட்டி என்னை ஆட்கொள்வாயாக.*

36. வையத்து மாந்தரை யடக்கிநாம் வாழவென
மந்திரங் கற்றதோஷி
மதிளேறி யுட்குதித் தொருவரறி யாதுகர
வடமிக விழைத்ததோஷி
ஐயோ வெனாவலற வகதிக ளகம்புக்
கதட்டிப் பறித்ததோஷி
ஆருக்கு மஞ்சாத மிண்டனா கத்திரிந்
தறிவழகு கெட்டதோஷி
பொய்யிற் பிழைக்குநர்கள் செய்கைக் கிணங்கியே
புகழ்சிறிது மற்றதோஷி

பூரணா னந்தநிலை யுறவுள்கி னேனினிப்
பொய்யாத குற்றேவறான்
செய்யும் படிக்குநனி செய்தென்று மாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

வையத்து மாந்தரை அடக்கி நாம் வாழ என
மந்திரம் கற்ற தோஷி
மதில் ஏறி உள்குதித்து ஒருவர் அறியாது கர
வடமிக இழைத்த தோஷி
ஐயோ எனா அலற அகதிகள் அகம் புக்கு
அதட்டிப் பறித்த தோஷி
ஆருக்கும் அஞ்சாத மிண்டனாகத் திரிந்து
அறிவு அழகு கெட்ட தோஷி
பொய்யில் பிழைக்குநர்கள் செய்கைக்கு இணங்கியே
புகழ் சிறிதும் அற்ற தோஷி
பூரண ஆனந்த நிலையுற உள்கினேன் இனிப்
பொய்யாத குற்றேவல் தான்
செய்யும் படிக்கு நனி செய்து என்றும் ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*இந்த உலகத்தில் உள்ள மக்கள் எல்லாம் நம்கீழ் அடங்கி நடக்கும்படி செய்து அதனால் நாம் நல்வாழ்வு பெற வேண்டுமென்று எண்ணி மந்திரங்கள் கற்ற குற்றம் உடையவன். பிறர் வீட்டுச் சுவர் ஏறி உள்ளே குதித்து யாரும் அறியாதபடி பல களவுகள் செய்த குற்றம் உடையவன். திக்கற்றவர்கள் 'ஐயோ!' என்று அலறும்படி அவர்கள் வீட்டினுள் புகுந்து அவர்களை அதட்டிப் பொருள் பறித்த குற்றம் உடையவன். ஒருவருக்கும் அஞ்சாத மிண்டனாகத்திரிந்து அறிவும், அழகுங்கெட்ட*

*குற்றம் உடையவன். பொய்பேசியே பிழைப்பவர்களின் செயலுக்கு உடந்தையாயிருந்து சிறிதும் புகழ் பெறாத குற்றம் உடையவன். (இத்துணைக் குற்றங்களுக்கும் கொள்கலமாய் இருக்கும் அடியவனும்) பூரணமான இன்பநிலையை அடைய எண்ணுகின்றேன். இனி உன் திருவடிக்கே எப்போதும் பொய்படாத திருப்பணிச் செய்யும்படி நன்குபண்ணி என்னை ஆட்கொள்வாயாக.*

37. பேய்களைப் பூசைசெய் ததுவிதுசெய் வேனென்று
பேசித் திரிந்ததோஷி
பெரியோர்க ணூனீதி சொல்லியிற் புலியினது
பெற்றியே கொண்டதோஷி
வாய்மதம் பேசியா காவல் லிடும்பரோடு
வழிநடந் திட்டதோஷி
வாங்கிய கடன்கொடா மல்வழக் கிட்டதனை
வாங்கவிலை யென்றதோஷி
தாய்தந்தை முதலியோர் தமையிகழ்ந் தொழியாத
சஞ்சலங் கொண்டதோஷி
தருமத்தை விற்றுண்ட தோஷிநா னாகலிற்
றகவுடைய வருள்பெருக்கிச்
சேயென வணைத்தா தரித்தருளி யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

பேய்களைப் பூசை செய்து அது இது செய்வேன் என்று
பேசித் திரிந்த தோஷி
பெரியோர்கள் நூல் நீதி சொல்லிஇல் புலியினது
பெற்றியே கொண்ட தோஷி
வாய் மதம் பேசி ஆகா வல் இடும்பரோடு
வழி நடந்திட்ட தோஷி
வாங்கிய கடன் கொடாமல் வழக்கிட்டு அதனை
வாங்கவிலை என்ற தோஷி

**தாய் தந்தை முதலியோர் தமை இகழ்ந்து ஒழியாத**
**சஞ்சலம் கொண்ட தோஷி**
**தருமத்தை விற்று உண்ட தோஷி நான் ஆகலில்**
**தகவுடைய அருள் பெருக்கிச்**
**சேய் என அணைத்து ஆதரித்து அருளி ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*பேய், முனி முதலிய தீய சிறு தேவதைகளை வழிபட்டு 'அப்படிச் செய்து விடுவேன். இப்படிச் செய்து விடுவேன்' என்று அஞ்சும்படி பேசித் திரிந்த குற்றம் உடையவன். நூல்கள் கூறும் நீதிகளைப் பெரியோர்கள் எடுத்துக் கூறினால் அது கேட்டுப் புலிபோலச் சீறி, உறுமிய குற்றம் உடையவன். வாய்க்கொழுப்புப் பேசித் தீய இடும்பர்கள் வழியில் நடந்திட்ட குற்றம் உடையவன். வாங்கிய கடனைத் திருப்பித்தராமல் வழக்குப்பேசி 'நான் கடன் வாங்கவே இல்லை' என்ற குற்றம் உடையவன். தாய் தந்தையரை இகழ்ந்து தீராதக் கவலை கொண்ட குற்றம் உடையவன். அறச்சொத்தை விற்று ஏப்பம் விட்ட குற்றம் உடையவன். இத்தனைக் குற்றங்களுக்கும் கொள்கலம் ஆகியவன் நான். எனவே, (நான் உய்யும்படி நீ உனது திருவுளங்கொண்டு என் குற்றங்களை ஒழியும்படி செய்). தகைமை பொருந்திய உனது அருள் என்பால் பெருகச் செய்து, நின்மகன் என்று அணைத்து ஆதரித்தருளி என்னை ஆட்கொள்வாயாக.*

38. நன்னெறியி னின்றுபணி கின்றவடி யார்சொத்தை
நட்டமது செய்ததோஷி
நாடோறு நாய்போ லலைந்துபொரு ளாசையா
னாளைக் கழித்ததோஷி
தன்னிலைமை தனைநினைந் தெந்நேர முந்திவ்விய
சஞ்சல மிலாததோஷி

தவமிழைப் போர்களை யிழைக்க வொட்டாமற்
றடுத்துமகிழ் வுற்றதோஷி
கன்னியர் குழுக்கண்டு கைவீசி நடைதந்து
காதலொடு சென்றதோஷி
கருணைவிண் ணானந்த முறவுள்கி னேனினது
கழன்முண்ட கத்தையெனது
சென்னியிற் சூட்டுவித் தடிமைகொண் டாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

நன் நெறியில் நின்று பணிகின்ற அடியார் சொத்தை
நட்டம் அது செய்த தோஷி
நாள்தோறும் நாய்போல் அலைந்த பொருள் ஆசையால்
நாளைக் கழித்த தோஷி
தன் நிலைமைதனை நினைந்து எந்நேரமும் திவ்விய
சஞ்சலம் இலாத தோஷி
தவம் இழைப் போர்களை இழைக்க ஒட்டாமல்
தடுத்து மகிழ்வுஉற்ற தோஷி
கன்னியர் குழுக்கண்டு கைவீசி நடை தந்து
காதலொடு சென்ற தோஷி
கருணை வீண் ஆனந்தம் உற உள்கினேன் நினது
கழல் முண்டகத்தை எனது
சென்னியில் சூட்டுவித்து அடிமை கொண்டு ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*நன்னெறியில் ஒழுகி உன்னை வழிபடுகின்ற அடியவர் சொத்துக்குக் கேடு வரும்படி செய்த குற்றம் உடையவன். பொருளாசை கொண்டு நாள்தோறும் கண்ட இடமெல்லாம் நாய்போல அலைந்து வாழ்நாளை வீண்நாளாக்கிய குற்றம் உடையவன். இவ்உலகத்து உடல்*

*வாழ்வினை எண்ணிப் பார்ப்பதேயல்லாமல், உயிராகிய தன் நிலைமையை எண்ணி எந்த நேரத்திலும் தெய்வ அருள் பற்றியே கவலைப்படாத குற்றம் உடையவன். தவம் செய்பவர்களைத் தவம் செய்யவொட்டாமல் இடர் செய்து தடுத்து மகிழ்ச்சி கொண்ட குற்றம் உடையவன். கன்னிப்பெண்கள் கூட்டத்தைப் பார்த்து அவர்கள் காணும்படி பெருமிதத்துடன் இரண்டு கைகளையும் வீசி காமக்குறிப்போடு நடந்துசென்ற குற்றம் உடையவன். (இத்துணைக் குற்றங்களுக்கும் கொள்கலமாயிருக்கும் அடியவனும்) அருள்வெளியில் நிறைந்துள்ள இன்பத்தைப் பெற எண்ணுகின்றேன். உனது திருவடித் தாமரைகளை என் தலையில் சூட்டி அடிமையாக என்னை ஏற்றுக்கொண்டு ஆட்கொள்வாயாக.*

39. எங்கண்மத முங்கண்மத மென்றுபல திறவாத
மிட்டறிவை விட்டதோஷி
இதுதெய்வ மதுதெய்வ மென்றுநிலை கொள்ளாம
லீடழிந் திட்டதோஷி
கொங்கைநிமிர் மங்கையரை யுற்றுற்று நோக்கிவிழி
குருடுட் டுள்ளதோஷி
குடிகார ரோடுகட் கூடிக் குடித்துக்
குலாவித் திரிந்ததோஷி
கங்குல்பக லுள்ளீ ர மின்றியுயிர் வதைசெய்து
கறிசமைத் துண்டதோஷி
காவலரை வஞ்சித்த தோஷிநா னாகலிற்
கருணைகொண் டமுதர்புகழுஞ்
செங்கழன் மதர்ப்பினை யளித்தென்று மாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

**எங்கள் மதம் உங்கள் மதம் என்று பல திறவாதம்**
**இட்டு அறிவை விட்ட தோஷி**
**இது தெய்வம் அது தெய்வம் என்று நிலை கொள்ளாமல்**
**ஈடு அழித்திட்ட தோஷி**
**கொங்கை நிமிர் மங்கையரை உற்று உற்று நோக்கி விழி**
**குருடுபட்டு உள்ள தோஷி**
**குடிகாரரோடு கள் கூடிக் குடித்துக்**
**குலாவித் திரிந்த தோஷி**
**கங்குல் பகல் உள் ஈரம் இன்றி உயிர்வதை செய்து**
**கறி சமைத்து உண்ட தோஷி**
**காவலரை வஞ்சித்த தோஷி நான் ஆகலில்**
**கருணை கொண்டு அமுதர் புகழும்**
**செங்கழல் மதர்ப்பினை அளித்து என்றும் ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*எங்கள் மதம் இது என்று தருக்கியும், உங்கள் மதம் அது என்று இகழ்ந்தும், பலவித வழக்குகள் பேசி அறிவிழந்த குற்றம் உடையவன். இதுவும் தெய்வம், அதுவும் தெய்வம் என்று பல தெய்வங்களை வழிபட்டு முழுமுதல்வனான உன்னைத் தெளிந்து, உன்னையே வழிபடும் ஒருதெய்வ வழிபாட்டை நிலைபெறாமல் பெருமைக் குலைத்திட்ட குற்றம் உடையவன். மதர்ந்து நிற்கும் கொங்கைகள் கொண்ட மங்கையரை வெறித்து, வெறித்துப் பார்த்து அறிவுக்கண் குருடுப்பட்டுள்ள குற்றம் உடையவன். குடிகாரரோடு சேர்ந்து கள் குடித்துக் குலாவித்திரிந்த குற்றம் உடையவன். சிறிதேனும் இரக்கம் இல்லாமல் உயிர்களைக் கொன்று இரவும் பகலும் ஊனைச் சமைத்து உண்ட குற்றம் உடையவன். அரசர்க்கு உரிய கடமையைச் செலுத்தாமல் வஞ்சித்த குற்றம் உடையவன். (இத்தனைக் குற்றங்களுக்கும் கொள்கலமாக நான் உள்ளேன்). எனவே, (நானும் உய்தி பெறவேண்டும்*

*என்ற) பேரருள் நின் திருவுள்ளத்தில் கொண்டு, தேவர்கள் புகழுகின்ற நினது சிவந்த கழலணிந்த திருவடியின் இன்பச் செழிப்பினை எஞ்ஞான்றும் எனக்கு வழங்கியருளி ஆட்கொள்வாயாக.*

40. துட்டத் தனங்கட்கு வித்தான தோஷிநர
துதிசதா செய்ததோஷி
சுந்தரி களைப்புணர வசியமது தேடித்
துரும்பா மெலிந்ததோஷி
கட்டுக் கடங்காத பட்டிமா டொப்பவே
கண்டபடி சென்றதோஷி
காலிகளின் மேலிருஞ் சுமையைத் தடித்துண்டு
கருணையை யிழந்ததோஷி
மட்டற்ற மித்தைகளை வட்டிக் களித்துநிதம்
வர்த்தக மிழைத்ததோஷி
மாகதி பெறற்காய நெறிதன்னை நேடினேன்
மனமுவந் தருள்வழியில்வாழ்
சிட்டனிவ னென்றுதிரு வடிகொடுத் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

துட்டத் தனங்கட்கு வித்தான தோஷி நர
துதி சதா செய்த தோஷி
சுந்தரி களைப் புணர வசியம் அது தேடித்
துரும்பாய் மெலிந்த தோஷி
கட்டுக்கு அடங்காத பட்டி மாடு ஒப்பவே
கண்டபடி சென்ற தோஷி
காலிகளின் மேல் இரும் சுமை வைத்து அடித்து உண்டு
கருணையை இழந்த தோஷி
மட்டற்ற மித்தைகளை வட்டிக்கு அளித்து நிதம்
வர்த்தகம் இழைத்த தோஷி
மாகதி பெறற்குஆய நெறிதன்னை தேடினேன்
மனம் உவந்து அருள் வழியில் வாழ்

**சிட்டன் இவன் என்று திருவடி கொடுத்து ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*தீங்கு நெறிகட்கு மூலமாய் உள்ள குற்றம் உடையவன். உன்னைப் புகழவேண்டிய வாயால் எந்நேரமும் மனிதர்களைப் புகழ்ந்து (அதனால் பெறும்பொருள் கொண்டு) வாழ்ந்த குற்றம் உடையவன். அழகிய பெண்களிடம் இன்பம் நுகர்வதற்கு எண்ணி அவர்களைத் தன்வசமாக்கும் வசியமருந்து, வசிய மந்திரங்களைத்தேடி, அலைந்து உடம்பு துரும்பாக மெலிந்த குற்றம் உடையவன். "கட்டுக்கு அடங்காத பட்டிமாட்டைப் போலவே" கண்ட இடம் எல்லாம் சுற்றித்திரிந்த குற்றம் உடையவன். பசுக்களின் மீது தாங்கமாட்டாத பாரத்தை ஏற்றி, அவை துன்புறும்படி இரக்கம் இல்லாமல் அடித்து, அவ்வழியில் பொருள் ஈட்டித்தின்று, அருளை இழந்த குற்றம் உடையவன். எண்ணற்ற பொய்களை ஊதியம் கருதிப்பேசி நாள்தோறும் 'பொய் வணிகம்' செய்த குற்றம் உடையவன். (இத்துணைக் குற்றங்களுக்கும் கொள்கள மாயிருக்கும் அடியவனும்) பெறற்கரிய பெரும்பேறு அடைவதற்கான நெறியை நாடுபவன் ஆனேன். உன்திருவுள்ளம் உவந்து 'அருள்நெறியில் வாழ்கின்ற அடியவன் இவன்' என்று என்னையும் ஏற்றுக்கொண்டு உனது திருவடிப்பேற்றை வழங்கியருளி என்னை ஆட்கொள்வாயாக.*

41. **எவ்வுயிரு மறிவென் றிராதவ் வுயிர்க்கெலா**
**மெமனா யிருந்ததுட்டன்**
**எனக்கீ டுளோருல கிருப்பரோ வென்றிக**
**லியம்பிய பொலாததுட்டன்**

ஒவ்வாத செயல்களுக் கொவ்வாத மக்களையு
மொவ்வவே செய்ததுட்டன்
ஊரார்கள் சொத்தின்மே லாசையுற் றிதமோச
வுரைபல வுரைத்ததுட்டன்
அவ்வியர்க ணேயமுற் றங்காடி நாய்போ
லலைந்துபுக ழற்றதுட்டன்
அத்தனை யிகழ்ந்திட்ட துட்டனா னாதலா
லமலவன் பைப்பெருக்கித்
திவ்விய சதானந்த வீடளித் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

எவ்வுயிரும் அறிவு என்று இராது அவ் வுயிர்க்கெலாம்
எமனாய் இருந்த துட்டன்
எனக்குஈடு உளோர் உலகுஇருப்பரோ என்று இகல்
இயம்பிய பொலாத துட்டன்
ஒவ்வாத செயல்களுக்கு ஒவ்வாத மக்களையும்
ஒவ்வவே செய்த துட்டன்
ஊரார்கள் சொத்தின் மேல் ஆசைஉற்று இதமோச
உரைபல உரைத்த துட்டன்
அவ்வியர்கள் நேயம்உற்று அங்காடி நாய்போல்
அலைந்து புகழ் அற்ற துட்டன்
அத்தனை இகழ்ந்திட்ட துட்டன் நான் ஆதலால்
அமல அன்பைப் பெருக்கித்
திவ்விய சதானந்த வீடுஅளித்து ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*எல்லா உயிர்களும் நம்மைப்போலவே இன்பத்தில் மகிழ்வதும், துன்பத்தில் வருந்துவதுமான அறிவுடையவை என்று எண்ணாமல், அந்த உயிர்களுக்கெல்லாம் எமனாக*

*விளங்கிய தீயவன். எனக்கு ஈடாக யாரேனும் உலகத்தில் இருக்கின்றனரா? என்று என் வலிமையைப் புகழ்ந்து கொண்ட தீயவன். செய்யக்கூடாத செயல்களைச் செய்வதற்கு ஒப்பாத பேர்களை அச்சுறுத்தி இணங்க வைத்த தீயவன். ஊரார் சொத்தின்மேல் ஆசைகொண்டு (அதைப் பறிக்கின்ற மோசக்கருத்துடன்) நயமான மொழிகள் பலவற்றை வஞ்சகமாகக் கூறிய தீயவன். பொறாமைக் குணமுள்ளவர்களின் நட்பை அடைந்து அங்காடி நாய்போல் அங்குமிங்கும் அலைந்துப் புகழை இழந்த தீயவன். இறைவனைப் பழித்த தீயவன். (இத்துணைக் கெட்டவன் நான்) ஆகையால், (நான் உய்தி பெறவேண்டுமென்று நீயே அருள்கொண்டு) நின்பால் எனக்குக் குற்றமற்ற அன்பு பெருகிடச் செய்து தெய்வீக மாய் என்றும் இன்பமே நிலைத்த வீட்டுப்பேற்றை அருளி என்னை ஆட்கொள்வாயாக.*

42. வேதநிஜ நூலீறு கேட்டிவை வெறுஞ்சொலென
விட்டுலகி னின்றதுட்டன்
வித்துவா னானென்று கவிதைபல பாடியே
வீணா டொலைத்ததுட்டன்
வாதவினை யாற்பிரபு வாவே னெனாவுலகை
மதியாம னின்றதுட்டன்
வாலிப ருடன்கூடி யரியரன் கோயில்களில்
வனிதைமயல் கொண்டதுட்டன்
பாதகஞ் செய்யப் படாதென்று சொல்லியப்
பாதகஞ் செய்ததுட்டன்
பங்காளி வஞ்சகத் துட்டனா னாகலிற்
பரமவன் பைப்பெருக்கிச்
சேதகப் பாதச் செருக்களித் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

**வேத நிஜ நூல் ஈறு கேட்டு இவை வெறும் சொல் என**
**விட்டு உலகில் நின்ற துட்டன்**
**வித்துவான் நான் என்று கவிதை பல பாடியே**
**வீணாள் தொலைத்த துட்டன்**
**வாதவினையால் பிரபு ஆவேன்என உலகை**
**மதியாமல் நின்ற துட்டன்**
**வாலிபருடன் கூடி அரி அரன் கோயில்களில்**
**வனிதை மயல் கொண்ட துட்டன்**
**பாதகம் செய்யப்படாது என்று சொல்லி அப்**
**பாதகம் செய்த துட்டன்**
**பங்காளி வஞ்சகத் துட்டன் நான் ஆகலின்**
**பரம அன்பைப் பெருக்கிச்**
**சேதகப் பாதச் செருக்கு அளித்து ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*வேதாந்த (உபநிடத) உண்மைகளை ஆன்றோர் கூறக் கேட்டுச் 'செப்புக்காசுக்கும் பயனில்லாத சொற்கள்' இவை என்று வேதநெறியை விட்டு விலகி உலகநடையில் ஒழுகிய தீயவன். பெரும் புலவன் என்று என்னை நானே புகழ்ந்து உன்னைப் புகழாத வீண் கவிகளைப் பாடி வாழ்நாளை வீண்நாளாக்கிய தீயவன். இரசவாதத்தால் 'குபேரன் ஆகிவிடுவேன்' என்று கனவுகண்டு மற்றவர்களை மதியாமல் இருந்த தீயவன். இளைஞர்களுடன் சேர்ந்து ஈசுவரன் கோயில், பெருமாள் கோயில்களுக்குச் சென்று, அங்கு வழிபடவரும் பெண்களைக்கண்டு காமம்கொண்ட தீயவன். இத்தகைய பாவஞ் செய்யக்கூடாதென்று வாய்ஞானம் பேசி அந்தப்பாவத்தைச் செய்த தீயவன். பங்காளியை வஞ்சித்த தீயவன். இத்துணைக் கெட்டவன் நான் ஆதலால், (நான் உய்திபெற வேண்டுமென்று நீயே அருள்கொண்டு) நின்பால் எனக்குப் பேரன்பு பெருகச்செய்த நினது சிவந்த*

*திருவடி வாழ்வாகிய செம்மாப்பை வழங்கியருளி என்னை ஆட்கொள்வாயாக.*

43\. பொருணட்பி லாசையுற் றதிகார வவைகளிற்
பொய்யுரை புகன்றதுட்டன்
புண்ணியஞ் செய்கிறே னென்றுபிறர் காணப்
பொருந்தா தளித்ததுட்டன்
ஒருவரு நமக்குநிக ராகாரெ னுன்மத்த
மோயாது கொண்டதுட்டன்
உல்லாச வுடையுடீஇ யெல்லாரும் வீணனென்
றுன்னிட நடந்தட்டன்
குருவைப் பணிந்துபொரு ளறியாத துட்டனிடு
கூலிகள் குறைத்ததுட்டன்
குல்லையபி னுண்மருட் டுட்டனா னாகலிற்
குறைவிலன் பைப்பெருக்கித்
திருவளரு மடிமதர்வு வீடளித் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

பொருள் நட்பில் ஆசைஉற்று அதிகார அவைகளில்
பொய்உரை புகன்ற துட்டன்
புண்ணியம் செய்கிறேன் என்று பிறர் காணப்
பொருந்தாது அளித்த துட்டன்
ஒருவரும் நமக்கு நிகர் ஆகார் எனு உன்மத்தம்
ஓயாது கொண்ட துட்டன்
உல்லாச உடையுடீஇ எல்லாரும் வீணன் என்று
உன்னிட நடந்த துட்டன்
குருவைப் பணிந்து பொருள் அறியாத துட்டன் இடு
கூலிகள் குறைத்த துட்டன்
குல்லை அபின் உண் மருள் துட்டன் நான் ஆகலில்
குறைவில் அன்பைப் பெருக்கித்

**திருவளரும் அடி மதர்வு வீடு அளித்து ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*பொருள்சேர்க்கையில் ஆசைகொண்டு அதிகார மன்றங்களில் பொய்ச்சான்று கூறிய தீயவன். புண்ணியம் செய்கிறேன் என்று விளம்பரம் செய்து பலரும் காணும்படி தகாதவர்களுக்குப் பொருள் தந்த தீயவன். ஒருவரும் நமக்கு ஒப்பாகார் என்று ஓயாது பித்தம் கொண்ட தீயவன். உல்லாசமான உடை அணிந்து காண்பவர் எல்லாம் 'வீணன்' என்று எண்ணும்படி நடந்த தீயவன். குருவைப் பணிந்து மெய்ப்பொருள் உணராத தீயவன். வேலைக்குரிய கூலியைக் கொடுக்காமல் குறைத்துக் கொடுத்த தீயவன். கஞ்சா, அபின் ஆகியனவற்றை உட்கொண்டு, மருள்கொண்ட தீயவன். இத்துணைக் கெட்டவன் நான். ஆதலின், (நான் உய்தி பெற வேண்டுமென்று நீயே அருள்கொண்டு) நின்பால் எனக்குக் குறையாத அன்பு பெருகச்செய்து அருளாகிய 'திரு' வளர்கின்ற நினது திருவடியாகிய 'மதர்ப்பு' கொண்ட வீட்டுப்பேற்றை அருளி என்னை ஆட்கொள்வாயாக.*

44. நல்லமனி தன்போ லியம்பியுள் ளுக்குளே
நஞ்சா யிருந்ததுட்டன்
ஞாயத் தலத்திலே பக்ஷபா தம்பேசி
ஞாயங் கொடுத்ததுட்டன்
எல்லிலு மிருட்டிலுங் கள்ளத் தனத்தையே
யிதயத்தில் வைத்ததுட்டன்
ஏழைக் கிரக்கமுற் றையமிடு வோர்களை
யிடாதுதடை தந்ததுட்டன்
புல்லறி வுளாரைச் சினேகித் தடாதவனு
போகத்தில் வீழ்ந்ததுட்டன்

புண்ணியம திில்லாத துட்டனா னாகலிற்
புரணவன் பைப்பெருக்கிச்
செல்லொணா நெறிதடுத் தடியளித் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

நல்ல மனிதன் போல் இயம்பி உள்ளுக்குஉளே
நஞ்சாய் இருந்த துட்டன்
ஞாயத் தலத்திலே பக்ஷபாதம் பேசி
ஞாயம் கெடுத்த துட்டன்
எல்லிலும் இருட்டிலும் கள்ளத் தனத்தையே
இதயத்தில் வைத்த துட்டன்
ஏழைக்கு இரக்கம்உற்று ஐயம் இடுவோர்களை
இடாது தடை தந்த துட்டன்
புல் அறிவுளாரைச் சினேகித்து அடாத அனு
போகத்தில் வீழ்ந்த துட்டன்
புண்ணியம் அது இல்லாத துட்டன் நான் ஆகலின்
புரண அன்பைப் பெருக்கிச்
சொல்ஒணா நெறி தடுத்து அடி அளித்து ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*நல்லவன்போல நடித்து உதட்டில் தேன் ஒழுகப்பேசி உள்ளத்தில் நஞ்சாயிருந்த தீயவன். நீதிமன்றத்திலே ஒருவர் பக்கமாகவே பொய் கலந்த சான்று கூறி நீதியை அழித்த தீயவன். இரவும் பகலும் உள்ளத்தில் கள்ளமே குடிகொண்ட தீயவன். ஏழைகள்பால் இரங்கி ஐயம் இடுவோர்களை இடாமல் தடுத்த தீயவன். இழிந்த அறிவுடையோர் நட்புக்கொண்டு கூடா ஒழுக்கத்தில் விழுந்த தீயவன். புண்ணியம் சிறிதும் இல்லாத தீயவன். இத்துணைக் கெட்டவன் நான் ஆதலின், (நான் உய்திபெற வேண்டுமென்று நீயே அருள்கொண்டு) நின்பால் எனக்கு*

*முழுஅன்பும் பெருகச்செய்து நான் போகக்கூடாத வழியில் செல்லாமல் தடுத்தருளி நினது திருவடிப்பேற்றை வழங்கி என்னை ஆட்கொள்வாயாக.*

45. போய்வருத லோராத நாய்போல வுண்பதே
புத்தியென வோதுதுட்டன்
புறணிபே சிப்பேசி யொருவர்க்கு மாகாத
புல்லர்கட் கானதுட்டன்
பேய்களுக் கடிமையாய் நின்சரண நாடாது
பேயா வுழன்றதுட்டன்
பிறருக்கு நமதுதுயர் வரவென்று கருதிடும்
பெற்றிநனி கொண்டதுட்டன்
நோய்வந்த காலையிற் பேய்களைக் கும்பிட்டு
நோன்மையை மறந்ததுட்டன்
நோலாமை மிக்குடைய துட்டனா னாதலா
னுகைவிலன் பைப்பெருக்கித்
தீயிற் புகார்பெற்ற வடியளித் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

போய் வருதல் ஓராத நாய்போல உண்பதே
புத்தி என ஓது துட்டன்
புரணி பேசிப் பேசி ஒருவர்க்கும் ஆகாத
புல்லர்கட்கு ஆன துட்டன்
பேய்களுக்கு அடிமையாய் நின்சரணம் நாடாது
பேயா உழன்ற துட்டன்
பிறருக்கு நமது துயர் வர என்று கருதிடும்
பெற்றி நனி கொண்ட துட்டன்
நோய் வந்த காலையில் பேய்களைக் கும்பிட்டு
நோன்மையை மறந்த துட்டன்
நோலாமை மிக்குடைய துட்டன் நான் ஆதலால்
நுகைவு இல் அன்பைப் பெருக்கித்

**தீயில் புகார் பெற்ற அடி அளித்து ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*எதற்காக ஓடுகிறோம்? எதற்காக மீள்கிறோம்? என்று தெரியாமல் ஓடுகின்ற நாய்போல, எதற்காகப் பிறந்தோம்? என்று உணராமல் நாவுக்கு ருசியாக உண்டு கொண்டிருப்பதே அறிவுடைமை என்று கூறும் தீயவன். புறங்கூறுவதையே தொழிலாகக் கொண்டு யாருக்கும் ஆகாத கீழ்மக்கட்கு ஒத்தவனான தீயவன். பேய், முனி ஆகிய தீயதேவதைகளுக்கு அடிமைப்பட்டு உனது திருவடி விரும்பாது, பேயாக உழன்ற தீயவன். நமக்கு வந்த துன்பம் பிறருக்கும் வரவேண்டும் என்னும் தன்மை மிகுந்த தீயவன். நோய் பீடித்தபோது பேய்களை வழிபட்டுத் தவநெறி மறந்த தீயவன். ஆற்றாமை மிகுந்த தீயவன். இத்துணைக் கெட்டவன் நான் ஆதலால், (நான் உய்திபெறவேண்டு மென்று நீயே அருள்கொண்டு நின்பால் எனக்கு அசையாத அன்பைப் பெருக்கி, தங்கள் உடம்பை நெருப்புக்கு இரையாக்காத ஞானிகள் அடைந்த நின் திருவடியை வழங்கி என்னை ஆட்கொள்வாயாக.*

*(ஞானிகள் இறைவன் திருவடியை அடைந்து விட்டால் அவர்கள் உடம்பை எரித்தல் கூடாது என்பதைப் "புண்ணிய மாமவர் தம்மைப் புதைப்பது - நண்ணி அனல் கோக்கில் நாட்டில் அழிவாகும் மண்ணி வழியில் அலங்கார பங்கமாம்-மண்ணுலகெல்லா மயங்குமனல் மண்டியே" என்னும் திருமந்திரத்தால் அறிக).*

46. **கனவாட கப்புதையல் பெறவென்று கோவிலிற்**
**காலைமா லையும்வணங்கிக்**
**கருதிய படிக்கது வாராதபோ திதுவெறுங்**
**கல்லென் றுரைத்ததுட்டன்**

மனைமகா ரிகுளைகளை மனநோவ விட்டுமறு
மனைதேடி நின்றதுட்டன்
மறநடைய ரைப்புகழ்ந் தவரிடும் பொருள்பலவும்
வாங்கிமகிழ் வுற்றதுட்டன்
மனதின்ன தறிவின்ன தென்றினி துணர்ந்துநல்
வழியினட வாததுட்டன்
மாதவரை வைதுள்ள துட்டனா னாகலின்
வண்மையன் பைப்பெருக்கித்
தினமுநின் சேவடி யிருக்கவின் றாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

கன ஆடகம் புதையல் பெறஎன்று கோவிலில்
காலை மாலையும் வணங்கிக்
கருதியபடிக்கு அது வாராத போது இது வெறும்
கல் என்று உரைத்த துட்டன்
மனை மகார் இகுளைகளை மன நோவ விட்டு மறு
மனை தேடி நின்ற துட்டன்
மற நடையரைப் புழ்ந்து அவர் இடும் பொருள் பலவும்
வாங்கி மகிழ்வுற்ற துட்டன்
மனது இன்னது அறிவு இன்னது என்று இனிது உணர்ந்து நல்
வழியில் நடவாத துட்டன்
மாதவரை வைது உள்ள துட்டன் நான் ஆகலின்
வண்மை அன்பைப் பெருக்கித்
தினமும் நின் சேவடி இருக்க இன்று ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*பெருத்த பொன் புதையல் கிடைக்க வேண்டுமென்று நாள்தோறும் காலையும் மாலையும் கோயில்களில் வழிபட்டுவந்து, தான் கருதிய எண்ணம் கைகூடாதது கண்டு, 'இதுவும் தெய்வமா? வெறுங்கல்' என்று இகழ்ந்த*

*தீயவன். மனைவி, மக்கள், சுற்றத்தார் ஆகியோர் மனம் நோவும்படி செய்து, வேறு பெண்ணைத் தேடிய தீயவன். பாவிகளைப் புகழ்ந்து அவர்கள் தரும் பொருள்களை வாங்கி மகிழ்ந்த தீயவன். மனம் இப்படிப்பட்டது, அறிவு இப்படிப்பட்டது என்று நன்கு தெரிந்து நன்னெறியில் ஒழுகாத தீயவன். பெருந்தவத்தினரை ஏசும் தீயவன். இத்துணைக் கெட்டவன் நான் ஆதலால், (நானும் உய்திபெறும்படி நீயே அருள்கொண்டு) நின்பால் எனக்கு வளப்பமான அன்பு பெருகச் செய்து எப்போதும் நின்திருவடியின்கீழ் இருக்கும்படி என்னை இன்று ஆட்கொள்வாயாக.*

47. வந்தவரை வம்மினென் றழையாத துட்டனுயர்
மறையோரை வைததுட்டன்
மடவிதவை யைக்கூடி யுண்டாய கருவினை
மருந்தா லழித்ததுட்டன்
நந்தன மடந்தட மழித்திட்ட துட்டனன்
னட்பைப் பகைத்ததுட்டன்
நவிலுரையி லேதவறு காணினுஞ் சொன்னதே
ஞாயமென் றோதுதுட்டன்
சொந்தமில் லாததைச் சொந்தமது செயவெனத்
தொந்தரைகள் செய்ததுட்டன்
சோரர்தஞ் சொத்துண்ட துட்டனா னாகலிற்
றுகளிலன் பைப்பெருக்கிச்
சிந்தாத செல்வமது தந்தென்று மாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

வந்தவரை வம்மின் என்று அழையாத துட்டன் உயர்
மறையோரை வைத துட்டன்
மட விதவையைக் கூடி உண்டாய கருவினை
மருந்தால் அழித்த துட்டன்

**நந்தனம் மடம் தடம் அழித்திட்ட துட்டன் நன்**
**நட்பைப் பகைத்த துட்டன்**
**நவில் உரையிலே தவறு காணினும் சொன்னதே**
**ஞாயம் என்று ஓது துட்டன்**
**சொந்தம் இல்லாததைச் சொந்தம்அது செய எனத்**
**தொந்தரைகள் செய்த துட்டன்**
**சோரர்தம் சொத்து உண்ட துட்டன் நான் ஆகலின்**
**துகள் இல் அன்பைப் பெருக்கிச்**
**சிந்தாத செல்வம்அது தந்து என்றும் ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*தம்மை நாடி வந்தவரை வாருங்கள் என்று அன்புடன் வரவேற்காத தீயவன். உயர்ந்த வேதநெறியினரை ஏசிய தீயவன். இளம்விதவையைப் புணர்ந்து உண்டான கருவை மருந்துகொண்டு அழித்த தீயவன். பூஞ்சோலை, மடம், குளம் ஆகியவற்றை அழித்த தீயவன். நல்ல நண்பர்களைப் பகைத்த தீயவன். சொன்ன சொல் பிழை என்று அறிந்தாலும், நான் சொன்னது நேரிது என்று கூறுந்தீயவன். தனக்குச் சொந்தமில்லாத பொருள்களைச் சொந்தம் ஆக்கிக்கொள்ள அவைகளின் சொந்தக்காரர் களுக்குத் தொல்லைகள் பல தந்த தீயவன். திருடர் பொருளை உண்டு வாழ்ந்த தீயவன். இத்துணைக் கெட்டவன் நான் ஆதலால், (நானும் உய்திபெற நீயே அருள்கொண்டு) நின்பால் எனக்குக் குற்றமற்ற அன்பு பெருகச்செய்து என்றும் அழியாத பேற்றை அருளி என்னை ஆட்கொள்வாயாக.*

48. ஞானநூ லின்படி நடக்கமன மில்லாமன்
ஞானமே தென்றதுட்டன்
நரசன்ம மாப்பிறந் தெவரறிந் தாரெனா
நல்லவரை யெள்குதுட்டன்

ஞானவா னானவர்கள் சாகா திருந்தார்கொ
னவிலுவீ ரென்றதுட்டன்
நன்னருயர் தேவால யச்சொத்தை விற்றுண்டு
நல்குரவு நண்ணுதுட்டன்
ஞானமுனி போலவே பொய்வேட மிட்டன்பர்
நற்பொருள் கவர்ந்ததுட்டன்
நடையைக் குறைத்திட்ட துட்டனா னாகலி
னலங்கொளன் பைப்பெருக்கித்
தேனினு மினிக்குமமு தம்பகுத் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

ஞான நூலின்படி நடக்க மனம் இல்லாமல்
ஞானம் ஏது என்ற துட்டன்
நர சன்மமாய்ப் பிறந்து எவர் அறிந்தார் எனா
நல்லவரை எள்கு துட்டன்
ஞானவான் ஆனவர்கள் சாகாது இருந்தார் கொல்
நவிலுவீர் என்ற துட்டன்
நன்னர் உயர் தேவஆலயச் சொத்தை விற்று உண்டு
நல் குரவு நண்ணு துட்டன்
ஞான முனி போலவே பொய் வேடம் இட்டு அன்பர்
நற்பொருள் கவர்ந்த துட்டன்
நடையைக் குறைத்திட்ட துட்டன் நான் ஆகலின்
நலம் கொள் அன்பைப் பெருக்கித்
தேனினும் இனிக்கும் அமுதம் பகுத்து ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*ஞானநூல் நெறியில் ஒழுக மனமில்லாமல், ஞானம் என்பது கிடையாது என்ற தீயவன். மக்களாய்ப் பிறந்தவர்களில் ஞானம் என்பதைக் கண்டவர் யார்?*

*என்று நல்லவரை இகழும் தீயவன். ஞானிகள் என்பவர்கள் சாகாமல் இருந்தார்களா? சொல்லுங்கள் என்ற தீயவன். நன்மையில் உயர்ந்த கோவில் சொத்துக்களை விற்றுச்சாப்பிட்டு, அதன் பயனாக வறுமை அடைந்த தீயவன். ஞானம் நிரம்பிய முனிவர்போலப் போலி உருவம் கொண்டு அன்பர்களின் நல்ல பொருள்களைக் கவர்ந்த தீயவன். ஒழுக்கக் குறைவுடைய தீயவன். இத்துணைக் கெட்டவன் நான் ஆதலால், (நானும் உய்திபெற நீயே அருள்கொண்டு) நின்பால் எனக்கு நலமார்ந்த அன்பு பெருகச்செய்து தேனினும் இனிமை தரும் பேரின்பத்தை அருளி என்னை ஆட்கொள்வாயாக.*

49. முதலைக் கனாவினுங் காணாது முதலாளு
முதலாளி யென்றதுட்டன்
முன்னொன்று பின்னொன்று பேசியே சிக்கெட்ட
மூதேவி யாயாதுட்டன்
உதவிபுரி கின்றவர்க் கவதிபுரி துட்டனுயு
முயிர்களை வதைத்ததுட்டன்
உற்றபிணி தீர்க்கவர்க் கோதிய படிக்கொன்று
முதவா தலைத்ததுட்டன்
இதவான நீதிக ளியம்புநூ லர்த்தத்தை
யேற்றபடி சொற்றதுட்டன்
எரிமூட்டி யிறுமாந்த துட்டனா னாகலி
னியாணரன் பைப்பெருக்கிச்
சிதமருவு நின்சரண வாழ்வளித் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

முதலைக் கனாவினும் காணாது முதல் ஆளும்
முதலாளி என்ற துட்டன்
முன்ஒன்று பின்ஒன்று பேசி ஏசிக் கெட்ட
மூதேவி ஆய துட்டன்

உதவி புரிகின்றவர்க்கு அவதிபுரி துட்டன் உயும்
உயிர்களை வதைத்த துட்டன்
உற்றபிணி தீர்த்தவர்க்கு ஓதியபடிக்கு ஒன்றும்
உதவாது அலைத்த துட்டன்
இதவான நீதிகள் இயல்பு நூல் அர்த்தத்தை
ஏற்றபடி சொற்ற துட்டன்
எரிமூட்டி இறுமாந்த துட்டன் நான் ஆகலின்
யாணர் அன்பைப் பெருக்கிச்
சிதமருவு நின் சரண வாழ்வு அளித்து ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*கனவிலும் முதலைக் காணாதிருந்தும் பெரும் செல்வத்துக்கு உரியவன் என்ற தீயவன். முன் ஒன்றும் பின் ஒன்றுமாகப் பேசி ஏசிக், கெட்டமூதேவியான தீயவன். உதவி செய்பவர்களுக்கு அவதி செய்யும் தீயவன். வாழும் உயிர்களைக் கொன்ற தீயவன். தனக்கு வந்தநோய் தீர்த்த மருத்துவருக்கு முதலில் பேசியபடி ஏதும் பொருள்தராது, அவரை அலைய வைத்த தீயவன். நல்ல நீதிகள் கூறும் நூலின் பொருளைத் தனக்கு ஏற்றபடி கூறிய தீயவன். பிறர் வீட்டுக்குத் தீவைத்து தருக்கிய தீயவன். இத்துணைக் கெட்டவன் நான் ஆதலால், (நானும் உய்திபெற நீயே அருள்கொண்டு) நின்பால் எனக்கு நலமார்ந்த அன்பைப் பெருகச்செய்து ஞானம் சூழ்ந்த நின் திருவடிப் பெருவாழ்வை அளித்தருளி என்னை ஆட்கொள்வாயாக.*

50. ஏசறு மனோநாச சகநிட்டை புரிவோ
ரிருக்கையை யழித்ததுட்டன்
இல்லாத விடயத்தை யுண்டென்னு முறுதிமுறி
யெழுதிக் கொடுத்ததுட்டன்
தேசிகனை வஞ்சித்த துட்டன்மனு வென்கின்ற
சீர்மையில் லாததுட்டன்

செய்வதெல் லாஞ்செய்து தெய்வமே யிப்படிச்
செய்தையே யென்றதுட்டன்
ஆசில்பதி விரதையை யடீயென்ற துட்டனின்
னருளைப் பழித்ததுட்டன்
ஆணிலும் பெண்ணிலுந் துட்டனா னாகலி
னகண்டவன் பைப்பெருக்கித்
தேசுடைய வுன்சரண வின்பளித் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

ஏசு அறு மனோ நாச சக நிட்டை புரிவோர்
இருக்கையை அழித்த துட்டன்
இல்லாத விடயத்தை உண்டு என்னும் உறுதி முறி
எழுதிக் கொடுத்த துட்டன்
தேசிகனை வஞ்சித்த துட்டன் மனு என்கின்ற
சீர்மையில்லாத துட்டன்
செய்வது எல்லாம் செய்து தெய்வமே இப்படிச்
செய்வதையே என்ற துட்டன்
ஆக இல் பதி விரதையை அடீ என்ற துட்டன் நின்
அருளைப் பழித்த துட்டன்
ஆணிலும் பெண்ணிலும் துட்டன் நான் ஆகலின்
அகண்ட அன்பைப் பெருக்கித்
தேசு உடைய உன் சரண இன்பு அளித்து ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள்அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*பழிப்பு இல்லாத மனோநாசம் விளைக்கும் சதாநிட்டை கூடியவர்கள் இருப்பிடத்தை அழித்த தீயவன். நடவாத செய்திகளை நடந்தன என்று உறுதிமுறி எழுதிக் கொடுத்த தீயவன். குருவை வஞ்சித்த தீயவன். அறம் என்ற சிறப்பு இல்லாத தீயவன். செய்யத்தகாத தீங்குகளை*

*எல்லாம் செய்து அவற்றால் துன்பப் படுவோரைக் கண்டு இரக்கப்படுவது போல் பாவனைக்காட்டித் "தெய்வமே இப்படிச் செய்துவிட்டாயே" என்று கடவுள் மேல் பழிசுமத்திய தீயவன். குற்றமற்ற கற்புடையோரை 'அடீ' என்று அழைத்த தீயவன். உன் அருளைப்பழித்த தீயவன். (ஆணிலும் பெண்ணிலும்) நானே யாவரினும் தீயவன். இப்படிப்பட்ட கொடியவன் நான் ஆதலால், (நானும் உய்திபெற நீயே அருள்கொண்டு) நின்பால் எனக்குச் சிதைவில்லாத முழுஅன்பு பெருகச்செய்து ஒளி பொருந்திய நினது திருவடி இன்பத்தை வழங்கியருளி என்னை ஆட்கொள்வாயாக.*

*(ஸ்ரீமத் சுவாமிகள்* ***51ஆம் பாடல் முதல் 60ஆம் பாடல் வரை ஞான இராசயோகத்தின் எட்டு உறுப்புக்களை*** *விளக்கி அருளுகிறார்)*

51. வந்தவழி யெந்தவழி யென்றுணர வோர்நிலையின்
மனநிற்ற லெக்காலமோ
மருளற்ற திருவரு ளலாதுநிலை யிலையென்ற
மதிபெறுவ தெக்காலமோ
சந்ததமு மனமடக் குஞ்சாத கங்கொடு
தவம்புரிவ தெக்காலமோ
சவிமன்று ளானந்த நடைகண்டு மகிழ்தொண்டர்
சார்புறுவ தெக்காலமோ
மந்தமதி யாளர்கட் கெட்டாத சிவசமய
வாழ்வடைவ தெக்காலமோ
வாய்த்தசன் மம்பழுது படுமோ வெனத்தின
மயங்குமென் முன்புவந்து
செந்திருக் கமலவடி யருணிறுவி யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

**வந்தவழி எந்தவழி என்று உணர ஓர் நிலையில்**
**மனம் நிற்றல் எக்காலமோ**
**மருள் அற்ற திருவருள் அலாது நிலை இலை என்ற**
**மதி பெறுவது எக்காலமோ**
**சந்ததமும் மனம் அடக்கும் சாதகம் கொடு**
**தவம் புரிவது எக்காலமோ**
**சவி மன்றுள் ஆனந்த நடைகண்டு மகிழ்தொண்டர்**
**சார்பு உறுவது எக்காலமோ**
**மந்தமதியாளர் கட்கு எட்டாத சிவசமய**
**வாழ்வு அடைவது எக்காலமோ**
**வாய்த்த சன்மம் பழுதுபடுமோ எனத்தினம்**
**மயங்கும் என் முன்புவந்து**
**செம்திருக் கமல அடி அருள் நிறுவி ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*நாம் இவ்வுலகத்தில் பிறந்தமைக்குக் காரணமறிந்து உய்ய மனம் அடங்கி ஒருநிலையில் நிற்பது எக்காலமோ? அறியாமை தீண்டாத திருவருள் துணையின்றி அந்த நிலைக் கூடாது என்று தெளிவு பெறுவது எக்காலமோ? மனத்தை அடக்கும் பயிற்சியை எப்போதும் மேற்கொண்டு தவம் செய்வது எக்காலமோ? பொன்னம்பலத்தில் நீ புரியும் இன்பக்கூத்தைக் கண்டு மகிழும் அடியார் கூட்டத்தைச் சேர்வது எக்காலமோ? மந்தமதி உள்ளவர்கட்கு எட்டாத சிவசமய வாழ்வை அடைவது எக்காலமோ? இப்போது வாய்த்துள்ள இப்பிறவி வீண் படுமோ? என்று நாள்தோறும் மயங்கும் என்முன்பு வந்தருளி சிவந்த திருவளர் தாமரை ஒத்த நினது திருவடி அருளை என்பால் நிலைக்கப்பண்ணி என்னை ஆட்கொள்வாயாக.*

52. பகிர்முக மனத்தையுள் வலிக்கின்ற பூரகம்
பயிறலினி யெக்காலமோ
பாழாகு மனதையுட் பந்தகஞ் செய்புகும்
பகமேவ லெக்காலமோ
ககனகும் பகநின்று வெளியிடு மிரேசகங்
கண்டுயர்வ தெக்காலமோ
கண்ணினுக் குக்கண் ணெனத்திகழு மறிவான
கண்பெறுவ தெக்காலமோ
மகிமையுள பெரியபொரு ளெங்கணு மிருக்கின்ற
மரபறிவ தெக்காலமோ
வாய்த்தசன் மம்பழுது படுமோ வெனத்தின
மயங்குமென் முன்புவந்து
திகிறபு திருச்சரண வருணிறுவி யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

பகிர்முக மனத்தை உள்வலிக்கின்ற பூரகம்
பயிறல் இனி எக்காலமோ
பாழாகும் மனத்தை உள் பந்தகம் செய்புகும்
பகம் மேவல் எக்காலமோ
ககன கும்பக நின்று வெளிவிடும் இரேசகம்
கண்டு உயர்வது எக்காலமோ
கண்ணினுக்குக் கண் எனத் திகழும் அறிவான
கண் பெறுவது எக்காலமோ
மகிமை உள பெரிய பொருள் எங்கணும் இருக்கின்ற
மரபு அறிவது எக்காலமோ
வாய்த்த சன்மம் பழுதுபடுமோ எனத் தினம்
மயங்கும் என் முன்பு வந்து
திகில் தபு தீருச்சரண அருள் நிறுவி ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*புறத்தே திரியும் மனம் உள்முகப்படும்படி செலுத்தும் "பூரகம்" என்ற பயிற்சியைச் செய்தல் இனி எக்காலமோ? பாழ்படும் மனத்தை உள்முகத்தில் கட்டுப்படுத்திக் "கும்பகம்" செய்தல் எக்காலமோ? காற்றை நிலை செய்யும் கும்பகத்திலிருந்து மனத்தை வெளிப்படுத்தும் "இரேசகம்" பயின்று மேம்படுதல் எக்காலமோ? கண்ணுக்குக் கண்ணாக விளங்கும் ஞானக்கண்ணைப் பெறுவது எக்காலமோ? மாண்புள்ள பரம்பொருள் எங்கும் இருக்கும் மரபை அறிவது எக்காலமோ? இப்போது வாய்த்துள்ள இப்பிறவி வீண்படுமோ என்று நாள்தோறும் மயங்கும் என்முன்பு வந்தருளி அச்சத்தைப்போக்கும் நின் திருவடி அருளை என்பால் நிலைக்கப்பண்ணி என்னை ஆட்கொள்வாயாக.*

53. தங்கா தெழுந்துநா லங்குலங் கழிவதைத்
தடைபுரிவ தெக்காலமோ
சலனமில் லாததீ பத்தையொத் துள்ளுளே
சாதிப்ப தெக்காலமோ
கங்கா ஜலம்போல வேயுருகி யென்னுருக்
கண்டறிவ தெக்காலமோ
கன்மமல மெல்லா மொரீஇயொரு திருவருட்
கன்மமுற லெக்காலமோ
மங்காத மதியமிழ்த முண்டுமற் றுண்பதை
மறந்தமர்வ தெக்காலமோ
வாய்த்தசன் மம்பழுது படுமோ வெனத்தின
மயங்குமென் முன்புவந்து
சிங்காத பெரியதிரு வருணிறுவி யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

தங்காது எழுந்து நால் அங்குலம் கழிவதைத்
தடைபுரிவது எக்காலமோ
சலனம் இல்லாத தீபத்தை ஒத்து உள் உளே
சாதிப்பது எக்காலமோ
கங்காசலம் போலவே உருகி என் உருக்
கண்டு அறிவது எக்காலமோ
கன்மமலம் எல்லாம் ஒரீஇ ஒரு திருவருள்
கன்மம் உறல் எக்காலமோ
மங்காத மதி அமிழ்தம் உண்டு மற்று உண்பதை
மறந்து அமர்வது எக்காலமோ
வாய்த்த சன்மம் பழுதுபடுமோ எனத் தினம்
மயங்கும் என் முன்பு வந்து
சிங்காத பெரிய திருவருள் நிறுவி ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*உயிர் மூச்சு உள்ளே பன்னிரண்டு விரல் அளவு செல்லும் அதில் எட்டுவிரல் அளவே எடுத்துக்கொண்டு எஞ்சிய நான்கு விரல் அளவும் நமது வாழ்நாளைக் குறிப்பதுதானே என்று கருதாது போக்கி விடுவர், அவ்வாறு போக்காது தடைசெய்வது எக்காலமோ? அசையாது எரியும் விளக்கைப்போல உள்ளத்தை நோக்கி நிட்டையில் இருப்பது எக்காலமோ? கங்கையில் பனிக்கட்டியாய் இருந்து சூரிய ஒளிபட்டு நீராய் உருகுவதுபோல உள்ளுருகி என்னைக் கண்டறிவது எக்காலமோ? இருவினை மலமுழுதும் நீங்கி ஒப்பற்ற திருவருட்செயலில் நிற்பது எக்காலமோ? அழியாத ஞானஅமுதம் உண்டு, உடலை வளர்க்கும் உண்டியை மறந்து அமர்வது எக்காலமோ? இப்போது வாய்த்துள்ள இப்பிறவி வீண்படுமோ என்று நாள்தோறும் மயங்கும் என்முன்பு வந்தருளிக் குறையாத பரம திருவருளை என்பால் நிலைக்கப்பண்ணி என்னை ஆட்கொள்வாயாக.*

54. சருவவல் லமையுடைத் தனியரு ளெனாதுசூர்
தடியவெழ லெக்காலமோ
தனியே யிருந்துவிழி மூடவோ ருறுதியெழு
தருகால மெக்காலமோ
பொருபுல னெலாமொருவி யறியாத புதுவிடம்
புக்கணைவ தெக்காலமோ
புரையற்ற சதுர்வேத முடிபாக நிற்குமொரு
பொருளறிவ தெக்காலமோ
வருதலும் போதலு மிலாதவொரு பெருவாழ்வு
மருவிடுவ தெக்காலமோ
வாய்த்தசன் மம்பழுது படுமோ வெனத்தின
மயங்குமென் முன்புவந்து
திருவளர் பரப்பிரம வருணிறுவி யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

சருவ வல்லமை உடைத் தனி அருள் எனாது சூர்
தடிய எழல் எக்காலமோ
தனியே இருந்து விழி மூட ஓர் உறுதி எழு
தருகாலம் எக்காலமோ
பொருபுலன் எலாம் ஒருவி அறியாத புது இடம்
புக்கு அணைவது எக்காலமோ
புரை அற்ற சதுர்வேத முடிபாக நிற்கும் ஒரு
பொருள் அறிவது எக்காலமோ
வருதலும் போதலும் இலாத ஒரு பெருவாழ்வு
மருவிடுவது எக்காலமோ
வாய்த்த சன்மம் பழுதுபடுமோ எனத் தினம்
மயங்கும் என் முன்பு வந்து
திருவளர் பரப்பிரம அருள் நிறுவி ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*எல்லாம்வல்ல ஒப்பற்ற திருவருள் எனது துன்பை ஒழிக்க எழுந்து அருளுவது எக்காலமோ? விழிமூடி தனித்து இருப்பதற்கு என்னுள் உறுதி எழுவது எக்காலமோ? என்னுடன் போரிடுகின்ற ஐம்புலக் குறும்புகள் நீங்கி ஒருபூதரும் அறியாத் தனிவீட்டில் உரையுணர்வற்று இருப்பது எக்காலமோ? குற்றமற்ற நான்கு வேதங்களின் முடிந்தமுடிபாக விளங்கும் பொருளை அறிவது எக்காலமோ? பிறப்பும் இறப்பும் அற்ற ஒப்பற்ற பெருவாழ்வை நான் சேர்வது எக்காலமோ? இப்போது வாய்த்துள்ள இப்பிறவி வீண்படுமோ என்று நாள்தோறும் மயங்கும் என்முன்பு வந்தருளி மேம்பாடு வளர்கின்ற பரப்பிரம அருளை என்பால் நிலைக்கப்பண்ணி என்னை ஆட்கொள்வாயாக.*

55\. கைதவந் திமிரா தகந்தையை யடக்கக்
கருத்துறுவ தெக்காலமோ
கண்டவிட னெல்லா முனைத்தொழு திருக்குமொரு
களியெய்த லெக்காலமோ
ஐயுணர்வு மெற்குளே யைக்கியப் பட்டறிஞ
னாநிற்ப தெக்காலமோ
ஆசற்ற பரிபூர ணானந்த மாயுள்ள
வறிவறிவ தெக்காலமோ
மையிருண் மலக்கட் டறுத்தவடி யாருற்ற
வாழ்வடைவ தெக்காலமோ
வாய்த்தசன் மம்பழுது படுமோ வெனத்தின
மயங்குமென் முன்புவந்து
தெய்வங்கள் சூழ்தெய்வ வருணிறுவி யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

**கைதவம் திமிராது அகந்தையை அடக்கக்**
**கருத்து உறுவது எக்காலமோ**
**கண்ட இடன் எல்லாம் உனைத் தொழுது இருக்கும் ஒரு**
**களி எய்தல் எக்காலமோ**
**ஐ உணர்வு எற்குளே ஐக்கியப்பட்டு அறிஞ**
**னா நிற்பது எக்காலமோ**
**ஆசு அற்ற பரிபூரணஆனந்தமாய் உள்ள**
**அறிவு அறிவது எக்காலமோ**
**மை இருள் மலக்கட்டு அறுத்த அடியார் உற்ற**
**வாழ்வு அடைவது எக்காலமோ**
**வாய்த்த சன்மம் பழுதுபடுமோ எனத் தினம்**
**மயங்கும் என் முன்பு வந்து**
**தெய்வங்கள் சூழ் தெய்வ அருள் நிறுவி ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*வஞ்சகம் ஓங்காது அகந்தையை அடக்கும் எண்ணம் வருவது எக்காலமோ? பார்க்கும் இடமெல்லாம் உன்னையேகண்டு தொழுதுவாழும் ஒப்பற்ற இன்பம் கூடுவது எக்காலமோ? மெய், வாய், கண், மூக்குச் செவி என்னும் ஐந்துபேர் அறிவும் எனக்குள் ஒன்றுபட்ட ஞானியாக விளங்குவது எக்காலமோ? குற்றமற்ற பரிபூரண ஆனந்தமாய் உள்ள ஞானத்தை அறிவது எக்காலமோ? கரியஇருளாகிய ஆணவமலக் கட்டை அறுத்த அடியார்கள் பெற்ற வாழ்வை அடைவது எக்காலமோ? இப்போது வாய்த்துள்ள இப்பிறவி வீண்படுமோ என்று நாள்தோறும் மயங்கும் என்முன்பு வந்தருளித் தேவர்கள் சூழ்ந்து தொழுகின்ற தேவதேவனின் அருளை என்பால் நிலைக்கப்பண்ணி என்னை ஆட்கொள்வாயாக.*

56. பேராசை யில்லாவொர் பேராசை கொண்டுற்ற
பேதெற்ற லெக்காலமோ
பெருமையில் லாதவொரு பெருமைகொண் டறிவற்ற
பெருமைவிட லெக்காலமோ
போராடு மறுவரைப் போராடி வென்றரிய
புகழ்பெறுவ தெக்காலமோ
பொறிமயங் காமலைம் பொறியையு மொடுக்கியுட்
போக்கறிவ தெக்காலமோ
வாராத கம்பலைகள் வரினுமென் மனநனி
மகிழ்ந்துய்வ தெக்காலமோ
வாய்த்தசன் மம்பழுது படுமோ வெனத்தின
மயங்குமென் முன்புவந்து
சீராரு நிஜமோத வருணிறுவி யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

பேராசை இல்லா ஓர் பேராசை கொண்டு உற்ற
பேது எற்றல் எக்காலமோ
பெருமை இல்லாத ஒரு பெருமை கொண்டு அறிவு அற்ற
பெருமை விடல் எக்காலமோ
போராடும் அறுவரைப் போர் ஆடி வென்று அரிய
புகழ் பெறுவது எக்காலமோ
பொறி மயங்காமல் ஐம் பொறியையும் ஒடுக்கி உள்
போக்கு அறிவது எக்காலமோ
வாராத கம்பலைகள் வரினும் என் மனம் நனி
மகிழ்ந்து உய்வது எக்காலமோ
வாய்த்த சன்மம் பழுதுபடுமோ எனத் தினம்
மயங்கும் என் முன்பு வந்து
சீர் ஆரும் நிசம் ஓத அருள் நிறுவி ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*பிறர்பொருளை நமக்குச் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும் என்ற தீய பேராசையாக இல்லாமல், என் தலைவனான உன்னைப் பெறும் பேராசைக் கொண்டு, எனக்கு இயல்பான பேதைமையை நீக்கல் எக்காலமோ? பேரிருளாகிய ஆணவமலம் தீண்டாத ஒப்பற்ற மாண்பு பெற்று, அறிவற்ற பெருமையை நீக்கல் எக்காலமோ? எப்போதும் என்னோடு போரிடும் காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னும் ஆறு பகைவர்களோடு வென்று அரியபுகழ் அடைவது எக்காலமோ? அறிவு மயங்காதபடி மெய், வாய், கண், மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகளையும் ஒடுக்கி உள்ளத்துப் பொருளை அறிவது எக்காலமோ? வராத துன்பங்கள் வந்தாலும் அவற்றால் பாதிக்கப்படாமல் என்மனம் இன்பத்தில் நன்கு தோய்ந்து, உய்வது எக்காலமோ? இப்போது வாய்த்துள்ள இப்பிறவி வீண்படுமோ என்று நாள்தோறும் மயங்கும் என்முன்பு வந்தருளி சிறப்பு நிறைந்த மெய்ஞ்ஞான அருளை என்பால் நிலைக்கப்பண்ணி என்னை ஆட்கொள்வாயாக.*

57. பாடும் படிக்குப் பதம்பெற வரும்பாடு
படநினைவ தெக்காலமோ
பாவையர்க ணேயமொரு போதுமுத வாதெனும்
பண்பணைவ தெக்காலமோ
ஆடுமர வைப்பிடித் தாடாது கூண்டிடை
யடைத்திடுவ தெக்காலமோ
அன்மேனி யந்தகன் செயலெனக் கயலென
வடங்கியுற லெக்காலமோ
மாடுதே டித்தேடி யலையாது நின்சரண
வாழ்வெய்த லெக்காலமோ
வாய்த்தசன் மம்பழுது படுமோ வெனத்தின
மயங்குமென் முன்புவந்து

தேடரிய சிற்ககன வருணிறுவி யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

பாடும் படிக்குப் பதம்பெற அரும்பாடு
பட நினைவது எக்காலமோ
பாவையர்கள் நேயம் ஒரு போதும் உதவாது எனும்
பண்பு அணைவது எக்காலமோ
ஆடும் அரவைப் பிடித்து ஆடாது கூண்டிடை
அடைத்திடுவது எக்காலமோ
அல்மேனி அந்தகன் செயல் எனக்கு அயல் என
அடங்கி உறல் எக்காலமோ
மாடு தேடித் தேடி அலையாது நின் சரண
வாழ்வு எய்தல் எக்காலமோ
வாய்த்த சன்மம் பழுதுபடுமோ எனத் தினம்
மயங்கும் என் முன்பு வந்து
தேடு அரிய சிற்ககன அருள் நிறுவி ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*என்போல் பெற்றவர்கள் இல்லை என்று பிறர் புகழும்படி நின் திருவடி பெறுவதற்கு அரிய முயற்சி செய்ய எண்ணுவது எக்காலமோ? எக்காலத்திலும் பெண்கள் உறவு கூடாது என்னும் பண்பு கூடுவது எக்காலமோ? உள்ளும் புறமும் ஆடும் பாம்பைப் போலத் திரியும் மூச்சை உள்ளத்தில் அடைப்பது எக்காலமோ? அல்லார்ந்த மேனியொடு கண்டு கண்பிறை எயிற்று ஆபாச வடிவமான அந்தகா! நீ ஒரு பகட்டால் பகட்டுவது "அடாதடா காசு நம்பால் செல்லாதடா" என்று பேசும் வன்மையும், அவன் அடங்கிச் செல்லும் மென்மையும் வருதல் எக்காலமோ? பொருளையே எப்போதும் தேடி அலையாது நினது*

*திருவடி வாழ்வு பெறுதல் எக்காலமோ? இப்போது வாய்த்துள்ள இப்பிறவி வீண்படுமோ என்று நாள்தோறும் மயங்கும் என்முன்பு வந்தருளித் தேடிப் பெறுவதற்கு அரிய ஞான வெளியருளை என்பால் நிலைக்கப்பண்ணி என்னை ஆட்கொள்வாயாக.*

58. காற்றுக் கயிற்றினின் நாடுமிப் பாவைபொய்க்
கனவாத லெக்காலமோ
காயகற் பங்குளிகை தேடியலை யாதுசிவ
கற்பமுண லெக்காலமோ
தோற்றங்கள் யாவையும் விரித்துச் சுருக்குகின்ற
சூதறிவ தெக்காலமோ
சொல்லரிய வாறத்து வாவுங் கடக்குமொரு
தொழிலேற லெக்காலமோ
மாற்றமி லதீதசிவ ஞானநிலை யாளரடி
வந்திப்ப தெக்காலமோ
வாய்த்தசன் மம்பழுது படுமோ வெனத்தின
மயங்குமென் முன்புவந்து
சீற்றமறு மன்பர்கரு தருணிறுவி யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

காற்றுக் கயிற்றில் நின்று ஆடும் இப்பாவை பொய்க்
கனவு ஆதல் எக்காலமோ
காயகற்பம் குளிகை தேடி அலையாது சிவ
கற்பம் உணல் எக்காலமோ
தோற்றங்கள் யாவையும் விரித்துச் சுருக்குகிற
சூது அறிவது எக்காலமோ
சொல் அரிய ஆறு அத்துவாவும் கடக்கும் ஒரு
தொழில் ஏறல் எக்காலமோ
மாற்றம்இல் அதீத சிவஞானநிலையாளர் அடி
வந்திப்பது எக்காலமோ

**வாய்த்த சன்மம் பழுதுபடுமோ எனத் தினம்**
**மயங்கும் என் முன்பு வந்து**
**சீற்றம் அறும் அன்பர் கருது அருள் நிறுவி ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*மூச்சுக்காற்றாகிய கயிற்றின்மேல் நின்றாடும் பாவையான இந்த உடம்பு கனவுபோல அழிவது எக்காலமோ? நீண்டநாள் வாழும் ஆசையால் காயகற்பம், குளிகைகளைத் தேடி அலையாமல் சிவமாகிய மருந்து உண்ணல் எக்காலமோ? காணப்படும் பொருள்களைப் பெருகும்படி படைத்துப் பின் அவைகளை ஒடுக்குகின்ற விரகு அறிவது எக்காலமோ? கூறுவதற்கு அரிய மந்திரம், பதம், வர்ணம், புவனம், தத்துவம், கலை என்ற ஆறு அத்துவாக்களையும் தாண்டும் செயல் ஓங்குவது எக்காலமோ? பேச்சுக்கு இடம் அற்ற கடந்த சிவஞான நிலை அடைந்தவர்கள் திருவடியைத் தொழுவது எக்காலமோ? இப்போது வாய்த்துள்ள இப்பிறவி வீண்படுமோ என்று நாள்தோறும் மயங்கும் என்முன்பு வந்தருளிச் சினத்தை அறுத்த அடியவர்கள் கருதுகின்ற அருளை என்பால் நிலைக்கப்பண்ணி என்னை ஆட்கொள்வாயாக.*

59. காமாதி களைவிட் டிருக்குமிய மத்திற்
கருத்துறுவ தெக்காலமோ
கருத்திலெழு வாசனை யடக்கலெனு நியமநிலை
கைக்கொள்வ தெக்காலமோ
பேமா முபாதியோ ரேழுமில் லாதனம்
பெற்றமர்வ தெக்காலமோ
பிராணபந் தனமாகு மனநிரோ தனநன்கு
பேணியுற லெக்காலமோ

மாமா சறும்படி பிரத்தியா காரநிலை
மன்னிடுவ தெக்காலமோ
வாய்த்தசன் மம்பழுது படுமோ வெனத்தின
மயங்குமென் முன்புவந்து
சீமே வதீதர்கரு தருணிறுவி யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

காமஆதிகளை விட்டு இருக்கும் இயமத்தில்
கருத்து உறுவது எக்காலமோ
கருத்தில் எழுவாசனை அடக்கல் எனும் நியம நிலை
கைக் கொள்வது எக்காலமோ
பேம் ஆம் உபாதி ஓர் ஏழும் இல் ஆதனம்
பெற்று அமர்வது எக்காலமோ
பிரணபந்தனம் ஆகும் மனநிரோதனம் நன்கு
பேணி உறல் எக்காலமோ
மாமாசு அறும்படி பிரத்தியாகார நிலை
மன்னிடுவது எக்காலமோ
வாய்த்த சன்மம் பழுதுபடுமோ எனத் தினம்
மயங்கும் என் முன்பு வந்து
சீமேவு அதீதர் கருது அருள் நிறுவி ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*காமம், வெகுளி, மயக்கம் ஆகியவைகளை விட்டு நீங்குவது எனப்படும் (சிவஞான இராசயோகத்தின் முதல் உறுப்பாகிய) 'இயமம்' என்னும் நெறியில் என் கருத்து படிவது எக்காலமோ? உயிரை அழுக்குப்படுத்தும் தீயச்செய்திகள் தோன்றுமாயின், அவ்வாறு தோன்றிய பொழுதே அவற்றை அடக்கித்தன் கொள்கையையே மேற்கொண்டு ஒழுகுதலாகிய நியம நிலையைக்*

*கைக்கொள்வது எக்காலமோ? அச்சந்தரும் வேதனைகளாகிய பொய்யை, மெய் என்னும் அறியாமை, பொய்யுரைத்தல், அயர்வு, மூர்ச்சை, ஆசையை மறைத்தல், பிறவுயிர்களை வருத்தும் எண்ணம், அச்சம் என்ற ஏழும் இல்லாத ஆதனநிலை பெற்று அமர்வது எக்காலமோ? கடபடாதிகளை இச்சித்து அவ்விச்சையைத் தன்னகத்தே தங்கவைத்துக் கொண்டு அது நிறைவேறுவதற்காக மேன்மேலும் காற்றைப்போலச் சுழலுகின்ற மனத்தை ஓங்கவிடாமல் ஒடுக்கம் பெறும்படி இதயதாமரையில் அடைக்கும் நெறியாய். (உயிர் மூச்சைக் கட்டும் நெறியாயும்) உள்ள நிலையினைப் பேணிவருதல் எக்காலமோ? பெருத்த அழுக்கை நீக்கும் நெறியாய், மெய், வாய், கண், மூக்குச் செவி என்னும் ஞானேந்திரியங்களை மனத்தோடு சேர்ப்பதாய் உள்ள பிரத்தியாகார நிலை நிலைபெறுவது எக்காலமோ? இப்போது வாய்த்துள்ள இப்பிறவி வீண்படுமோ என்று நாள்தோறும் மயங்கும் என்முன்பு வந்தருளி வீட்டுப் பேற்றை (கடந்த) பெரியோர்கள் கருதுகின்ற அருளை என்பால் நிலைக்கப்பண்ணி என்னை ஆட்கொள்வாயாக.*

60. விடயவா தனைகெடுத் துன்னரிய தாரணையின்
மேவியிட லெக்காலமோ
மிளிர்கந்த தெய்வத்தை முன்னொரு தியானத்தில்
விரிகின்ற தெக்காலமோ
தடையற்ற சுகநிருவி கற்பச் சமாதியிற்
சயனிப்ப தெக்காலமோ
சைவசன் மார்க்கமுடி வுற்றோ மெனுங்களி
தலைக்கேற லெக்காலமோ
வடகயிலை தென்கயிலை யிறைவரா சீர்வாதம்
வந்தணைவ தெக்காலமோ
வாய்த்தசன் மம்பழுது படுமோ வெனத்தின
மயங்குமென் முன்புவந்து

திடஞான நிலையான வருணிறுவி யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

விடய வாதனை கெடுத்து உன் அரிய தாரணையில்
மேவி இடல் எக்காலமோ
மிளிர்கந்த தெய்வத்தை முன் ஒரு தியானத்தில்
விரிகின்றது எக்காலமோ
தடையற்ற சுகநிருவி கற்பச் சமாதியில்
சயனிப்பது எக்காலமோ
சைவசன்மார்க்கம் முடிவு உற்றோம் எனும் களி
தலைக்கு ஏறல் எக்காலமோ
வடகயிலை தென்கயிலை இறைவர் ஆசீர்வாதம்
வந்து அணைவது எக்காலமோ
வாய்த்த சன்மம் பழுதுபடுமோ எனத் தினம்
மயங்கும் என் முன்பு வந்து
திடஞான நிலையான அருள் நிறுவி ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*விடயவாதனை விகற்பமற நிறுவுதலாய் நினைப்பதற்கு அரிய தாரணையைப் பொருந்துதல் எக்காலமோ? விளங்கும் கந்தக்கடவுளைச் சிந்திக்கும் ஒப்பற்ற தியானத்தில் படர்வது எக்காலமோ? தடையில்லாத இன்பமான (உள் என்பதும் புறம் என்பதும் இல்லாமல் எங்கும் செறிந்து உள்ள சிவச்சோதியில் அழுந்திச் சமமாய் நிற்றல் ஆகிய) நிருவிகற்ப சமாதியில் நான் ஆழ்வது எக்காலமோ? சைவ சன்மார்க்கம் கூறும் முடிவை நான் அடைந்தேன் என்று மகிழ்ச்சி மீக்கூர்தல் எக்காலமோ? இப்போது வாய்த்துள்ள இப்பிறவி வீண்படுமோ என்று நாள்தோறும் மயங்கும் என்முன்பு*

*வந்தருளி உறுதியான ஞானநிலையாகிய அருளை என்பால் நிலைக்கப்பண்ணி என்னை ஆட்கொள்வாயாக.*

*(ஸ்ரீமத் சுவாமிகள் **61ஆம் பாடல் முதல் 70ஆம் பாடல்** வரை **அடியார் பெருமை**யும் ஞான ஒழுக்கமும் கூறியருளுகின்றார்கள்).*

61. தாணுநிழல் கொண்டதிரு நந்திதரு நன்னெறி
தனக்குநா னியைவதென்றோ
சனற்குமர முனிசத்திய ஞானதரி சனிபரஞ்
சவியுண்மை யுணர்வதென்றோ
மாணுடைய மெய்கண்ட தேவர்பே ரருணந்தி
வளர்கருணை யெய்தலென்றோ
மறைஞான தேசிக ருமாபதி சிவாசாரி
மார்க்கமதி பெறுவதென்றோ
ஊணசை துறந்தரு ணமச்சிவா யப்பிரபு
வுற்றவழி நண்ணலென்றோ
உயிரறி விலாவேழை யறிகிலே னுன்னையே
யுள்ளபடி நம்பினேனால்
சேணமுதர் பேணரிய தெய்வமே யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

தாணுநிழல் கொண்ட திரு நந்திதரு நன்நெறி
தனக்கு நான் இயைவது என்றோ
சனற்குமர முனி சத்திய ஞான தரிசனி பரஞ்
சவி உண்மை உணர்வது என்றோ
மாண் உடைய மெய்கண்ட தேவர்பேர் அருள்நந்தி
வளர்கருணை எய்தல் என்றோ
மறை ஞான தேசிகர் உமாபதி சிவாசாரி
மார்க்க மதி பெறுவது என்றோ

**ஊண்நசை துறந்துஅருள் நமச் சிவாயப் பிரபு**
**உற்றவழி நண்ணல் என்றோ**
**உயர் அறிவு இலா ஏழை அறிகிலேன் உன்னையே**
**உள்ளபடி நம்பினேன் ஆல்**
**சேண் அமுதர் பேண அரிய தெய்வமே ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*சிவபெருமானின் திருவுருவம் கொண்ட திருநந்தி தேவர் அருளிய நன்னெறியிலே நான் பொருந்துவது என்றோ? சனற்குமரர், சத்திய ஞானதரிசனி, பரஞ்சோதி ஆகியோர் கண்ட உண்மையை நான் உணர்வது என்றோ? மாண்பு பொருந்திய மெய்கண்டதேவர், பேரருள் கொண்ட அருணந்தி சிவம் ஆகியவரின் மேம்பட்ட அருளைப் பெறுவது என்றோ? மறைஞான சம்பந்தர், உமாபதி சிவம் ஆகியோர் வழியின் ஞானத்தைப் பெறுவது என்றோ? உணவு விருப்பத்தைத் துறந்தருளிய அருள் நமச்சிவாயப்பிரபு சேர்ந்த வழியை அடைவது என்றோ? பேரறிவு வாயாத ஏழையாகிய நான் அறிகிலேன். உன்னையே கதியென்று உள்ளபடி நம்பி உள்ளேன். விண்ணுலகத்தில் உள்ள தேவர்கள் போற்றும் அருமையான தெய்வமே! என்னை ஆட்கொள்வாயாக.*

*(இப்பாடலின் கீழ் சுவாமிகள் அருளியுள்ள கருத்து மனத்தில் கொள்ளத்தக்கது அது வருமாறு:-).*

*திருநந்திதேவர், சனற்குமரர், சத்திய ஞானதரிசனி, பரஞ்சவி, மெய்கண்டார், அருணந்தி, மறைஞானகுரு, உமாபதி, நமச்சிவாயர் என்பார் வழிவந்ததாகக் கூறப் படும் இலிகிதங்களுள் "நன்னெறியும்", "உண்மையும்", "வளர் கருணையும்", "நெறிப் பட்டமதியும்", "நயம் பொருந்திய வழியும்" உள்ளனவற்றையே லீடாலீட*

*நியாயத்தால் ஆசிரியர் அங்கீகரித்தமை இப்பாட்டில் காணப்படுகின்றது. இதனால் அவ்வளவும் அங்கீகரித்தார் என்றல் கூடாது. இனிவரும் செய்யுள்களில் உள்ள அங்கீகாரங்கட்கும் இந்நியாயம் கோடற்பாலதாம். ஒவ்வொருவர் கொள்கைகளுள்ளும் யாது பேதம் இருப்பினும் இறைவன் திருநாமத்தை உச்சரித்து அவனை முன்னி நின்ற சிவனடியாராகலின் சிவனுக்கும் குமாரனுக்கும் பேதமின்று எனும் துணிபு ஆசிரியர் மாட்டு உளதாகலின் அன்னோர் பெயர்களை மேம்பாடுடைமையில் எடுத்துக் கொண்டு நியாயம் கூற வந்தார் என்பதும் இங்கே குறிப்பாக உணரக் கிடக்கின்றது. செய்யுள் 64ல் "உய்யுநெறி நின்ற அடியார் எவரும்" என்றமையும் இக்குறிப்பை ஆதரிக்குமே 63-ம் பிரபந்தமுதற்பாட்டும் இங்குக் கவனிக்கற்பாற்றே.*

62. சற்குணர் தொழுஞ்சிவப் பிரகாச சித்தரது
தண்ணளி பொருந்தலென்றோ
தகைநமச் சிவாயரரு ளுளசிவப் பிரகாசர்
தங்கிருபை சேர்வதென்றோ
நற்கலைச் சிறுமுனிவர் திருவருட் டுணையென்னு
ணலியாது நிமிர்வதென்றோ
ஞானவருண் ஞானசம் பந்தர்வா கீசர்பத
நாடிநனி நிற்பதென்றோ
உற்பவ மொழிந்தவன் றொண்டர்தங் கருணைக்
குரித்தாய் நிலைப்பதென்றோ
உயரறி விலாவேழை யறிகிலே னுன்னையே
யுள்ளபடி நம்பினேனால்
சிற்சபையி னிர்த்தமிடு தெய்வமே யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

**சற்குணர் தொழும் சிவப்பிரகாச சித்தர்அது**
**தண் அளி பொருந்தல் என்றோ**
**தகை நமச்சிவாயர் அருள்உள சிவப்பிரகாசர்**
**தம் கிருபை சேர்வது என்றோ**
**நற்கலைச் சிறுமுனிவர் திருவருள் துணை என் உள்**
**நலியாது நிமிர்வது என்றோ**
**ஞான அருள் ஞானசம்பந்தர் வாகீசர் பதம்**
**நாடி நனி நிற்பது என்றோ**
**உற்பவம் ஒழிந்தவன் தொண்டர்தம் கருணைக்கு**
**உரித்தாய் நிலைப்பது என்றோ**
**உயர் அறிவு இலா ஏழை அறிகிலேன் உன்னையே**
**உள்ளபடி நம்பினேன் ஆல்**
**சிற்சபையில் நிர்த்தம் இடு தெய்வமே ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*உமாபதி சிவத்தின் முதல் மாணாக்கராய முன்சொன்ன* ***அருள்நமச்சிவாய தேசிகர்பால் உபதேசம்*** *பெற்றவரும் நல்லோர் தொழ விளங்கியவரும் ஆகிய* ***சித்தர் சிவப்பிரகாசரது*** *குளிர்ந்த அருள் என்மாட்டுப் பொருந்துவது என்றோ? இவர்பால் உபதேசம் பெற்றவரும்,* ***மூவலூரில்*** *வேளாள குல திலகமாய்ப் பிரமசரியத்தில் தலைநின்ற தகைமையுடையவரும், திருவாவடுதுறை ஆதீனத்தை நிலைநாட்டினவரும், ஆகிய* ***நமச்சிவாய மூர்த்திகளிடம்*** *அருளுரை பெற்றவரும், சிதம்பரத்தில் கூத்தப்பெருமான் வழிபாட்டுக்கு வைணவர் விளைத்த இடையூற்றைக் களைந்து, அங்கு வீற்றிருந்து நிட்டை கூடினவருமாய* ***சிவப்பிரகாசருடைய*** *அருளை அடைவது என்றோ? நல்ல கலைஞானங்கூடிய சிறுமுனிவராகிய சண்டேசுவர நாயனாருடைய திருவருள்த்துணை என்னுள் நலிவு கொள்ளாது ஓங்குவது என்றோ? உமாதேவியால்*

*ஞானப்பால் ஊட்டப்பெறும் திருவருள் கைவரப்பெற்ற திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசர் பெருமான் ஆகியோர் திருவடி மலர்களை நாடி நான் நன்கு நிலைப்பதென்றோ? பிறவிப்பிணி நீங்கியவன் தொண்டராகிய சுந்தரமூர்த்தி நாயனாரின் அருளுக்கு உரியவனாய் நான் நிலைப்பது என்றோ? பேரறிவு வாயாத ஏழையாகிய நான் அறிகிலேன். உன்னையே கதியென்று உள்ளபடி நம்பியுள்ளேன். சிற்றம்பலத்தில் திருக்கூத்து ஆடும் தெய்வமே! என்னை ஆட்கொள் வாயாக.*

63. பரமுத்த னானதிரு வாதவூ ரன்சென்ற
பாதையைத் தெரிவதென்றோ
பட்டினத் துப்பிள்ளை பத்திரகிரி யார்நின்ற
பண்பையினி துணர்வதென்றோ
திருவுளத் திற்கினிய வருணகிரி நக்கீரர்
சென்றநெறி சேர்வதென்றோ
சேக்கிழார் நம்பியதி ராவடிகள் கல்லாடர்
திருநெறியி னிற்பதென்றோ
உரவிளம் பெருமா னறுங்கபிலர் நற்பரண
ருற்றநடை பற்றலென்றோ
உயரறிவி லாவேழை யறிகிலே னுன்னையே
யுள்ளபடி நம்பினேனால்
தெரிவரிய வறிவான தெய்வமே யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

பரமுத்தன் ஆன திருவாதவூரன் சென்ற
பாதையைத் தெரிவது என்றோ
பட்டினத்துப் பிள்ளை பத்திரகிரியார் நின்ற
பண்பை இனிது உணர்வது என்றோ

**திருவுளத்திற்கு இனிய அருணகிரி நக்கீரர்**
**சென்ற நெறி சேர்வது என்றோ**
**சேக்கிழார் நம்பி அதிராஅடிகள் கல்லாடர்**
**திருநெறியில் நிற்பது என்றோ**
**உர இளம்பெருமான் நறும் கபிலர் நற்பரணர்**
**உற்றநடை பற்றல் என்றோ**
**உயர் அறிவு இலா ஏழை அறிகிலேன் உன்னையே**
**உள்ளபடி நம்பினேன் ஆல்**
**தெரிவு அரிய அறிவுஆன தெய்வமே ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*பரமுத்தராக விளங்கிய திருவாதவூரரான மாணிக்கவாசக சுவாமிகள் ஒழுகிய நெறியை அறிவது என்றோ? 'பார் அனைத்தும் பொய்' என்று ஒரு கணத்திலே துறந்துவிட்ட பட்டினத்துப் பிள்ளையார், பத்திரகிரியார் ஆகியோர் நின்ற பண்பை நன்கு உணர்வது என்றோ? உனது திருவுள்ளத்துக்கு இனியவராய திருப்புகழ் முனிவர் அருணகிரிநாதரும், திருமுருகாற்றுப் படை அருளிய நக்கீரர் பெருமானும் சென்ற நெறியில் நான் சேர்வது என்றோ? 'இறைவனே உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுத்த திருத்தொண்டர் புராணம் அருளிய சேக்கிழார் பெருமான், மூத்த பிள்ளையார் அருள்பெற்ற நம்பியாண்டர் நம்பி, அதிராவடிகள், கல்லாடர் ஆகியோர் திருநெறியில் நான் நிலைப்பது என்றோ? உறுதிமிக்க இளம்பெருமானடிகள், நறிய கபிலர், நல்ல பரணர் சென்ற நடையைப் பற்றுவது என்றோ? பேரறிவு வாயாத ஏழையாகிய நான் அறிகிலேன். உன்னையே கதியென்று உள்ளபடி நம்பியுள்ளேன். ஆராய்ந்து அறிவதற்கரிய அறிவான தெய்வமே! என்னை ஆட்கொள்வாயாக.*

64. வையந் துறந்தசிவ வாக்கியர் குறட்புலவர்
மாணருள் விரும்பலென்றோ
வண்மைகெழு தாயுமா னவரருட் கண்ணுடைய
வள்ளலருள் கொள்ளலென்றோ
சைவபா டியநீல கண்டரர தத்தரொரு
சம்புவரு ளுறுவதென்றோ
சாரா வளிக்குரு மணித்திரய தேசிகர்
தடங்கருணை மேவலென்றோ
உய்யுநெறி நின்றவடி யாரெவரு மென்னுடைய
வுள்ளத்து ளொளிர்வதென்றோ
உயரறி விலாவேழை யறிகிலே னுன்னையே
யுள்ளபடி நம்பினேனால்
தெய்வங்கள் புகழருட் டெய்வமே யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

வையம் துறந்த சிவவாக்கியர் குறள் புலவர்
மாண் அருள் விரும்பல் என்றோ
வண்மைகெழு தாயுமானவர் அருள் கண்ணுடைய
வள்ளல் அருள் கொள்ளல் என்றோ
சைவபாடிய நீலகண்டர் அரதத்தர் ஒரு
சம்பு அருள் உறுவது என்றோ
சாராவளிக் குருமணித் திரய தேசிகர்
தடம் கருணை மேவல் என்றோ
உய்யுநெறி நின்ற அடியார் எவரும் என்னுடைய
உள்ளத்துள் ஒளிர்வது என்றோ
உயர் அறிவு இலா ஏழை அறிகிலேன் உன்னையே
உள்ளபடி நம்பினேன் ஆல்
தெய்வங்கள் புகழ் அருள் தெய்வமே ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*'கண்டது பொய்' என்றும் 'அகண்டாகார சிவம்' மெய் என்றும் கூறியவரும் பிறக்கும்போதே 'சிவா' என்ற ஒலியுடன் வந்தவருமாகிய* ***சிவவாக்கியர்****, திக்கெட்டும் இசைபரப்பும்* ***திருக்குறள்*** *அருளிய* ***திருவள்ளுவ நாயனார்*** *ஆகியோரின் மாட்சிமையுடைய அருளை விரும்புவது என்றோ?* ***ஞானவளம் நிரம்பிய தாயுமானவ சுவாமிகள்****, சீகாழியில் தோன்றிய அருள் நலம், கைவந்து* ***'ஒழிவிலொடுக்கம்'*** *என்ற நூலாக்கிய* ***கண்ணுடைய வள்ளல்*** *ஆகியோரின் அருள்கொள்ளல் என்றோ? வியாசர் அருளிய பிரமசூத்திரத்துக்குச் 'சிவபரம்' துலங்கும் பாடியமாகிய* ***ஸ்ரீகண்டபாஷ்யம்*** *அருளிய* ***நீலகண்ட சிவாச்சாரியார்****, வைணவராகத் தோன்றிப் பழுக்கக் காய்ச்சிய இரும்பு நாற்காலியின் மேல் எழுந்தருளிச் சிவபரத்துவத்தை நிலைநாட்டிய* ***அரதத்தாசாரியார்****, சித்தாந்தப் பிரகாசிகை அருளிய ஒப்பற்ற சர்வாத்மசம்பு ஆகியோரின் அருளை அடைவது என்றோ?* ***சித்தாந்த சாராவளி*** *அருளிய குருமணியாகிய* ***திரிலோசன சிவாசாரியாரின்*** *பரந்த அருளைப் பொருந்துதல் என்றோ? உய்யும் நெறியில் ஒழுகிய அடியவர்கள் யாவரும் என் உள்ளத்துள் விளங்குவது என்றோ? பேரறிவு வாயாத ஏழையாகிய நான் அறிகிலேன். உன்னையே கதியென்று உள்ளபடி நம்பியுள்ளேன். தேவர்கள் யாவரும் போற்றும் அருள் நிறைந்த தேவதேவனே! என்னை ஆட்கொள்வாயாக.*

65. சென்றதையும் வருவதையு முன்னாவொ ருறுதியென்
சிந்தையின் முளைப்பதென்றோ
தெய்வமெனு மொருபித் தனாரதங் கொண்டன்பர்
செயல்பேணி நிற்பதென்றோ
கன்றுகற் றாவகன் றாலென்ன நின்றுனைக்
கருதினா னழுவதென்றோ
கையைப் பிடித்துன்றன் மெய்ம்மைப் பதிக்குக்
கடத்திநீ போவதென்றோ

ஒன்றிற்கு மஞ்சற்க வென்றுநீ சொல்லுமோ
ருறுதியுரை கேட்பதென்றோ
உயரறி விலாவேழை யறிகிலே னுன்னையே
யுள்ளபடி நம்பினேனால்
சென்றுவரு மஞரிலார் தெய்வமே யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

சென்றதையும் வருவதையும் உன்னா ஓர் உறுதிஎன்
சிந்தையில் முளைப்பது என்றோ
தெய்வம் எனும் ஒருபித்து அனாரதம் கொண்டு அன்பர்
செயல் பேணி நிற்பது என்றோ
கன்று கற்றா அகன்றால் என்ன நின்று உனைக்
கருதிநான் அழுவது என்றோ
கையைப் பிடித்து உன்றன் மெய்ம்மைப் பதிக்குக்
கடத்தி நீ போவது என்றோ
ஒன்றிற்கம் அஞ்சற்க என்று நீ சொல்லும் ஓர்
உறுதி உரை கேட்பது என்றோ
உயர் அறிவு இலா ஏழை அறிகிலேன் உன்னையே
உள்ளபடி நம்பினேன் ஆல்
சென்றுவரும் அஞர்இலார் தெய்வமே ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*பயனின்றி கழிந்த காலத்தையும், இனிப் பயன்கொள்ளவரும் எதிர்காலத்தையும் எண்ணிப் பிறவிக் கடலைக் கடக்கவேண்டும் என்ற ஓர்உறுதி என் சிந்தையில் தோன்றுவது என்றோ? தெய்வம் என்னும் ஒருபித்து எப்போதும் கொண்டு அடியவர்களின் ஒழுக்கத்தைப் பின்பற்றி நிற்பது என்றோ? "தன்னை ஈன்ற பசு பிரிந்து சென்றுவிட்ட கன்றைப்போல" உன்னையே எண்ணி நான் அழுவது என்றோ? எனது கைகளை நீ நன்கு*

*பற்றிக்கொண்டு உனது அழிவற்ற உலகுக்கு என்னைக் கடத்திப் போவது என்றோ? 'நீ ஒன்றுக்கும் அஞ்சாதே' என்று உன் திருவாய் மலரிலிருந்து வரும் உறுதிமொழியை நான் கேட்பது என்றோ? பேரறிவு வாயாத ஏழையாகிய நான் அறிகிலேன். உன்னையே கதியென்று உள்ளபடி நம்பியுள்ளேன். இறப்பு பிறப்பு என்ற துன்பத்தைக் கடந்துள்ள ஞானிகள் தொழும் தெய்வமே! என்னை ஆட்கொள்வாயாக.*

66. மதபேத வம்புகளு மானாபி மானமு
மறந்தவறிவை நேடலென்றோ
மனைவியுந் தமருமலை புனலிலெழு குமிழியென
மனதுறுதி கோடலென்றோ
இதயவெளி நடுவான பொருளைச் சதாகால
மிதயத்தில் வைப்பதென்றோ
இருவினைத் தொடர்பில்வரு முடலைக் கடந்தெண்ணு
மெணமற் றிருப்பதென்றோ
உதகிபோன் மெய்ஞ்ஞான வெள்ளமது பொங்கவதி
னுழைமூழ்கி மகிழ்வதென்றோ
உயரறி விலாவேழை யறிகிலே னுன்னையே
யுள்ளபடி நம்பினேனால்
சிதடரறி யாதபர தெய்வமே யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

மதபேத வம்புகளும் மானஅபி மானமும்
மறந்து அறிவை நேடல் என்றோ
மனைவியும் தமரும் அலைபுனலில் எழுகுமிழி என
மனது உறுதி கோடல் என்றோ
இதயவெளி நடுவான பொருளைச் சதா காலம்
இதயத்தில் வைப்பது என்றோ

இருவினைத் தொடர்பில் வரும் உடலைக் கடந்து எண்ணும்
எணம் அற்று இருப்பது என்றோ
உததிபோல் மெய்ஞ்ஞான வெள்ளம் அது பொங்க அதின்
உழை மூழ்கி மகிழ்வது என்றோ
உயர் அறிவு இலா ஏழை அறிகிலேன் உன்னையே
உள்ளபடி நம்பினேன் ஆல்
சிதடர் அறியாத பரதெய்வமே ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*மதவேற்றுமைச் சண்டைகளையும், மானம், அபிமானத்தையும் மறந்து ஞானத்தை நாடி நிற்பது என்றோ? மனைவி மற்றுமுள்ள சுற்றத்தார் யாவரும் "அலைநிரம்பிய நீரில் தோன்றும் குமிழிகள்" என்று மனத்தில் உறுதி கொள்ளுவது என்றோ? இருதயவெளி நடுவில் உள்ள பொருளை என்றும் என் சிந்தையில் பொருத்துவது என்றோ? நல்வினை, தீவினை ஆகிய இருவினைத் தொடர்பால் உண்டான இந்த உடல் பற்றிய செய்திகளைக் கடந்து எப்போதும் எதையாவது எண்ணிக்கொண்டே இருக்கும் நிலை நீங்கிச் சும்மா இருப்பது என்றோ? மெய்ஞ்ஞான வெள்ளம் கடல் போலப் பொங்கி எழ நான் அதில் ஆழ்ந்து மகிழ்வது என்றோ? பேரறிவு வாயாத ஏழையாகிய நான் அறிகிலேன். உன்னையே கதியென்று உள்ளபடி நம்பியுள்ளேன். ஞானக்கண் இல்லாத குருடர் காணாத பரதெய்வமே! என்னை ஆட்கொள்வாயாக.*

67. கோவில்வா விகணல்கு பலனுக்கு மேனல்கொர்
கோவிலுண் ணுழைவதென்றோ
கொடிசெடி மரத்தலர்கள் கொய்யாம லமைதியங்
குசுமமே கோடலென்றோ
சேவொளிரு நின்னடியி லதனையர்ச் சித்தெனது
சிந்தைகளி கூர்வதென்றோ

திருவாய் மலர்ந்தெமக் கடிமைநீ யென்றஙன்
செப்பியருள் புரிவதென்றோ
ஓவிய வுருப்போல வாயிடை யிருந்துநா
னுன்னொடு விராவலென்றோ
வுயரறி விலாவேழை யறிகிலே னுன்னையே
யுள்ளபடி நம்பினேனால்
சீவர்கள் பழிச்சுபர தெய்வமே யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

கோவில் வாவிகள் நல்கு பலனுக்கு மேல் நல்கு ஓர்
கோவில்உள் நுழைவது என்றோ
கொடி செடி மரத்து அலர்கள் கொய்யாமல் அமைதி அம்
குசுமமே கோடல் என்றோ
சே ஒளிரும் நின் அடியில் அதனை அர்ச்சித்து எனது
சிந்தை களி கூர்வது என்றோ
திருவாய் மலர்ந்து எமக்கு அடிமை நீ என்று அஙன்
செப்பி அருள்புரிவது என்றோ
ஓவிய உருப்போல ஆயிடை இருந்துநான்
உன்னொடு விராவல் என்றோ
உயர் அறிவு இலா ஏழை அறிகிலேன் உன்னையே
உள்ளபடி நம்பினேன் ஆல்
சீவர்கள் பழிச்சு பரதெய்வமே ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*கோவில், குளம் முதலியவைகளைக் காண்பதாலும், நீராடுவதாலும், பெறும் பயனிலும் மேம்பட்ட பயனைத் தரும் ஒப்பற்ற* ***'தகராலயம்'*** *எனப்படும் கோவிலை அடைவது என்றோ? மரம், செடி, கொடி முதலியவற்றில் உள்ள மலர்களைப் பறிக்காமல் அமைதி என்ற அழகிய*

*மலரைக் கைக்கொள்வது என்றோ? சிவந்து விளங்கும் உனது திருவடியில் அதனையிட்டு அருச்சனை செய்து உன் உள்ளம் மகிழ்தல் என்றோ? நினது திருவாய் மலர்ந்து என்னை உன் அடிமை என்று கூறி அருள் புரிவது என்றோ? சித்திரத்தில் எழுதிய பாவைபோல நான் அங்ஙனமிருந்து உன்னோடு கலத்தல் என்றோ? பேரறிவு வாயாத ஏழையாகிய நான் அறிகிலேன். உன்னையே கதி என்று உள்ளபடி நம்பியுள்ளேன். உயிர்த்தொகைகள் யாவும் தொழும் பரதெய்வமே! என்னை ஆட்கொள்வாயாக.*

68. பொற்புறு சிவானந்த பூமியி லிருக்குமோர்
புதையலை யெடுப்பதென்றோ
புகரற்ற பூரணாதி லேகியஞ் செய்துமுப்
போதும் புசிப்பதென்றோ
விற்புருவ விழிசிவந் திடலகிரி யேறியவ்
விழிசெருகி நிற்பதென்றோ
விசமநின் மலசங்க ரகிதநிர்க் குணபரம
வெளியிற் படுப்பதென்றோ
உற்பவப் பிணிதணந் திடையறா வானந்த
வுண்மையொ டளாவலென்றோ
உயரறி விலாவேழை யறிகிலே னுன்னையே
யுள்ளபடி நம்பினேனால்
சிற்பர விலாசசுக தெய்வமே யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

பொற்புஉறு சிவஆனந்த பூமியில் இருக்கும் ஓர்
புதையலை எடுப்பது என்றோ
புகர் அற்ற பூரணாதி லேகியம் செய்து முப்
போதும் புசிப்பது என்றோ
வில்புருவ விழி சிவந்திட லகிரி ஏறி அவ்
விழி செருகி நிற்பது என்றோ

**விசம நின்மல சங்க ரகித நிர்க்குண பரம**
**வெளியில் படுப்பது என்றோ**
**உற்பவப் பிணி தணந்து இடையறா ஆனந்த**
**உண்மையொடு அளவால் என்றோ**
**உயர் அறிவு இலா ஏழை அறிகிலேன் உன்னையே**
**உள்ளபடி நம்பினேன் ஆல்**
**சிற்பர விலாச குகதெய்வமே ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*அழகு நிரம்பிய சிவானந்த பூமியினுள் உள்ள ஒப்பற்ற சுத்தாத்து வித சித்தி என்னும் புதையலை எடுப்பது என்றோ? குற்றமற்ற பூரண ஆதியாகிய லேகியம் செய்து முப்போதும் உண்பது என்றோ? வில்போன்ற புருவத்தை அடுத்த கண்கள் சிவப்பேறும்படி இன்பநெறி ஏறி என்விழிகள் செருகி நிற்பது என்றோ? இணையற்ற நின்மலமாய் எப்பொருளோடும் கூடாததாய்க் குணமற்றதாய் உள்ளபெரிய வெளியிலே நான் கிடப்பது என்றோ? பிறவிநோய் நீங்கி இடையீடில்லாத ஆனந்த உருவான சத்துப்பொருளோடு நான் அளாவுதல் என்றோ? பேரறிவு வாயாத ஏழையாகிய நான் அறிகிலேன். உன்னையே கதியென்று உள்ளபடி நம்பியுள்ளேன். சித்தின்ப பரமான குகதெய்வமே! என்னை ஆட்கொள்வாயாக.*

69. நாமரூ பங்களின் றெங்குநிறை யறிவையே
நாடிநா னழிவதென்றோ
நாற்றச் சரீரத்தை வாட்டித் தவத்தையே
நாளுநனி யீட்டலென்றோ
காமிகட் காகாத வத்துவித பூரணங்
கரிசற்று மிளிர்வதென்றோ
கருதி படிக்குனது கருணைமுகி லென்னைக்
கவிந்துபொழி கின்றதென்றோ

ஊமர்போ லேயிருந் தெதிலுமது வென்றுகண்
டொன்றாக நிற்பதென்றோ
உயரறி விலாவேழை யறிகிலே னுன்னையே
யுள்ளபடி நம்பினேனால்
தேமலர்ச் சரணன்பர் தெய்வமே யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

நாம ரூபங்கள் இன்று எங்கும் நிறை அறிவையே
நாடி நான் அழிவது என்றோ
நாற்றச் சரீரத்தை வாட்டித் தவத்தையே
நாளும் நனி ஈட்டல் என்றோ
காமிகட்கு ஆகாத அத்துவித பூரணம்
கரிசு அற்று மிளிர்வது என்றோ
கருதிய படிக்கு உனது கருணைமுகில் என்னைக்
கவிந்து பொழிகின்றது என்றோ
ஊமர்போலே இருந்து எதிலும் அது என்று கண்டு
ஒன்றாக நிற்பது என்றோ
உயர் அறிவு இலா ஏழை அறிகிலேன் உன்னையே
உள்ளபடி நம்பினேன் ஆல்
தேமலர்ச் சரண் அன்பர் தெய்வமே ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*“ஒருநாமம், ஒருருவம், ஒன்றுமிலார்” என்று மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்தபடி நிலவி எங்கும் நிறைந்த ஞானப்பொருளையே நாடி ‘நான்’ என்பது அழிவது என்றோ? நாற்றம் பொருந்திய இந்த உடலை வாட்டித் தவத்தை நாள்தோறும் மிகுதியாகக் கூட்டுவது என்றோ? காமம் கொண்டவர்கட்குக் கிட்டாத அத்துவித பூரணம் குற்றமற்று விளங்குவது என்றோ? நான் எண்ணியபடி உன் அருள்மேகம் என்னைச் சூழ்ந்து*

*பொழிவது என்றோ? ஊமையைப் போலிருந்து பார்க்குமிடம் எங்கும் ஒருநீக்கமற நிறைகின்ற பரிபூரண ஆனந்தத்தைக் கண்டு ஒன்றி நிற்பது என்றோ? பேரறிவு வாயாத ஏழையாகிய நான் அறிகிலேன். உன்னையே கதியென்று உள்ளபடி நம்பியுள்ளேன். வீட்டுப்பேறாம் "தேன் நிரம்பிய மலரொத்த திருவடிக்கு அடியவர்கள் போற்றும் தெய்வமே!" என்னை ஆட்கொள்வாயாக.*

70. ஆசற்ற சின்முத்தி ரைக்குறியி லொன்றிரண்
டாகாம னிற்பதென்றோ
அங்ஙன மனோநாச நிலைவந்து கைகூடி
யசைவற் றிருப்பதென்றோ
பாசவிரு ளாமிரவு பாறவெறி வருகின்ற
பரிதிதரி சிப்பதென்றோ
பகலிர விலாதசுய நிலைமையிது வாமெனும்
பரிசுநன் குணர்வதென்றோ
ஓசைமணி மண்டப நடுக்கணுற் றங்குள்ள
வுண்மைகண் டேறலென்றோ
உயரறி விலாவேழை யறிகிலே னுன்னையே
யுள்ளபடி நம்பினேனால்
தேசுமிக் குடையபர தெய்வமே யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

ஆசு அற்ற சின்முத்திரைக் குறியில் ஒன்று இரண்டு
ஆகாமல் நிற்பது என்றோ
அங்ஙனம் மனோநாச நிலைவந்து கைகூடி
அசைவற்று இருப்பது என்றோ
பாச இருளாம் இரவு பாற வெளி வருகின்ற
பரிதி தரிசிப்பது என்றோ
பகல் இரவு இலாதசுய நிலைமை இது ஆம் எனும்
பரிசு நன்கு உணர்வது என்றோ

**ஓசைமணி மண்டபம் நடுக்கண் உற்று அங்கு உள்ள**
**உண்மை கண்டு ஏறல் என்றோ**
**உயர் அறிவு இலா ஏழை அறிகிலேன் உன்னையே**
**உள்ளபடி நம்பினேன் ஆல்**
**தேசுமிக்குடைய பரதெய்வமே ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*தட்சணாமூர்த்திப் பெருமான் காட்டிய குற்றமற்ற சின்முத்திரைக்குறியின் உண்மைப்படி ஒன்று எனவோ, இரண்டு எனவோ சொல்ல ஒண்ணாத சுத்தாத்துவைத நிலையில் நிற்பது என்றோ? ஆயிடை மனோநாச நிலை வந்து கைகூடி அசைவற இருப்பது என்றோ? உயிர்களைப் பிணிக்கும் ஆணவமலமாகிய இரவு நீங்க வெளிப் படுகின்ற ஞானசூரியனைக் காண்பது என்றோ? பகலென்பதும் இரவென்பதும் இல்லாத தன்னிலை இதுவேயாகும், என்னும் தன்மையை நான் நன்கு உணர்வது என்றோ? நாதம் எனப்படும் மணி மண்டபத்தின் நடுவை அடைந்து அங்குள்ள மெய்ப்பொருளைக் கண்டு உயர்வது என்றோ? பேரறிவு வாயாத ஏழையாகிய நான் அறிகிலேன். உன்னையே கதியென்று உள்ளபடி நம்பியுள்ளேன். பேரொளியுடைய பரதெய்வமே! என்னை ஆட்கொள்வாயாக.*

*(ஸ்ரீமத் சுவாமிகள் **71ஆம் பாடல் முதல் 80ஆம் பாடல்** வரை **வேதமகா வாக்கியத்தை விளக்கியும், உய்திபெறவும் அருள்புரிக** என்று வேண்டுகின்றார்).*

71. சிங்கலி லதீதசிவ சாதுசங் கத்தினைச்
சேரவருள் புரியொணாதோ
சிவயோக மன்றிமற் றெல்லா மயக்கென்று
தேறவருள் புரியொணாதோ

பங்கமில் லாதவொ ரருட்சத்தி யென்னுளே
பதியவருள் புரியொணாதோ
பார்க்குமிடனெல்லா நிறைந்தசத் தென்னவே
பார்க்கவருள் புரியொணாதோ
இங்கென்று மங்கென்று மில்லாம லெங்கணு
மிருக்கவருள் புரியொணாதோ
என்றுகரு திக்கலுழு மென்னெஞ்சு மகிழுமா
றிறைநீ கடைக்கணித்துத்
திங்கணிகர் போதநனி யுண்டென்னை யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

சிங்கல்இல் அதீத சிவ சாது சங்கத்தினைச்
சேர அருள் புரிய ஒணாதோ
சிவயோகம் அன்றி மற்று எல்லாம் மயக்கு என்று
தேற அருள் புரிய ஒணாதோ
பங்கம் இல்லாத ஓர் அருட்சத்தி என்னுள்ளே
பதிய அருள் புரிய ஒணாதோ
பார்க்கும் இடன் எல்லாம் நிறைந்த சத்து என்னவே
பார்க்க அருள் புரிய ஒணாதோ
இங்கு என்றும் அங்கு என்றும் இல்லாமல் எங்கணும்
இருக்க அருள் புரிய ஒணாதோ
என்று கருதிக் கலுழும் என் நெஞ்சு மகிழுமாறு
இறைநீ கடைக் கணித்துத்
திங்கள் நிகர் போத நனி உண்டு என்னை ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*எல்லாம் கடந்த குறையற்ற சிவனடியார் திருக்கூட்டத்தை நான் சேரும்படி நீ அருள் செய்யக்கூடாதா? மூச்சு அடக்கும் யோகமானது, தேகம் உரம் பெற்று, நெடுங்காலம் எல்லாரும் வியக்கும் சித்திகளைத் தரினும்,*

அந்தத்தேகமும், மூச்சும் சடம் ஆகையால் ஒருகாலத்தில் தேகம் அழிவுக்கு உட்பட்டே முடியும். அவ்வாறு அழிந்தால் மறுபடியும் பிறப்பு வரும். மேலும், மூலாதாரம் முதலிய ஆதாரங்கள்தோறும் "பாம்பு மேலேறிச் செல்வதுபோல" ஏறி ஓரிடம், இறங்க ஓரிடம் அடைவதும் அங்கங்கு உள்ள ஆதார மூர்த்திகள் உருவங்களுள் ஒன்றை மறைத்து ஒன்றைக் காட்டுதலும் காரண சரீர மாயையினுள் அமிழ்ந்திக்கிடத்தலும், மீளத்திரும்பும் வழிச்சாக்கிரம் முதலிய அவத்தைகள் அடைதலும் ஆகிய விகாரங்கள் ஏற்படுதலால் அத்தகைய நெறிகள் எல்லாம் வெறும் மயக்கத்தை விளைப்பனவே. சிவராசயோகம் அவ்வாறன்றித் திருவருளைச் சார்ந்து நிற்றலால் கருவிகளும், தற்போதமும், கழலவும், உயிர் அடங்கி அறிவே உருவாய் இருக்கும் நிலையினை அடையும். அந்நிலைப்படும் உயிர் அந்தத் திருவருளா லேயே உண்மையான சிவசொரூபத்தையும் காணும் என்ற உண்மையைத்தேற நீ அருள் செய்யக்கூடாதா? பங்கம் இல்லாததாய் ஞான ஆசாரியனது திருமேனியிலிருந்து சீடனுள் பிரவேசிப்பதாகிய ஒப்பற்ற அருட்சத்தி (சத்திநிபாதம்) என்னுள் பதியும்படி அருள் செய்யக் கூடாதா? பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் மெய்ப்பொருளையே பார்க்கும்படி அருள் செய்யக் கூடாதா? இவ்விடம் என்றும், அவ்விடம் என்றும் இல்லாமல் எவ்விடத்தும் இருக்கும்படி அருள்புரியக் கூடாதா? என்று எண்ணி அழும் எனது நெஞ்சம் மகிழுமாறு இறைவனாகிய நீ கடைக்கணித்துத் திங்களை ஒத்த போதத்தை நன்கு கொண்டு என்னை ஆட்கொள்வாயாக.

72. ஓவுத லிலாததுலை யொத்தசத் தினிபாத
முறவொரருள் புரியொணாதோ
ஓயாத கவலைகளு முதவாத செய்கைகளு
மோயவருள் புரியொணாதோ

சாவனோ வுய்வனோ வென்றுநினை சஞ்சலந்
தணியவருள் புரியொணாதோ
தத்துவ சமூகந் தணந்தென்னை யறிமதி
தழைக்கவருள் புரியொணாதோ
எவமி லெனக்கறிவ தாநிற்கு முன்னறிவை
யெய்தவருள் புரியொணாதோ
என்றுகரு திக்கலழு மென்னெஞ்சு மகிழுமா
நிறைநீ கடைக்கணித்துத்
தீவிர மறுக்குநிலை வைத்தென்னை யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

ஓவுதல் இலாத துலை ஒத்த சத்திநிபாதம்
உறவொர் அருள் புரிய ஒணாதோ
ஓயாத கவலைகளும் உதவாத செய்கைகளும்
ஓய அருள் புரிய ஒணாதோ
சாவனோ உய்வனோ என்று நினை சஞ்சலம்
தணிய அருள் புரிய ஒணாதோ
தத்துவ சமூகம் தணந்து என்னை அறிமதி
தழைக்க அருள் புரிய ஒணாதோ
ஏவம் இல் எனக்கு அறிவதா நிற்கும் உன் அறிவை
எய்த அருள் புரிய ஒணாதோ
என்று கருதிக் கலுழும் என் நெஞ்சு மகிழுமாறு
இறைநீ கடைக் கணித்துத்
தீவிரம் அறுக்கும் நிலை வைத்து என்னை ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*குறைவில்லாத (நல்வினையும், தீவினையும்) தராசுத்தட்டுகள் போல ஒத்து நிற்குங்காலத்துக் குருவென வந்து, குணம் பல நீக்கிச் சிவஞானத்தை தருகின்ற ‘சத்திநிபாதம்’ நான் அடையும்படி நீ அருள்புரியக்*

*கூடாதா? ஓயாத கவலைகளும், உயிருக்கு எந்தவிதப் பயனும் தராத செய்கைகளும், ஒயும்படி அருள் புரியக்கூடாதா? மற்றவர்களைப் போலவே நானும் காலன் கைப்படுவேனோ? அல்லது உன் திருவடி அடைந்து உய்தி பெறுவேனோ? என்று எண்ணிப் படுகின்ற வேலை ஒழியும்படி அருள் புரியக்கூடாதா? கருவிகளாகிய தத்துவக் கூட்டங்களை, “இஃது அன்று! இஃது அன்று!” என்று கழித்து நிற்கும் நிலையில் தோன்றும் திருவருளால் தன்னையறியும் அறிவு என்னிடம் தழைக்கும்படி நீ அருள் பண்ணக்கூடாதா? நீக்கமற்று எனது அறிவுக்கு அறிவாக விளங்கும் உனது இயற்கை உணர்வினனாதல் என்னும் பண்பை நான் பெற நீ அருள்பண்ணக் கூடாதா? என்று எண்ணி அழும் என்நெஞ்சம் மகிழுமாறு, இறைவனாகிய நீ கடைக்கண் பார்த்தருளி நரக துன்பத்தை அறுக்கும் நிலையில் வைத்து என்னை ஆட்கொள்வாயாக.*

73. கறைநெஞ் சுளார்சிறிது கருதுமா கருதாது
கருதவருள் புரியொணாதோ
கங்குல்பக லாகவந் நாட்டமா நின்றுனைக்
காணவருள் புரியொணாதோ
குறையாத பேரின்ப வெள்ளம் படித்துளே
குளிரவருள் புரியொணாதோ
கூறரிய சுகநல்கு பெருவாழ்வை நான்கொள்ளை
கொள்ளவருள் புரியொணாதோ
இறைமைசால் கண்ணுடைய வள்ளல்குரு சொனவண
மிருக்கவருள் புரியொணாதோ
என்றுகரு திக்கலுழு மென்னெஞ்சு மகிழுமா
நிறைநீ கடைக்கணித்துச்
சிறுமையணு காநிலை நிறீஇயெனை யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

**கறை நெஞ்சு உளார் சிறிது கருதுமா கருதாது**
**கருத அருள் புரிய ஒணாதோ**
**கங்குல் பகல் ஆக அந் நாட்டமா நின்று உனைக்**
**காண அருள் புரிய ஒணாதோ**
**குறையாத பேரின்ப வெள்ளம் படிந்து உளே**
**குளிர அருள் புரிய ஒணாதோ**
**கூறு அரிய சுகநல்கு பெருவாழ்வை நான் கொள்ளை**
**கொள்ளை அருள் புரிய ஒணாதோ**
**இறைமை சால் கண்ணுடைய வள்ளல் குர சொன வணம்**
**இருக்க அருள் புரிய ஒணாதோ**
**என்று கருதிக் கலுழும் என் நெஞ்சு மகிழுமாறு**
**இறைநீ கடைக் கணித்துத்**
**சிறுமை அணுகாநிலை நிறீஇ எனை ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*குற்றம் தங்கிய நெஞ்சுடையவர்கள் எப்போதோ தங்களைப் பெருந்துன்பம் வருத்துகிற காலத்தில் எண்ணுவார் போலவும், உன்னை எப்போதும் சிந்தித்துக் கொண்டிருப்பதே மக்கட்பிறவி பெற்றதன் நோக்கம் என்பதை உணரும் அறிவில்லாமல் உன்னைச் சிந்திப் பதையும் அன்றாடம் செய்யவேண்டிய கடமைகளுள் ஒன்று என்று கருதித் தாங்கள் பெற்ற உபதேசவழி சிறிது நேரம் சிந்தித்துப் பிறகு மறந்துவிடுவார் போலவும் நானும் உன்னைச் சிந்தியாமல் எப்போதும் என் நினைவாகவே இருக்க நீ அருள் புரியக்கூடாதா? இரவும் பகலும் உன்னைச் சிந்திக்கும் நாட்டமே கொண்டிருந்து, உன்னைக் காண நீ அருள் புரியக்கூடாதா? என்றுமே குறைவுபடுதல் இல்லாத பேரின்ப வெள்ளம் பாய்ந்து, என்னுள்ளத்தில் படிந்து, அதனால் நான் உள்ளம் குளிரும்படி நீ அருள் புரியக்கூடாதா? சொற்களில் அடங்காத இன்பத்தைத் தரும் வீட்டுப்பேறாகிய*

*பெருவாழ்வை நான் கொள்ளை கொள்ளும்படி நீ அருள் புரியக்கூடாதா? தலைமை பெரிதுங்கொண்ட கண்ணுடைய வள்ளலாரின் குருநாதராகிய திருஞான சம்பந்தமூர்த்திகள் வள்ளலாருக்கு “என்னாணை என்னாணை என்னாணை ஏகம் இரண்டு என்னாமல் சும்மாயிரு” என்று அறிவுறுத்தியபடி நான் ஒழுக நீ அருள்புரியக்கூடாதா? என்று எண்ணி அழும் என்நெஞ்சம் மகிழும்படி இறைவனாகிய நீ கடைக்கண் பார்த்தருளி அவித்தை (அறியாமை) நெருங்காத நிலையில், நிலைப்படுத்தி நீ என்னை ஆட்கொள்வாயாக.*

74. மிணுமிணு வெனாமணி யுருட்டலில் வராதென்று
மிஞ்சவருள் புரியொணாதோ
மேனாடி நினைதல்போ தாதென நிரோதனம்
விளைக்கவருள் புரியொணாதோ
துணியகல் சுழுத்தியிற் சுகமில்லை யெனவுனித்
துணியவருள் புரியொணாதோ
துலைதூர மோவென்று மலையாது வழிகண்டு
தொடரவருள் புரியொணாதோ
இணையற்ற துரியா திதத்திலே சும்மா
விருக்கவருள் புரியொணாதோ
என்றுகரு திக்கலுழு மென்னெஞ்சு மகிழுமா
றிறைநீ கடைக்கணித்துத்
திணியுச்ச வருணிலை நிறீஇயெனை யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

மிணுமிணு எனாமணி உருட்டலில் வராது என்று
மிஞ்ச அருள் புரிய ஒணாதோ
மேல் நாடி நினைதல் போதாது என நிரோதானம்
விளைக்க அருள் புரிய ஒணாதோ

**துணிஅகல் கழுத்தியில் சுகம் இல்லை என உனித்**
**துணிய அருள் புரிய ஒணாதோ**
**துலை தூரமோ என்று மலையாது வழிகண்டு**
**தொடர அருள் புரிய ஒணாதோ**
**இணை அற்ற துரியாதீதத்திலே சும்மா**
**இருக்க அருள் புரிய ஒணாதோ**
**என்று கருதிக் கலுழும் என் நெஞ்சு மகிழுமாறு**
**இறைநீ கடைக் கணித்துத்**
**திணி உச்ச அருள்நிலை நிறீஇ எனை ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*வாயானது 'மிணுமிணு' என்று உச்சரித்துக் கொண்டிருக்க, (கண்ணானது நாற்புறமுமுள்ள காட்சிகளைக் கண்டுகொண்டிருக்க, செவியானது பிறர் பேசும் சொற்களையெல்லாம் கேட்டுக்கொண்டிருக்க, மனமானது பல எண்ணங்களையும் எண்ணித் திரிந்து கொண்டிருக்க) கையில் உருத்திராக்க மணியை ஒன்றன்பின் ஒன்றாக உருட்டுவதால் 'ஞானநிலை வந்துவிடாது' என்று தெளியும்படி அருள் புரியக்கூடாதா? மேம்பட்ட நிலையை விரும்பிக் கருதிடுவது மட்டும் போதாது, என்று அறிந்து மனம் 'நிரோதனம்' கூடுவதற்கு அருள் புரியக்கூடாதா? தெளிவில்லாத சுழுத்திநிலையில் இன்பங்கிடையாது என்பதை எண்ணித் துணிய அருள் புரியக்கூடாதா? பேரின்பவீடு என்ற ஊர் பெருந்தொலைவில் உள்ளதோ என்று திகைப்புறாமல் அவ்வூருக்குச் செல்லும் வழிகண்டு இடையில் சோர்ந்துவிடாமல் தொடர்ந்து செல்லும்படி நீ அருள் புரியக்கூடாதா? மூலாதாரத்திலே கருவிகள் ஒன்றும் இன்றிப்புருடன் மாத்திரம் இருக்கும்படியான ஒப்பற்ற 'துரியாதீதம்' என்ற அவத்தையில் நான் சும்மாயிருக்க நீ அருள் புரியக்கூடாதா என்று எண்ணி அழும் என்*

*நெஞ்சமானது மகிழுமாறு இறைவனாகிய நீ கடைக்கண் பார்த்தருளி உறுதியான மேம்பட்ட அருள்நிலையிலே நிலைக்கப் பண்ணி என்னை ஆட்கொள்வாயாக.*

75. பத்திவயி ராக்கியப் பெட்டியா வென்னுளம்
படியவருள் புரியொணாதோ
பரமானு பூதிப்பிர வாகமென் முன்னரே
பாயவருள் புரியொணாதோ
சித்தர்க ளுலாவுநற் சதுரகிரி வெளியிலே
திரியவருள் புரியொணாதோ
தேசுமிக வுந்தரும் பொதியா சலத்துளே
செல்லவருள் புரியொணாதோ
எத்திசையு நின்றுனது சித்தையறி யும்படிக்
கேற்றியருள் புரியொணாதோ
என்றுகரு திக்கலுழு மென்னெஞ்சு மகிழுமா
றிறைநீ கடைக்கணித்துச்
செத்திலா முத்தியி னிறீஇயெனை யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

பத்தி வயிராக்கியப் பெட்டியா என் உளம்
படிய அருள் புரிய ஒணாதோ
பரம அனுபூதிப் பிரவாகம் என் முன்னரே
பாய அருள் புரிய ஒணாதோ
சித்தர்கள் உலாவு நற் சதுரகிரி வெளியிலே
திரிய அருள் புரிய ஒணாதோ
தேசு மிகவும் தரும் பொதியாசலத்துஉளே
செல்ல அருள் புரிய ஒணாதோ
எத்திசையும் நின்று உனது சிந்தை அறியும்படிக்கு
ஏற்றி அருள் புரிய ஒணாதோ
என்று கருதிக் கலுழும் என் நெஞ்சு மகிழுமாறு
இறைநீ கடைக் கணித்துத்

**செத்திலா முத்தியில் நிறீஇ எனை ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*பத்தியும், வைராக்கியமும் வைத்துப் பேணப்படுகின்ற பெட்டியாக எனது உள்ளம் படியுமாறு அருள் புரியக்கூடாதா? பெருமையான அனுபூதி வெள்ளமானது எனது முன்னிலையில் பாயும்படி அருள் புரியக்கூடாதா? போகமுனிவர் முதலிய சித்தர்கள் உலாவுகின்ற நலம் உடைய* ***'சதுரகிரி'*** *என்ற வெளியிலே நானும் உலவும்படி அருள் புரியக்கூடாதா? பெரும் புகழைத் தன்பால் கொண்டதான பொதியமலையின் உள்செல்ல அருள்புரியக் கூடாதா? எல்லாவிடத்திலுமே உனது சிவஞானத்தை நான் அறியும் மேல்நிலைக்கு என்னை உயர்த்தி அருள் புரியக்கூடாதா? என்று எண்ணி அழும் என் நெஞ்சம் மகிழுமாறு இறைவனாகிய நீ கடைக்கண் பார்த்தருளி ஒப்பில்லாத முத்திப்பேற்றில் நிலைக்கப்பண்ணி என்னை ஆட்கொள்வாயாக.*

76. சாமமறை வாக்கிய மதிற்றொம்ப தப்பொரு
டனைக்கொளருள் புரியொணாதோ
தகைமைசா றத்பதப் பொருணணி யுணர்ந்துணர்வு
தங்கவருள் புரியொணாதோ
மாமகிமை யுளவசி பதப்பொரு ளுணர்ந்துபயின்
மார்க்கமருள் புரியொணாதோ
வழுத்தந்த முத்திறமு நின்னருளி லாமென
மதிக்கவருள் புரியொணாதோ
ஈமநிலை சேர்முன்ன ரீமநிலை யைக்கண்
டிருக்கவருள் புரியொணாதோ
என்றுகரு திக்கலுழு மென்னெஞ்சு மகிழுமா
றிறைநீ கடைக்கணித்துச்

சேமநிலை யைகொடுத் தென்றுமெனை யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

சாம மறை வாக்கியம் அதில் தொம் பதப் பொருள்
தனைக்கொள அருள் புரிய ஒணாதோ
தகைமை சால் தத்பதப் பொருள் நனி உணர்ந்து உணர்வு
தங்க அருள் புரிய ஒணாதோ
மாமகிமை உள அசிபதப் பொருள் உணர்ந்து பயில்
மார்க்கம் அருள் புரிய ஒணாதோ
ஈமநிலை சேர்முன்னர் ஈமநிலையைக் கண்டு
இருக்க அருள் புரிய ஒணாதோ
என்று கருதிக் கலுழும் என் நெஞ்சு மகிழுமாறு
இறைநீ கடைக் கணித்துத்
சேம நிலையைக் கொடுத்து என்றும் எனை ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*சாமவேதத்துச் சாந்தோக்கிய உபநிடதத்தில் வரும் மகாவாக்கியம் எனப்படும் தத்துவமசி (தத்=பரமான்மா எனப்படும் அது; துவம்=சீவான்மா எனப்படும் நீ; அசி=ஆகின்றனை என்பது பொருள். அதாவது அந்தச் சிவபரஞ்சுடரும், நீயும் அனாதி அத்துவித சம்பந்திகளாய் இருக்கின்றனர். சூரியனது ஒளியினாலே கண்ணிற்குப் பார்க்கும் ஆற்றல் உண்டாவதுபோல அந்தப் பரஞ்சுடரின் ஞானத்தாலே உன் அறிவு விளங்குகின்றது என்று குரு, சீடனுக்கு அறிவுறுத்துவதே இந்த வாக்கியப் பொருள். இதில் பதியாகிய சிவமும், பாசமாகிய மலமும், பசுவாகிய உயிரும் பெறப்படுகின்றமை அறிக.) என்ற தொடரில் வரும் 'தொம்பதம்' எனப்படும் 'துவம்' என்ற சொல்லின் பொருளைத் தெரிந்துகொள்ள அருள்*

பண்ணக்கூடாதா? தகைமை நிறைந்த (அத்தொடரின் முதற்கண் உள்ள) 'தத்' என்ற சொல்லின் பொருளை ('தத்' என்பதன் பொருள் 'பரமான்மா' எனப்படும். அது என்று முன்பு கூறி ஆயிற்று. **'தத்துவமசி'** என்ற வாக்கியத்தைக் கேட்ட சீடன் பெரியஞானமே சொரூபமாக உள்ளது. 'பிரமம்' எனப் பொருள்படும் **'பிரஜ்ஞானம் பிரஹ்மம்'** என்னும் வாக்கியத்தினால் 'அது' என்பது இத்தன்மைத்து என்று சிந்திப்பவன் ஆனான். அந்த ஆத்துமாவே பிரமம் எனப்பொருள்படும் **'அயமாத்மாப் பிரஹ்மம்'** எனும் வாக்கியத்தினால் பெரியஞானமே சொரூபமாக உள்ள 'அது' ஆத்துமாவே. அந்த ஆத்துமா சிறியஞானமுள்ள 'சீவாத்துமா' அன்று எனத்தெளிபவன் ஆனான்.) நன்கு உணர்ந்து, அறிவுநிலைக்கும்படி அருள் பண்ணக் கூடாதா? பெருமாண்பு உள்ள 'அசி' என்ற சொல்லின் பொருளை சீவத்தன்மை நீங்கி அந்தப் பெரியஞான சொரூப பரமான்மா ஆகிய பிரமத்தன்மையை, யடைந்து பிரமம் ஆகின்றனை, சிவசமான கதி அடைகின்றனை என்று, நிட்டை கூடுவை என்பது உணர்ந்து பயிற்சி செய்கின்ற வழியை அருள்புரியக் கூடாதா? பதி, பசு, பாசம் என்று கூறப்படும் மூன்று பொருள்களையும் உணர்த்தி நிற்கும் தத்துவம் 'அசி' என்ற முத்திறமும் உணர்ந்து மேல்நிலையடையும் வகை நின் திருவருளால் கைகூடும் என்பது கருத அருள் புரியக்கூடாதா? இவ்வுடம்பு சுடுகாடு செல்லும் நிலையடையும் முன்பு, தத்துவங்கள் ஈம நிலையடைதலைக் கண்டு இருக்க நீ அருள் புரியக்கூடாதா? என்று எண்ணி அழும் என் நெஞ்சம் மகிழும்படி இறைவனாகிய நீ கடைக்கண் பார்த்தருளிப் பிறவியற்ற இன்பநிலையை வழங்கி எப்போதும் என்னை ஆட்கொள்வாயாக.

77. தொம்பதந் தன்னிலா காமியத் தின்வலி
கருங்கவருள் புரியொணாதோ
துகளற்ற தத்பதந் தன்னிலே சஞ்சிதந்
தொலையவருள் புரியொணாதோ
அம்பதத் தசியிற் பிராரத் துவப்பெருமை
யழியவருள் புரியொணாதோ
அதிர்த்தமுத நடுவிலே யாணவமு மாயையு
மடங்கவருள் புரியொணாதோ
இம்பர்விடு கிறகடையி லேகன்ம வன்மல
மிறக்கவருள் புரியொணாதோ
என்றுகரு திக்கலுழு மென்னெஞ்சு மகிழுமா
றிறைநீ கடைக்கணித்துச்
செம்பரம முத்தியி னிறீஇயெனை யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

தொம் பதம் தன்னில் ஆகாயமியத்தின் வலி
சுருங்க அருள் புரிய ஒணாதோ
துகள் அற்ற தத்பதம் தன்னிலே சஞ்சிதம்
தொலைய அருள் புரிய ஒணாதோ
அம்பதத்து அசியில் பிராரத்துவப் பெருமை
அழிய அருள் புரிய ஒணாதோ
அதிர்த்த முதல் நடுவிலே ஆணவமும் மாயையும்
அடங்க அருள் புரிய ஒணாதோ
இம்பர் விடுகிற கடையிலே கன்ம வன்மலம்
இறக்க அருள் புரிய ஒணாதோ
என்று கருதிக் கலுழும் என் நெஞ்சு மகிழுமாறு
இறைநீ கடைக் கணித்துத்
செம்பரம முத்தியில் நிறீஇ எனை ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*தொம்பதம் எனப்படும் 'துவம்' என்பதன் பொருளை உணருமுகத்தான், கேடில்லாத 'ஞானாக்கினி' உதிக்கும் என்பதன் வாயிலாக ஆகாமிய வினை, (இப்பிறப்பில் செய்யப்படும் வினை)களின் வலிகுறையும் படி அருள் புரியக்கூடாதா? குற்றமற்ற 'தத்' என்ற சொல்லை உணருமுகத்தான் 'சஞ்சிதம்' (கட்டப்பட்டு உள்ள வினை) தொலையும்படி அருள் புரியக்கூடாதா? அழகிய சொல்லாகிய 'அசி' என்பதனை உணருமுகத்தான் உயிரும் உடம்பும் ஒன்றுடன் ஒன்று ஒட்டுவதற்குப் பயன்படும் பிசின் எனப்படும் பிராரத்தம் (ஊழ்வினை) என்பதனை பெருமை அழியும்படி அருள்புரியக் கூடாதா? முற்கூறிய 'தத்' என்பதனை உணருமுகத்தான் ஆணவ மலமும், 'துவம்' என்பதனை உணருமுகத்தான் மாயையும் தம் வலிமடங்க அருள் புரியக்கூடாதா? இவ்விடத்தில் இறுதியில் கூறப்பட்ட 'அசி' என்ற சொல்லை உணரும் முகத்தான் வலிமைமிக்க 'கன்மமலம்' இறந்துபட அருள் புரியக்கூடாதா? என்று எண்ணி அழும் என் நெஞ்சம் மகிழுமாறு இறைவனாகிய நீ கடைக்கணித்தருளி செம்மையும், உயர்ச்சியும் கொண்ட முத்தியில் நிலைக்கப் பண்ணி என்னை ஆட்கொள்வாயாக.*

78. ஆதியிற் சுத்தனா நிற்குநிலை தனிலிச்சை
யல்கவருள் புரியொணாதோ
அடுத்ததி லருட்செல்வ னாநிலையி லேயறி
வடங்கவருள் புரியொணாதோ
வாதனை யிலாதகடை யிற்கிரியை விடுகின்ற
மார்க்கமருள் புரியொணாதோ
மாண்புடைய வக்கடையி லொன்றிரண் டற்றசுக
மருவவருள் புரியொணாதோ
ஏதமில் லாதசிவ சாயுச்சிய மீதென
விருக்கவருள் புரியொணாதோ
என்றுகரு திக்கலுழு மென்னெஞ்சு மகிழுமா
றிறைநீ கடைக்கணித்துத்

தீதில்பதி ஞானகதி நல்கியெனை யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

ஆதியில் சுத்தனா நிற்குநிலை தனில் இச்சை
அல்க அருள் புரிய ஒணாதோ
அடுத்து அதில் அருட் செல்வனாம் நிலையிலே அறிவு
அடங்க அருள் புரிய ஒணாதோ
வாதனை இலாத கடையில் கிரியை விடுகின்ற
மார்க்கம் அருள் புரிய ஒணாதோ
மாண்பு உடைய அக்கடையில் ஒன்று இரண்டு அற்ற
சுகம்
அருள அருள் புரிய ஒணாதோ
ஏதம் இல்லாத சிவசாயுச்சியம் மீது என
இருக்க அருள் புரிய ஒணாதோ
என்று கருதிக் கலுழும் என் நெஞ்சு மகிழுமாறு
இறைநீ கடைக் கணித்துத்
தீதுஇல் பதி ஞானகதி நல்கி எனை ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*முதற்கண் உள்ள 'தத்' என்னும் பதத்தில் தூயவனாக நிற்கும் நிலையில் என் இச்சையானது ஒழிந்திட (நின் இச்சையே என்று நான் அறிந்து நிற்க) அருள் புரியக்கூடாதா? இரண்டாவதாக உள்ள 'துவம்' என்ற பதத்தில் அருட்செல்வனாகிற நிலையில் எனது ஞானம் அடங்கி (நினது ஞானமே சிவபோதமே என்று நான் அறிந்து நிற்க) அருள் புரியக்கூடாதா? வாதனைகள் இல்லாததாகிய இறுதியில் உள்ள 'அசி' என்பதில் என்கிரியை விட்டு (நினது கிரியையே என்று அறிந்து நிற்க) அருள்புரியக்கூடாதா? மாட்சிமைப்பட்ட அந்த இறுதி நிலையாகிய 'அசி' என்பதில் ஒன்று என்பதும்*

*இல்லாமல், இரண்டு என்பதும் இல்லாமல் திகழும் இன்பத்தை நான் கூடும்படி அருள் புரியக்கூடாதா? குற்றமற்ற சிவசாயுச்சிய நிலை இப்பெற்றியினதே என்று நான் அந்நிலையில் இருக்க அருள் புரியக்கூடாதா? என்று எண்ணி அழும் என் நெஞ்சமானது மகிழும்படி தீயது ஒரு சிறிதுமில்லாத பதிஞான நிலையினை வழங்கியருளி என்னை ஆட்கொள்வாயாக.*

79. ஒட்டாரு நட்டார்க ளாகும் படிக்கோ
ருபாயமருள் புரியொணாதோ
ஊனான பூதபரி ணாமவுட லிவ்வளவி
லொழியவருள் புரியொணாதோ
கிட்டிய வினைப்போக பூதசா ரமுமினிக்
கெடவொரருள் புரியொணாதோ
கேவல மிலாதவொரு கேவல மெனக்குக்
கிடைக்கவருள் புரியொணாதோ
எட்டற்ற வக்கேவ லங்கொளசி பதமா
யிருக்கவருள் புரியொணாதோ
என்றுகரு திக்கலுழு மென்னெஞ்சு மகிழுமா
றிறைநீ கடைக்கணித்துச்
சிட்டரடை யுங்கதி யளித்தென்னை யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

ஒட்டாரும் நட்டார்கள் ஆகும்படிக்கு ஓர்
உபாயம் அருள் புரிய ஒணாதோ
ஊன் ஆன பூதபரிணாம உடல் இவ்வளவில்
ஒழிய அருள் புரிய ஒணாதோ
கிட்டிய வினைப் போக பூத சாரமும் இனிக்
கெடஓர் அருள் புரிய ஒணாதோ
கேவலம் இலாத ஒரு கேவலம் எனக்குக்
கிடைக்க அருள் புரிய ஒணாதோ

**என்று கருதிக் கலுழும் என் நெஞ்சு மகிழுமாறு**
**இறைநீ கடைக் கணித்துச்**
**சிட்டர் அடையும் கதி அளித்து என்னை ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*என்னோடு பகைத்துப் போரிடும் ஐம்பொறிகளும், (மெய், வாய், கண், மூக்குச் செவி) ஆறு பகைவர்களும், (காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம்) என்னை உலகச்சேற்றினுள் தள்ளி அழுத்தாமல் என் நண்பர்களாகி திருவருள் நெறியில் அழுந்தி, உய்தி பெறுமாறு செய்யும்படி நீ ஒருசூழ்ச்சி பண்ணி, அருள் புரியக்கூடாதா? புலால் நாற்றம் கூடியதும், ஐம்பூதங்களால் உருவம் பெற்றதும், இளமை, முதுமை, நரை, திரை, சாவு முதலிய மாற்றங்களைக் கொண்டதுமான இந்த உடலில் மேலும், நான் புகாதபடி இதுவே கடைசிப் பிறவியாகிப் பிறவி என்ற நோய் தொலையும்படி அருள் புரியக்கூடாதா? இப்போது என்னைப் பிடித்துள்ள பிராரத்துவ வினைப் போகத்துக்கு உரியதாய, பூத சத்துக்களும் இனிக் கெடும்படி நீ ஒப்பற்ற அருளைப் புரியக்கூடாதா? இழிவில்லாத (தன்னைத்தான் அறியாதகாலம் என்னும் பெத்த தசையில் தன்னை நெருங்கியிருக்கும் கேவலாவத்தையாக இல்லாத) ஒப்பற்ற (தன்னைத்தான் அருள் துணைக்கொண்டு அறிந்தபின்னர் தனது ஞானக்கண்ணுக்குப் புலப்பட்டு நிற்கும் திருவருட்காட்சி எனப்படும் முத்திச் சகலநிலை நீங்கிய அளவிலே, அந்த நிலைக்களத்தே தோன்றும் பரையோகம் எனப்படும்) முத்திக்கேவல நிலையை நான் அடையும்படி நீ அருள் புரியக்கூடாதா? எட்டுவதற்கு அரிய அந்தக் கேவலநிலையையும் துறந்து, பெறுகின்ற 'அசி' என்ற சொற்பொருளாய் இருக்கின்ற சுகாதீத பரிசுத்தம் அடைதல் எனப்படும் சுத்த அத்துவித*

*சிவானுபவ நிலையிலிருக்க அருள் புரியக்கூடாதா? என்று எண்ணி அழும் என் நெஞ்சமானது மகிழும்படி இறைவனாகிய நீ கடைக்கண் பார்த்தருளி அடியவர்களுக்குக் கிட்டுவதாகிய வீட்டுப்பேற்றை வழங்கியருளி என்னை ஆட்கொள்வாயாக.*

80. கல்லினுங் கடியவென் னெஞ்சங் கரைந்துனைக்
கருதவருள் புரியொணாதோ
கதிதனை யவாவியே காந்தத் திருந்துளங்
கனியவருள் புரியொணாதோ
அல்லிலும் பகலிலுந் திருவருட் கடலிலே
யமிழவருள் புரியொணாதோ
அங்கணே யாழ்பழம் பூவண் டுறழ்ந்துபே
றண்ணவருள் புரியொணாதோ
எல்லாரு முன்றொண்ட னென்றெளைச் சொல்லுமுரை
யேறவருள் புரியொணாதோ
என்றுகரு திக்கலுழு மென்னெஞ்சு மகிழுமா
றிறைநீ கடைக்கணித்துச்
செல்லல்வர லில்லமுத நல்கியெனை யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

கல்லினும் கடிய என் நெஞ்சம் கரைந்து உனைக்
கருத அருள் புரிய ஒணாதோ
கதிதனை அவாவி ஏகாந்தத்து இருந்து உளம்
கனிய அருள் புரிய ஒணாதோ
அல்லிலும் பகலிலும் திருவருள் கடலிலே
அமிழ அருள புரிய ஒணாதோ
அங்கணே ஆழ் பழம் பூ வண்டு உறழ்ந்து பேறு
அண்ண அருள் புரிய ஒணாதோ

**எல்லாரும் உன் தொண்டன் என்று எனைச் சொல்லும் உரை**
**ஏற அருள் புரிய ஒணாதோ**
**என்று கருதிக் கலுழும் என் நெஞ்சு மகிழுமாறு**
**இறைநீ கடைக் கணித்துச்**
**செல்லல்வரல்இல் அமுத நல்கி எனை ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*கல்லைவிடக் கடினம் கொண்ட என் உள்ளம் என் தலைவனாகிய உன்னைக் கூட வேண்டும் என்ற ஏக்கங்கொண்டு உன்னை நினைந்து, நினைந்து உணர்ந்து, உணர்ந்து நெகிழ்ந்து, நெகிழ்ந்து அன்பே நிறைந்து, நிறைந்து ஊற்றெழும் கண்ணீர் அதனால், உடம்பு நனைந்து, நனைந்து அரும்பொன்னே! மணியே! என் அன்பே! அன்பான அறிவிலூறும் ஆனந்த வெள்ளமே! என்று நீ அன்று நான் உன் அடிமை அல்லவோ யாதேனும் அறியா வெறும் துரும்பனேன் என்னினும், கைவிடுதல் நீதியோ? என்று கருத அருள் புரியக்கூடாதா? நிலைத்ததான வீட்டுப்பேற்றை விரும்பித் தனித்து இருந்து பயின்று உள்ளம் கனியும்படி அருள் புரியக்கூடாதா? இரவும் பகலும் உனது திருவருளாகிய கடலிலேயே ஆழ்ந்திருக்கும்படி அருள் புரியக்கூடாதா? அவ்வாறு ஆழ்ந்து "தேன் நிறைந்த பூவிலே வண்டு தங்கித் தேனை நுகர்வதுபோல" இன்பப்பேற்றை அடைய அருள் புரியக்கூடாதா? உலகத்தவர் யாவரும் என்னை உனது அடியவன் என்று சொல்லுகின்ற உரை உண்மையாகுமாறு அருள் புரியக்கூடாதா? என்று எண்ணி அழும் என் நெஞ்சமானது மகிழும்படி இறைவனாகிய நீ கடைக்கண் பார்த்தருளி இறப்பும் பிறப்பும் இல்லாத முத்தியை வழங்கி என்னை ஆட்கொள்வாயாக.*

*(ஸ்ரீமத் சுவாமிகள் சிவஞானத்தைத் தரவல்ல* ***இன்னருட்சத்தியின் அருள் தன்னுள் வரும்படி 81ஆம் பாடல் முதல் 90ஆம் பாடல் வரை வேண்டு கின்றார்).***

81\. தாயாய வானந்த ரூபிமா தேவியரு
டடையின்றி யென்னுள்வரவும்
தற்பரி வராகிமா சூலிமா குமரிமா
தங்கியரு ளென்னுள்வரவும்
தூயகுண வம்பிகை மனோன்மணி பவானியருள்
சொந்தமுட னென்னுள்வரவும்
சுந்தரி திகம்பரி பராசத்தி யின்பவரு
டோகமற வென்னுள்வரவும்
மாயமர கதவல்லி வாலைபரி பூரணி
வழங்குமரு ளென்னுள்வரவும்
மாசற்ற வாமியரு ணேசத்தொ டேயென்னுள்
வரவுநீ யருள்புரிந்து
தேயாத பேறெனுந் திருவளித் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

தாய் ஆய ஆனந்த ரூபி மாதேவி அருள்
தடையின்றி என் உள் வரவும்
தற்பரி வராகி மாசூலி மாகுமரிமா
தங்கி அருள் என் உள் வரவும்
தூய குண அம்பிகை மனோன்மணி பவானி அருள்
சொந்தமுடன் என் உள் வரவும்
சுந்தரி திகம்பரி பராசத்தி இன்ப அருள்
தோகம் அற என் உள் வரவும்
மாய மரகதவல்லி வாலை பரிபூரணி
வழங்கும் அருள் என் உள் வரவும்
மாசு அற்ற வாமி அருள் நேசத்தொடே என் உள்
வரவு நீ அருள் புரிந்து

**தேயாத பேறு எனும் திரு அளித்து ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*அகிலாண்ட கோடி யாவும் ஈன்ற அன்னையான இன்பவடிவினள் (ஆனந்தரூபி) எனவும், தேவர்களுக்கெல்லாம் தேவனாகிய மகாதேவனின் சத்தியாகிய (மாதேவி) எனவும், வழங்கப்படும் இறைவியின் திருவருள் தடைபடாது என்னுள் வரவும், தன்னில் தோன்றித்தானே ஆனவளாகிய தற்பரி, இருப்புலக்கையும், உழுபடையும் ஏந்திய வராகி, பெருமைதங்கிய சூலத்தைக் கைக்கொண்டவள், மாண்புடைய கன்னி, மதங்க முனிவருக்குப் பெண்ணாக வளர்ந்தவளாகிய மாதங்கி ஆகிய இறைவியின் திருவருள் என்னுள் வரவும், இராசதம், தாமதம், சத்துவம் என்னும் உயிர்க் குணங்கள் அல்லாத தூய்மையான எட்டுக் குணங்களை உடைய அம்பிகை, உயிர்களின் உள்ளத்து நின்றருளும் மனோன்மணி, பிறவியைக் கெடுக்கும் பவானி ஆகிய இறைவியின் திருவருள் என்னுள் உரிமையுடன் வரவும், ஏனையவர்களுக்கு அழகை அருளும் சுந்தரி, திக்குகளை ஆடையாகக் கொண்ட திகம்பரி, இறைவன் திருமேனியாகிய, பிரணவத்தின் பெயர் கொண்ட பராசக்தியாகிய இறைவியின் திருவருள் (இன்பம் வழங்கும் தரத்தது ஆகலின்) சிறுமையின்றி என்னுள் வரவும், அழகுமிக்கவளாகிய மரகதவல்லி, வாலை, பரிபூரணி எனப்படும் திருப்பெயர்களைக் கொண்ட இறைவி வழங்கும் திருவருள் என்னுள் வரவும், குற்றமற்ற வாமியாகிய பிராட்டியின் அருள் அன்போடு என்னுள் வரவும், நீ அருள்புரிந்து அழியாத 'பேறு' எனப்படும் முத்திச் செல்வத்தை வழங்கி என்னை ஆட்கொள்வாயாக.*

82. மனமா சறுக்கவல மாணிக்க வல்லியருண்
மளமளென வென்னுள்வரவும்
வரதமுடை யபிடேக வல்லியரு ளொல்லையின்
மயங்காம லென்னுள்வரவும்
கனயோக மல்கமுத வல்லிதன் போகவருள்
கரிசின்றி யென்னுள்வரவும்
கரும்பனைய மொழிதருங் கற்பகப் பெயர்வல்லி
கருணையரு ளென்னுள்வரவும்
அனகவொண் மைத்தரள வல்லிபே ரின்பவரு
ளட்டியின் றென்னுள்வரவும்
ஆனந்த வல்லியுடை யருளென்னுள் வரவுமென்
னையனீயருள்புரிந்து
செனனமீ றில்லாத திருவளித் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

மனமாசு அறுக்கவல்ல மாணிக்கவல்லி அருள்
மளமள என என் உள் வரவும்
வரதம் உடை அபிடேகவல்லி அருள் ஒல்லையில்
மயங்காமல் என் உள் வரவும்
கனயோகம் மல்கு அமுதவல்லி தன் போக அருள்
கரிசு இன்றி என் உள் வரவும்
கரும்பு அனைய மொழிதரும் கற்பகப் பெயர்வல்லி
கருணை அருள் என் உள் வரவும்
அனக ஒண்மைத் தரள வல்லி பேரின்ப அருள்
அட்டி இன்று என் உள் வரவும்
ஆனந்த வல்லியுடை அருள் என் உள் வரவும் என்
ஐயன் நீ அருள்புரிந்து
செனனம் ஈறு இல்லாத திரு அளித்து ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*மனத்தில் தங்கும் அழுக்கைப் போக்க வல்லவளாகிய மாணிக்கவல்லி அம்மையின் திருவருள் மளமள என்று என்னுள் வரவும், வேண்டுவோர்க்கு வேண்டுவன அருளும் அபிடேகவல்லி அம்மையின் திருவருள் சிறிதும் தயங்காமல் விரைவுடன் என்னுள் வரவும், பெருமைமிக்க யோகநிலையில் நிறைந்துள்ள அமுதவல்லி அம்மையின் இன்பத்தை வழங்கும் அருள்யாதொரு குற்றமுமின்றி என்னுள் வரவும், கரும்பைப்போன்ற மொழியை அருளும் கற்பகவல்லி என்ற பெயர் கொண்ட அம்மையின் இரக்கத்தோடு கூடிய அருள் என்னுள் வரவும், குற்றமற்ற ஒளியுடைய தரளவல்லி அம்மையின் பேரின்பம் வழங்கும் திருவருள் தடையின்றி என்னுள் வரவும், ஆனந்தவல்லி அம்மையின் திருவருள் என்னுள் வரவும், என் ஐயனாகிய நீ அருள்புரிந்து, பிறப்பு இறப்பு என்ற துன்பங்கள் அற்ற பெருவாழ்வை வழங்கியருளி என்னை ஆட்கொள்வாயாக.*

83. பஞ்சின்மெல் லடிவிழும வமிர்தகுண வல்லியின்
பரமவரு ளென்னுள்வரவும்
பங்கயன் பணிமகா மங்களே சுவரியின்
பசுமையரு ளென்னுள்வரவும்
விஞ்சைவரர் பரவுநல் வேனெடுங் கண்ணியின்
விகதவரு ளென்னுள்வரவும்
விட்டகுறை தொட்டகுறை கிட்டவர வேபுரியு
மெல்லியரு ளென்னுள்வரவும்
சஞ்சல வசஞ்சலப் பொருளெங்கு நிறையுமொரு
சத்தியரு ளென்னுள்வரவும்
தமபாவ சங்காரி யருளென்னுள் வரவுமென்
சாமிநீ யருள்புரிந்து
செஞ்சரோ சப்பதத் திருவளித் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

**பஞ்சின் மெல் அடி விழும் அமிர்தகுண வல்லியின்**
**பரம அருள் என் உள் வரவும்**
**பங்கயன் பணி மகா மங்களே கவரியின்**
**பசுமை அருள் என் உள் வரவும்**
**விஞ்சை வரர் பரவுதல் வேல்நெடும் கண்ணியின்**
**விகத அருள் என் உள் வரவும்**
**விட்டகுறை தொட்டகுறை கிட்ட வரவே புரியும்**
**மெல்லி அருள் என் உள் வரவும்**
**சஞ்சல அசஞ்சலப் பொருள் எங்கும் நிறையும் ஒரு**
**சத்தி அருள் என் உள் வரவும்**
**தம பாவ சங்காரி அருள் என் உள் வரவும் என்**
**சாமி நீ அருள்புரிந்து**
**செஞ்சரோசப் பதத் திரு அளித்து ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*பஞ்சு போன்ற மென்மையான திருவடிச் சிறப்புடைய அமிர்தகுண வல்லியம்மையின் பேரருள் என்னுள் வரவும், தாமரையில் வீற்றிருந்து அருளும் பிரமதேவன் என்றும் தொழுகின்ற மகாமங்களேசுவரியின் குளிர்ந்த திருவருள் என்னுள் வரவும், வித்தியாதரரால் தொழப்படுபவளாகிய நலம் நிரம்பிய வேலை ஒத்த நீண்ட கண்களை உடைய அம்மையின் மலர்ந்த திருவருள் என்னுள் வரவும், விட்டகுறை தொட்டகுறைகள் மீண்டும் தொடர்ந்து பெருகும்படி உயிர்களை அணுகச் செய்யும் மெல்லியாகிய இறைவியின் திருவருள் என்னுள் வரவும், இயங்குதிணை, நிலைத்திணை என்ற இருவகைப் பொருள்கள் யாவற்றிலும் நிறைந்திருக்கும் ஒப்பற்ற சத்தியாகிய இறைவியின் திருவருள் என்னுள் வரவும், நரகுக்குக் காரணமாய தீவினைகளை அழிப்பவளாகிய இறைவியின் திருவருள் என்னுள் வரவும், என் தெய்வமாகிய நீ அருள்புரிந்து சிவந்த தாமரை ஒத்த திருவடிப் பெருவாழ்வை வழங்கியருளி என்னை ஆட்கொள்வாயாக.*

84. மின்னொளி யனந்தமுமிழ் வதனவழ கம்மையின்
விமலவரு ளென்னுள்வரவும்
மிகைதெறுங் காவியங் கண்ணிமா கண்ணியின்
விளக்கவரு ளென்னுள்வரவும்
கன்னலின் கண்டுறழ மொழிமகா வாணிமுக்
கண்ணியரு ளென்னுள்வரவும்
கவினுள சகச்சிரகம லத்திடை யிருக்குமொரு
கன்னியரு ளென்னுள்வரவும்
இன்னலை யெருக்கியருள் சோமகலை நாயகியி
னேசிலரு ளென்னுள்வரவும்
ஏர்கொண்ட சிவயோக நாயகியி னருள்வரவு
மெந்தைநீ யருள்புரிந்து
தென்னிலகு மலரடித் திருவளித் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

மின்ஒளி அனந்தம் உமிழ் வதன அழகு அம்மையின்
விமல அருள் என் உள் வரவும்
மிகைதெறும் காவியம் கண்ணி மாகண்ணியின்
விளக்க அருள் என் உள் வரவும்
கன்னலின் கண்டு உறழ மொழி மகாவாணி முக்
கண்ணி அருள் என் உள் வரவும்
கவின் உள சகச்சிர கமலத்திடை இருக்கும் ஒரு
கன்னி அருள் என் உள் வரவும்
இன்னலை எருக்கி அருள் சோமகலை நாயகியின்
ஏசுஇல் அருள் என் உள் வரவும்
ஏர்கொண்ட சிவயோக நாயகியின் அருள் வரவும்
எந்தை நீ அருள் புரிந்து
தென் இலகு மலர் அடித் திரு அளித்து ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*எண்ணற்ற மின்னல்கள் கூடி ஒளி செய்வதைப் போன்ற ஒளிவீசும் திருமுக அழகுடைய இறைவியின் அழுக்கு பற்றாத திருவருள் என்னுள் வரவும், குற்றத்தைக் கடிகின்றவளாகிய கரிய அழகிய கண்ணுடைய அம்மையும், தடங்கண்ணி (விசாலாட்சி) அம்மையும் ஆகிய இறைவியின் விளக்கமான அருள் என்னுள் வரவும், கரும்புபோன்றும், கற்கண்டு போன்றும் இனியமொழி கூறி அருளும் மகா வாணியும், முக்கண்ணியுமான இறைவியின் அருள் என்னுள் வரவும், அழகுடைய ஆயிரஇதழ்த்தாமரை மேல் எழுந்தருளியிருக்கும் ஒப்பற்ற கன்னி ஆகிய இறைவியின் திருவருள் என்னுள் வரவும், துன்பத்தை அழித்து அருள் செய்கின்ற திங்கள் பிறையை அணிந்த இறைவியின் குற்றமற்ற திருவருள் என்னுள் வரவும், அழகு விளங்கும் சிவயோக நாயகியின் திருவருள் என்னுள் வரவும், எந்தையாகிய நீ அருள் செய்து இன்பம் விளங்கும் நினது திருவடி மலரின் பெருவாழ்வை வழங்கியருளி என்னை ஆட்கொள்வாயாக.*

85. அங்கயற் கண்ணியபி ராமிகா மக்கணி
யகண்டவரு ளென்னுள்வரவும்
அண்டபகி ரண்டங்க ளீன்றவென் னம்மையரு
ளன்புகொண் டென்னுள்வரவும்
சங்கடங் காதுசிவ சாம்பவி நிரந்தரி
சகாயவரு ளென்னுள்வரவும்
சருவபுவ னேசுரி தயாபரி யகாரியின்
சரதவரு ளென்னுள்வரவும்
துங்ககலி யாணிசரு வாணியயி ராணியரு
டுரிதமா வென்னுள்வரவும்
சுத்தசிவ சத்தியரு ளென்னுள்வர வும்பெரிய
சோதிநீ யருள்புரிந்து
சிங்கா நிரந்தரத் திருவளித் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

**அம்கயல் கண்ணி அபிராமி காமக்கணி**
**அகண்ட அருள் என் உள் வரவும்**
**அண்டபகிர் அண்டங்கள் ஈன்ற என் அம்மை அருள்**
**அன்பு கொண்டு என் உள் வரவும்**
**சங்குஅடம் காது சிவசாம்பவி நிரந்தரி**
**சகாய அருள் என் உள் வரவும்**
**சருவபுவனேசுவரி தயாபரி அகாரியின்**
**சரத அருள் என் உள் வரவும்**
**துங்க கலியாணி சருவாணி அயிராணி அருள்**
**துரிதமா என் உள் வரவும்**
**சுத்த சிவசத்தி அருள் என் உள் வரவும் பெரிய**
**சோதி நீ அருள் புரிந்து**
**சிங்கார நிரந்தரத் திரு அளித்து ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*(மதுரையில் எழுந்தருளி இருக்கும்) அங்கயற் கண்ணியும், (திருக்கடவூரில் எழுந்தருளி இருக்கும்) அபிராமியும், (காஞ்சிபுரத்தில் எழுந்தருளி இருக்கும்) காமக்கண்ணியுமான இறைவியின் முழுமையான திருவருள் என்னுள் வரவும், பிரமாண்டத்தையும், அதற்கு வெளிப்பக்கத்துள்ள அண்டங்களையும், படைத்தருளிய என்தாயாகிய இறைவியின் திருவருள் அன்புகொண்டு என்னுள் வரவும், இடுக்கண்களை அழிக்கின்ற சிவசாம்பவியும், நிரந்தரியுமான இறைவி உதவும் திருவருள் என்னுள் வரவும், எல்லாப் புவனங்களுக்கும் ஈசுவரியும், தயாபரியும் அகாரியுமாகிய இறைவியின் நிலைபெற்ற அருள் என்னுள் வரவும், தூயவளான கலியாணியும், சருவாணியும், அயிராணியுமாகிய இறைவியின் திருவருள் விரைந்து என்னுள் வரவும், தூய சிவசத்தியாகிய இறைவியின் திருவருள் என்னுள் வரவும், பரஞ்சோதியாகிய நீ அருள்புரிந்து, குறைதல் இல்லாத நிலைத்த முத்திப்பேற்றை வழங்கியருளி என்னை ஆட்கொள்வாயாக.*

86. அட்டமா சித்திதரு முத்தமியி னல்லரு
ளகங்குளிர வென்னுள்வரவும்
ஆதிநடு வந்தமில் லாதகரு ணாகரியி
னமுதவரு ளென்னுள்வரவும்
இட்டநிமிர் தொண்டரக முற்றபெரு நாயகியி
னீரவரு ளென்னுள்வரவும்
எவ்வுயிரு மெம்மக்க ளென்பவளி னின்பவரு
ளீடின்றி யென்னுள்வரவும்
கட்டழ கெலாமுடைய பருவத வருத்தனிய
கண்டவரு ளென்னுள்வரவும்
கருதரு மிலக்குமியி னருளென்னுள் வரவுமெங்
கடவுணீ யருள்புரிந்து
திட்டமறு பூரணத் திருவளித் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

அட்டமா சித்தி தரும் உத்தமியின் நல் அருள்
அகம் குளிர என் உள் வரவும்
ஆதி நடு அந்தம் இல்லாத கருணாகரியின்
அமுத அருள் என் உள் வரவும்
இட்டம் நிமிர் தொண்டர் அகம் உற்ற பெரு நாயகியின்
ஈர அருள் என் உள் வரவும்
எவ்உயிரும் எம்மக்கள் என்பவளின் இன்ப அருள்
ஈடுஇன்றி என் உள் வரவும்
கட்டழகு எலாம் உடைய பருவதவருத்தனி
அகண்ட அருள் என் உள் வரவும்
கருத அரும் இலக்குமியின் அருள் என் உள் வரவும் எம்
கடவுள் நீ அருள்புரிந்து
திட்டம் அறு பூரணத் திரு அளித்து ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*__அணிமா__, (மிகச்சிறிய உயிர்தோறும் தான் பரமாணுவாய்ச் சென்றிருக்கும் சிறுமையாதல்) __மகிமா,__ (மண் முதல் சிவதத்துவம் ஈறாக உள்ள முப்பத்தாறு தத்துவங்களின் உள்ளும் புறமும் நிறைந்திருக்கும் பெருமையாதல்) __இலகிமா__, (மேருமலையைப் போலப் பாரமாயிருக்கும் யோகியை எடுத்தால் பஞ்சுபோல் இருத்தல்) __கரிமா__, (அணுவைப்போல் இலகுவாய் இருக்கும் யோகியை எடுத்தால் மேரு மலையைப்போல் பாரமாய் இருத்தல்) __பிராத்தி__, (பாதளத்தில் இருப்பவன் பிரமலோகம் செல்லுதலும், மீண்டும் பாதாளம் அடைதலும் அதாவது தான் விரும்பிய உலகு அடைதல்) __பிராகாமியம்__, (மற்றொரு உடலுக்குள் புகுதல் அதாவது கூடுவிட்டுக் கூடுபாய்தல் வானத்தில் இயங்குதல் தான் இச்சித்தப் பொருளைத் தன்பால் அழைத்தல்) __ஈசத்துவம்,__ (படைத்தல், காத்தல், அழித்தலாகிய முத்தொழில் செய்தல், சூரியன் முதலிய ஒன்பது கிரகங்களும் (தனது-ஏவல்கேட்க வாழ்தல்) __வசித்துவம்__, (எல்லாத்தேவர்கள், மக்கள், விலங்குகள், பூதங்கள், பறவைகளைத் தன் வசமாக்கல்) என்று சொல்லப்படும் பெருமைகொண்ட எட்டுச் சித்திகளையும் வழங்கியருளும் உத்தமியாகிய இறைவியின் நலம்கூடிய அருள் உள்ளம் குளிருமாறு என்னுள் வரவும், முதல், நடு, முடிவு என்பவை இல்லாத கருணாகரியின் முத்தி தரும் திருவருள் என்னுள் வரவும், அன்பு ஓங்கியிருக்கும் அடியவர்களின் உள்ளத்தில் வீற்றிருக்கும் பெரியநாயகியின் குளிர்ந்த திருவருள் என்னுள் வரவும், எல்லா உயிர்களும் என் குழந்தைகளே என்று பாராட்டும் இறைவியின் இன்பவருள் ஈடில்லை எனும்படி என்னுள் வரவும், எல்லாப் பேரழகும்கொண்ட பருவதவருத்தனியாகிய இறைவியின் முழுமையான அருள் என்னுள் வரவும், எண்ணுவதற்கு அரிய மகா இலக்குமியின் திருவருள் என்னுள் வரவும், எனது*

*இறைவனாகிய நீ அருள் புரிந்து எல்லையற்ற பூரணமான முத்திப்பெருவாழ்வை வழங்கியருளி என்னை ஆட்கொள்வாயாக.*

87. ஆற்றலுடை நித்திய சுகானந்தி பேரரு
ளளப்பின்றி யென்னுள்வரவும்
ஆனந்த வாரியென நிறையுநிட் களைவிமலை
யாணரரு ளென்னுள்வரவும்
கூற்றால் விளக்கரிய வாதிசிவ சத்தியின்
கோதிலரு ளென்னுள்வரவும்
குற்சித மெலாமடு மகோரநிர்த் தனியங்
குசத்தியரு ளென்னுள்வரவும்
ஊற்றமலி நின்மல நிராகார சத்தியரு
ளுரிமையோ டென்னுள்வரவும்
ஓங்கார சத்தியரு ளென்னுள்வர வும்பெரிய
வொருவனீயருள்புரிந்து
தேற்றவுறழ் வோர்கருது திருவளித் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

ஆற்றல் உடை நித்திய சுகஆனந்தி பேரருள்
அளப்பு இன்றி என் உள் வரவும்
ஆனந்தவாரி என நிறையும் நிட்களை விமலை
யாணர் அருள் என் உள் வரவும்
கூற்றால் விளக்குஅரிய ஆதி சிவசத்தியின்
கோது இல் அருள் என் உள் வரவும்
குற்சிதம் எலாம் அடும் அகோர நிர்த்தனி அம்
குசத்தி அருள் என் உள் வரவும்
ஊற்றம் மலி நின்மல நிராகார சத்தி அருள்
உரிமையோடு என் உள் வரவும்
ஓங்கார சத்தியருள் என் உள் வரவும் பெரிய
ஒருவன் நீ அருள்புரிந்து

**தேற்ற உறழ்வோர் கருது திரு அளித்து ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*ஆற்றல் தங்கிய நிலைபெற்ற சுகானந்தியாகிய இறைவியின் பேரருள் அளவுபடாமல் என்னுள் வரவும், இன்பக்கடலாக நிறையும், நிட்களையும், விமலையுமான இறைவியின் நலமார்ந்த அருள் என்னுள் வரவும், சொற்களால் விளக்கமுடியாத ஆதி சிவசத்தியின் குற்றமற்ற அருள் என்னுள் வரவும், அழுக்குகளை எல்லாம் அழிக்கும் அகோர நிர்த்தனியும் தோட்டியைக் கையில் கொண்டவளுமான இறைவியின் திருவருள் என்னுள் வரவும், மேம்பாடு நிறைந்த நின்மல நிராகார சத்தியாகிய இறைவியின் திருவருள் உரிமையோடு என்னுள் வரவும், ஒப்பற்ற பரமனாகிய நீ அருள்புரிந்து தெளிந்த ஞானிகள் நாடுகின்ற பெருவாழ்வை வழங்கியருளி என்னை ஆட்கொள்வாயாக.*

88. ஒன்பது மணிப்பிரபை வீசுமுடி நாரணியி
னுசிதவரு ளென்னுள்வரவும்
உண்மைப் பரம்பொருளை யகலாத சிற்சத்தி
யொப்பிலரு ளென்னுள்வரவும்
நன்குகெழு புங்கவியொர் பகவதி பராபரைசெய்
நறியவரு ளென்னுள்வரவும்
ஞானவா னந்தமுகி லானபர தேவதையி
னலிவிலரு ளென்னுள்வரவும்
அன்பரு ணடிக்கின்ற வானந்த நிர்த்தனியி
னாணவரு ளென்னுள்வரவும்
அந்தரியி னருளென்னுள் வரவுமெம் பரமனா
யவிருநீ யருள்புரிந்து
தென்புல மிலாதவொரு திருவளித் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

**ஒன்பது மணிப் பிரபை வீசு முடி நாரணியின்**
**உசித அருள் என் உள் வரவும்**
**உண்மைப் பரம்பொருளை அகலாத சிற்சத்தி**
**ஒப்பில் அருள் என் உள் வரவும்**
**நன்குகெழு புங்கவிஓர் பகவதி பராபரை செய்**
**நறிய அருள் என் உள் வரவும்**
**ஞான ஆனந்த முகிஆன பரதேவதையின்**
**நலிவு இல் அருள் என் உள் வரவும்**
**அன்பர் உள் நடிக்கின்ற ஆனந்த நிர்த்தனியின்**
**ஆண அருள் என் உள் வரவும்**
**அந்தரியின் அருள் என் உள் வரவும் பரமனாய்**
**அவிரும் நீ அருள்புரிந்து**
**தென்புலம் இலாத ஒரு திரு அளித்து ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைரம், வைடூரியம் எனப்படும் ஒன்பது மணிகளும் ஒளிவீசும் திருமுடி அணிந்து நாராயணனைத் தோற்றுவிப்பவளாகிய நாராயணியின் மேம்பட்ட அருள் என்னுள் வரவும், அழியாத, (சத்) பரம்பொருளை நீங்காத சிற்சத்தியின் ஒப்பற்ற திருவருள் என்னுள் வரவும், நலம் நிரம்பிய புங்கவியும், ஒப்பற்ற பகவதியும், பராபரையுமான இறைவி வழங்கும் நறியதிருவருள் என்னுள் வரவும், ஞானமும் இன்பமும் கூடியமேகமான பரதேவதையின் அழிவில்லாத அருள் என்னுள் வரவும், அடியவர்களின் உள்ளத்தாமரையில் திருக்கூத்து புரிகின்ற ஆனந்த நிர்த்தனியாகிய இறைவியின் அன்போடு கூடியதிருவருள் என்னுள் வரவும், அந்தரி என்ற பெயருடைய இறைவியின் திருவருள் என்னுள் வரவும், எம்மனோர் பரமனாக விளங்குகின்ற நீ அருள்புரிந்து கூற்றுவன் உலகு கூடாத*

*ஒப்பற்ற முத்திப்பேற்றை வழங்கியருளி என்னை ஆட்கொள்வாயாக.*

89. துப்பிதழ்ச் சாரதை பழிச்சுருத் திரையுடைய
சுத்தவரு ளென்னுள்வரவும்
சோதிவடி வானசரு வேகரி மகேசுரி
துளக்கவரு ளென்னுள்வரவும்
எப்பொழுது முள்ளதிரு மங்கைஜக தம்பிகையி
னேதிலரு ளென்னுள்வரவும்
எழில்பெருகு சங்கரி சகோதரி யெனுஞ்சிற்
றிடைச்சியரு ளென்னுள்வரவும்
ஒப்பின்மா லினிவடுகி நீலலோ சனியமலை
யோகையரு ளென்னுள்வரவும்
ஒளிமல்கு காந்திமதி யருளென்னுள் வரவுமுள்
ளுணருநீ யருள்புரிந்து
செப்பரிய வீடெனுந் திருவளித் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

துப்பு இதழ்ச் சாரதை பழிச்சு குத்திரை உடைய
சுத்த அருள் என் உள் வரவும்
சோதி வடிவு ஆன சருவேசுரி மகேசுரி
துளக்க அருள் என் உள் வரவும்
எப்பொழுதும் உள்ள திருமங்கை ஜகதம்பிகையின்
ஏதுஇல் அருள் என் உள் வரவும்
எழில் பெருகு சங்கரி சகோதரி எனும் சிற்று
இடைச்சி அருள் என் உள் வரவும்
ஒப்புஇல் மாலினி வடுகி நீல லோசனி அமலை
ஓகை அருள் என் உள் வரவும்
ஒளிமல்கு காந்திமதி அருள் என் உள் வரவும் உள்
உணரும் நீ அருள்புரிந்து

**செப்பு அரிய வீடு எனும் திரு அளித்து ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*பவளம் போன்ற சிவந்த வாயிதழ் உடைய கலைமகள் தொழுகின்ற உருத்திரையாகிய இறைவியின் தூய திருவருள் என்னுள் வரவும், ஒளிப்பிழம்பின் வடிவுடைய சருவேசுவரியும், மகேசுவரியுமான இறைவியின் விளக்கமான திருவருள் என்னுள் வரவும், எப்பொழுதும் உள்ள செல்வத்துக்குத் தலைவியும், சகதம்பிகையுமான இறைவியின் முதற்காரணமான திருவருள் என்னுள் வரவும், தன்னிடமிருந்து தோற்றுவிக்கப்பட்டும் தனக்கு முன்னே மூப்படைந்து இறந்தொழிகிற நாராயணன் தன்மையையும் தானே எல்லாவற்றிற்கும் முதல்வியாய் இருந்தும் கன்னியாகவே விளங்கும் தன் தன்மையையும் கருதி நாராயணனின் இளையவள் என்று உலகத்தால் வழங்கப்படுகின்ற அழகு பெருகி உள்ளவள் ஆகிய சிற்றிடை கொண்ட இறைவியின் திருவருள் என்னுள் வரவும், ஒப்பற்ற மாலைகள் அணிந்தவளும், (மாலினி) வடுகியும் கருங்கண்ணை உடையவளும், அமலையுமாகிய இறைவியின் இன்பஅருள் என்னுள் வரவும், ஒளிபெருகும் காந்திமதியாகிய இறைவியின் திருவருள் என்னுள் வரவும், உயிர்களின் உள்ளத்தில் தங்கி அவைகளின் கருத்தை அறிகின்ற நீ அருள்புரிந்து, சொல்லுக்கு அடங்காத வீட்டுப்பேறு என்னும் செல்வத்தை வழங்கியருளி என்னை ஆட்கொள்வாயாக.*

90. சிந்தைதிக ழுஞ்சித்தர் கட்கருஞ் சித்துதவு
செல்வியரு ளென்னுள்வரவும்
தில்லையி னடம்புரியு மன்னைசிவ காமிதரு
தெய்வவரு ளென்னுள்வரவும்

இந்தவுல கின்பாசம் வெந்திட வுபாயமிடு
மிறைவியரு ளென்னுள்வரவும்
எவ்வுயிர்த் தொகையிலு மிருந்துவிளை யாடுமையி
னேமவரு ளென்னுள்வரவும்
கொந்தலர்க் குழலிசிவ சங்கரி சிவானந்தி
குடிலையரு ளென்னுள்வரவும்
கோதிறிரி புரைகௌரி யருளென்னுள் வரவுமெங்
குரவனீயருள்புரிந்து
செந்தே சிகப்பதத் திருவளித் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

சிந்தை திகழும் சித்தர்கட்கு அரும் சித்து உதவு
செல்வி அருள் என் உள் வரவும்
தில்லையில் நடம்புரியும் அன்னை சிவகாமி தரு
தெய்வ அருள் என் உள் வரவும்
இந்த உலகின் பாசம் வெந்திட உபாயம் இடும்
இறைவி அருள் என் உள் வரவும்
எவ்உயிர்த் தொகையிலும் இருந்து விளையாடு உமையின்
ஏம அருள் என் உள் வரவும்
கொந்து அலர்க் குழலி சிவசங்கரி சிவானந்தி
குடிலை அருள் என் உள் வரவும்
கோது இல் திரிபுரை கௌரிஅருள் என் உள் வரவும் எம்
குரவன் நீ அருள்புரிந்து
செந் தேசிகப்பதத் திரு அளித்து ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*சிந்தையில் தன்னை எப்போதும் கருதுகின்ற சித்தர்களுக்கு அரியதாய எட்டுச் சித்திகளையும் வழங்கியருளும் செல்வியாகிய இறைவியின் திருவருள் என்னுள் வரவும், சிதம்பரத்தில் திருக்கூத்து புரியும்*

*அன்னையாகிய சிவகாமி வழங்கும் தெய்வஅருள் என்னுள் வரவும், இந்த உலகத்தின் பாசம் அழிந்திடும்படி வழியருளும் இறைவியின் திருவருள் என்னுள் வரவும், எல்லா உயிர்த்தொகைகளின் உள்ளத்திலும் தங்கித் திருவிளையாட்டுப் புரிகின்ற உமாதேவியின் இன்பஅருள் என்னுள் வரவும், ஞானமாகிய பூங்கொத்துக்கள் நிரம்பிய கூந்தல் கொண்டவளும், சிவசங்கரியும், சிவானந்தியும், குடிலையுமாகிய இறைவியின் திருவருள் என்னுள் வரவும், குற்றமற்ற திரிபுரையும், கௌரியுமாகிய இறைவியின் திருவருள் என்னுள் வரவும், என் குருநாதனாகிய நீ அருள்புரிந்து சிவந்த ஒளியுடைய திருவடிப்பேற்றை அருளி என்னை ஆட்கொள்வாயாக.*

*(ஸ்ரீமத் சுவாமிகள்* ***91ஆம் பாடல் முதல் 100ஆம் பாடல் வரையிலும் ஞானநெறியும் சுத்தாத்துவித நிலையும் அருளியுள்ளார்).***

91. பித்தேறு பித்தம் பிடித்திடா தத்துவித
பித்தம் பிடித்தேகவும்
பேசாத பெருமையைப் பேணுதற் கெனதுவாய்
பேசாதென் வயமாகவும்
செத்தாலும் விட்டுவிடு வேனோ வெனச்சிந்தை
திடமாய் நிலைத்தேறவும்
தேடரு முனைப்புறந் தேடியலை யாதபடி
தேடியென் னுட்காணவும்
எத்தொழில் புரிந்திடினும் வைத்தகுறி பிறழா
திருந்தமுத மேசேரவும்
எண்ணினே னெண்ணக் குறிப்பினை யறிந்தென்று
மிவனமக் கடிமையெனவே
சித்தர்கள் பராவுனடி யருள்புரிந் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

பித்து ஏறு பித்தம் பிடித்திடாது அத்துவித
பித்தம் பிடித்து ஏகவும்
பேசாத பெருமையைப் பேணுதற்கு எனது வாய்
பேசாது என் வயம் ஆகவும்
செத்தாலும் விட்டுவிடுவேனோ எனச் சிந்தை
திடமாய் நிலைத்து ஏறவும்
தேடு அரும் உனைப் புறம் தேடி அலையாதபடித்
தேடி என் உள் காணவும்
எத்தொழில் புரிந்திடினும் வைத்தகுறி பிறழாது
இருந்து அமுதமே சேரவும்
எண்ணினேன் எண்ணக் குறிப்பினை அறிந்து என்றும்
இவன் நமக்கு அடிமை எனவே
சித்தர்கள் பராவு உன் அடி அருள் புரிந்து ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*அறியாமையை மிகுவிக்கும் மண், பொன், பெண் என்னும் பித்தம் பிடித்து அலையாமல் உன்னுடன் அத்துவித நிலையை அடைய வேண்டும் என்ற பித்தமே கொண்டு அந்நெறியில் செல்லவும், இறைவன் சின்முத்திரையில் காட்டிய மோனநிலையின் மாண்பைப் பேணும்படி எனதுவாய் சமயவாதிகளோடு தருக்கத்தில் ஈடுபடாது என் குறிப்பின் வசமாகவும், உன்னை அடைந்தே தீரவேண்டும் என்ற முயற்சியால் நான் அழிந்தொழிந்தே போவதானாலும் உன்னைப்பற்றும் செயலை விட்டுவிடுவேனா? 'விடமாட்டேன்' என்று உள்ளம் உறுதியாய் நிலைத்து உயரவும், தேவர்களும், மூவர்களும் தேடிஅறிய முடியாத உன்னை "ஆரூரர் இங்கிருக்க, அவ்வூர் திருநாள் என்று ஊரூர்கள் தோறும் உழலுவீர்-நேரே-உளக் குறிப்பை அறியாத ஊமர்காள் நீவிர் விளக்கிருக்கத் தீத்தேடுவீர்" என்று பட்டினத்தார் அருளியபடி, புறத்திலே தேடி அலையாமல் என்*

*உள்ளத்தில் நாடிக் காணவும், எத்தொழிலைச் செய்தாலும் ஏது அவத்தைப்பட்டாலும் முத்தர் மனம் இருக்கும் மோனத்தே என்றபடி நான் கொண்டக் குறியிலிருந்து தவறாமல் ஒழுகி, அமுதமாகிய வீட்டைச் சேரவும் எண்ணியுள்ளேன். இந்த என் உள்ளக்குறிப்பை நின் திருவுளத்தில் அடைத்தருளி "என்று நீ அன்று நான் உன்னடிமை" என்ற ஆன்றோர் மொழியின்படி என்னை நீ ஏற்றுக்கொண்டு சித்தர்கள் புகழும் உன் திருவடிப் பேற்றை வழங்கியருளி என்னை ஆட்கொள்வாயாக.*

92. பொருடேடி யுளமகிழு மிழுதையா காதபடி
பொருடேடி யுளமகிழவும்
போக்குவர வறியாத மூர்க்கனா காதபடி
போக்கோடு வரவறியவும்
அருவையுரு வென்கின்ற சிதடனா காதபடி
யருவையுரு வென்றறியவும்
அவனிவ னெனச்சொலுங் கரிசனா காதபடி
யவனிவனொ டென்றறியவும்
இருளையொளி யென்கின்ற குருடனா காதபடி
யிருளையொளி யென்றறியவும்
எண்ணினே னெண்ணக் குறிப்பினை யறிந்தென்று
மிவனமக் கடிமையெனவே
திருவளர் சிவானந்த வருள்புரிந் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

பொருள் தேடி உளம் மகிழும் இழுதை ஆகாதபடி
பொருள் தேடி உளம் மகிழவும்
போக்கு வரவு அறியாத மூர்க்கன் ஆகாதபடி
போக் கோடு வரவு அறியவும்
அருவை உருவு என்கின்ற சிதடன் ஆகாதபடி
அருவை உரு என்று அறியவும்

**அவன் இவன் எனச் சொலும் கரிசன் ஆகாதபடி**
**அவன் இவன் ஒடு என்று அறியவும்**
**இருளை ஒளி என்கின்ற குருடன் ஆகாதபடி**
**இருளை ஒளி என்று அறியவும்**
**எண்ணினேன் எண்ணக் குறிப்பினை அறிந்து என்றும்**
**இவன் நமக்கு அடிமை எனவே**
**திருவளர் சிவானந்த அருள் புரிந்து ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*"பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள" என்று திருவள்ளுவ நாயனாரால் இகழப்பட்ட பொய்ப் பொருளாகிய பொன்னையும், மண்ணையும் தேடிச் சேர்த்து வைத்து மகிழும் முட்டாளாகதபடி "அருட்செல்வம் செல்வத்துள் செல்வம்" என்று அவராலே போற்றப்பட்ட அருட்செல்வத்தைத் தேடி உள்ளம் இன்புறவும், இறப்பது எப்போது? இறந்தால் அடுத்தபிறவி எதுவரும்? என்பதையறியாத, மூர்க்கன் ஆகாதபடி ஆணவத்தின் ஒழிவும் அதனால் ஏற்படும் பேரின்பநிலை ஆகிய வரவும் அறியவும் (எல்லாம் மாயை, காண்பது பொய்) மாயையே உலகமாகத் தோன்றுகிறது. (உண்மையில் உலகம் இல்லை) என்று சொல்லுகின்ற குருடனாகதபடி எங்கும் நிட்களமாய் (அருவமாய்) உள்ள பொருளே, உயிர்களின் பொருட்டுத் திருமேனி தாங்கியுள்ளது என்ற உண்மையை அறியவும், பரமான்மா ஆகிய அவன் வேறு, சீவான்மாவாகிய இவன்வேறு என்றுதுவித (இரண்டு) நிலை கூறும் தீவினையாளன் ஆகாதபடி பரமான்மாவாகிய அவன் சீவான்மாவாகிய இவன் இருவரும் இரண்டறக் கலப்பர் என்று அறியவும், பொய்ப் பொருள் மேற்சொல்லும் அறியாமையையே பேரறிவு என்கின்ற குருடன் ஆகாதபடி இருளாகிய ஆணவமே முத்தி தசையில் இன்பம்*

*விளைவிக்கும் பொருளாக இருக்கும் என்று அறியவும் எண்ணியுள்ளேன். இந்த* ***என் உள்ளக் குறிப்பை நின் திருவுளத்தில் அடைத்தருளி*** *"என்று நீ அன்று நான் உன்னடிமை" என்ற ஆன்றோர் மொழியின்படி என்னை ஏற்றுக்கொண்டு, மேம்பட்டு உயர்ந்த சிவானந்தத் திருவருளை அருளி என்னை ஆட்கொள்வாயாக.*

93. தீங்கா மவாநினைவு தீந்துநல் லுணர்வொன்று
தீயாது மிஞ்சியுடவும்
தெய்வவட நீழலிற் சொல்லாது சொன்னதைச்
சிந்தையு ணிறீஇயிடவும்
தூங்காது தூங்கித் திளைப்போர்கள் கொண்டவொரு
தூக்கமென் பதையெய்தவும்
சொப்பன மிலாதவொரு சொப்பன மெனுந்திவ்விய
சொப்பனங் கண்டுகொளவும்
ஏங்காம லேங்குமோ ரேக்கமது கொண்டுநா
னேங்கியேங் கிக்கனியவும்
எண்ணினே னெண்ணக் குறிப்பினை யறிந்தென்று
மிவனமக் கடிமையெனவே
தேங்காலி னன்பர்கரு தருள்புரிந் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

தீங்கு ஆம் அவா நினைவு தீந்து நல் உணர்வு ஒன்று
தீயாது மிஞ்சி இடவும்
தெய்வ வட நீழலில் சொல்லாது சொன்னதைச்
சிந்தையுள் நிறீ இடவும்
தூங்காது தூங்கித் திளைப் போர்கள் கொண்ட ஒரு
தூக்கம் என்பதை எய்தவும்
சொப்பனம் இலாத ஒரு சொப்பனம் எனும் திவ்விய
சொப்பனம் கண்டு கொளவும்
ஏங்காமல் ஏங்கும் ஓர் ஏக்கமது கொண்டு நான்
ஏங்கி ஏங்கிக் கனியவும்

**எண்ணினேன் எண்ணக் குறிப்பினை அறிந்து என்றும்**
**இவன் நமக்கு அடிமை எனவே**
**தேங்கு ஆலின் அன்பர் கருது அருள் புரிந்து ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*துன்பத்துள் துன்பம் எனப்படும் 'அவா' நிரம்பிய எண்ணம் எரிக்கப்பட்டு நல்ல ஞானம் ஒன்று கெடாது ஓங்கியிடவும், தெய்வத்தன்மை பொருந்திய கல்லால மரநிழலின் கீழ்த் தட்சிணாமூர்த்திப் பெருமான் "வாக்கிறந்த பூரணமாய் மனக்கப் பாலாய், எல்லாமாய், அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்துகாட்டிச் சொல்லாமல், சொன்ன மெய்ந் நிலைமை உள்ளத்தில் நிலைக்கப் பண்ணிடவும், வேகாத அரிசியும், மிகவும் வெந்து பதங்கெட்ட கூழும் அல்லாமல் சோறு என்பதொன்று இனிது காண இருத்தல் போல, விழிப்பிலும், அறிவுகெட்டு உறங்கும் உறக்கத்திலும் சேராது நடுநிகழ் அமல நிட்டை கைகூடிய ஞானிகள் கொள்ளும் அத்தூக்கத்தை நான் பொருந்தவும், உடல் உறக்கத்தில் காண்கின்ற கனவு அல்லாத ஒப்பற்ற நின்மல சொப்பனம் எனப்படும் தெய்வீகக் கனவு தன்னை நான் கண்டு கொள்ளவும், உலகப்பொருளுக்காக (ஏக்கம் கொண்டு உடலும், உயிரும் மெலியும்படி) ஏங்காமல் உனது திருவருளையே நாடுகின்ற ஒப்பற்ற ஏக்கம் கொண்டு ஏங்கி, ஏங்கி என் உள்ளம் நன்கு கனிந்து" (பக்குவப்)படவும் எண்ணியுள்ளேன். இந்த என் உள்ளக் குறிப்பை நின் திருவுளத்தில் அடைத்தருளி "என்று நீ அன்று நான் உன்னடிமை" என்ற ஆன்றோர் மொழியின்படி என்னை ஏற்றுக்கொண்டு நிலைத்த கல்லால மரத்தின் கீழ் இருந்த முனிவர் நால்வரும் கருதிய அருளை வழங்கி என்னை ஆட்கொள்வாயாக.*

94. மேலூர் வியோமா லயக்கோபு ரத்துடை
வெளிக்கடை கடப்பதற்கும்
விசித்தி ரமதானபிர காரத்தை வலம்வந்து
மெய்த்துதிகள் செய்வதற்கும்
நாலாறு திறமாகு நாதமணி மேடையினை
நண்ணிவந் திப்பதற்கும்
ஞானப்பிர காசம்பிர காசிக்கும் வத்துவை
நடுக்கண்டு கொள்வதற்கும்
ஏலாமை யின்றிநிட் களசங்க ரகிதவின்
பென்னுநிலை யுறுவதற்கும்
எண்ணினே னெண்ணக் குறிப்பினை யறிந்தென்று
மிவனமக் கடிமையெனவே
சீலாநல் கென்பவர்கொ ளருள்புரிந் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

மேல்ஊர் வியோம ஆலயக் கோபுரத்துடை
வெளிக் கடை கடப்பதற்கும்
விசித்திரம் அது ஆன பிரகாரத்தை வலம் வந்து
மெய்த்துதிகள் செய்வதற்கும்
நாலுஆறு திறமாகும் நாத மணி மேடையினை
நண்ணி வந் திப்பதற்கும்
ஞானப் பிரகாசம் பிரகாசிக்கும் வத்துவை
நடுக்கண்டு கொள்வதற்கும்
ஏலாமை இன்றி நிட்கள சங்கரகித இன்பு
என்னும் நிலை உறுவதற்கும்
எண்ணினேன் எண்ணக் குறிப்பினை அறிந்து என்றும்
இவன் நமக்கு அடிமை எனவே
சீலா நல்கு என்பவர்கொள் அருள் புரிந்து ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*மேலூரில் உள்ள* ***'சிதாகாசம்'*** *என்னும் கோயிலின் கோபுரத்துக் கீழ் இருக்கும் வெளிவாயிலைக் (கோபுர வாயிலைக்) கடந்திடவும், உள்சென்று விசித்திரம் கொண்ட பிரகாரத்தை வலம்வந்து மெய்ப்புகழை ஓதிடவும், இருபத்துநான்கு வகைப்பட்ட* ***'நாதம்'*** *என்னும்* ***மணிமேடையை*** *அணுகிப் பணிந்திடவும், ஞானவொளி வீசும் பொருளை* ***நடுவில் கண்டுகொண்டிடவும்****, பொருந்திய முறையில் நிட்கள சங்கரகித (கலப்பு இல்லாத) இன்பம்' என்னும் நிலையை அடைந்திடவும் எண்ணியுள்ளேன். இந்த என் உள்ளக் குறிப்பை நின் திருவுளத்தில் அடைத்தருளி, "என்று நீ அன்று நான் உன்னடிமை" என்ற ஆன்றோர் மொழியின்படி என்னை ஏற்றுக்கொண்டு 'பண்புடைய பெருமானே, எங்களுக்கு அருள்வாயாக' என்று வேண்டும் அடியவர்கள் பெறுகின்ற அருளை வழங்கியருளி என்னை ஆட்கொள்வாயாக.*

95. சன்மமுற் சன்மங்கள் போலபல மாகாது
சபலமது பெற்றுய்யவும்
தத்துவா தீதமெனு மொருபெரிய தத்துவந்
தனையே யடைந்துய்யவும்
புன்மனப் புன்மையர்கள் புன்மொழி யவாவிடும்
புன்மையை வரைந்துய்யவும்
புனிறுமர பென்னீமை மருவா திருக்குமொரு
புதுமையை யுணர்ந்துய்யவும்
என்செய்கை நின்செய்கை நின்செய்கை யென்செய்கை
யென்னுநிலை யுற்றுய்யவும்
எண்ணினே னெண்ணக் குறிப்பினை யறிந்தென்று
மிவனமக் கடிமையெனவே
சின்மயா னந்தசிவ வருள்புரிந் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

**சன்மம் முன் சன்மங்கள் போலப் பலம் ஆகாது**
**சபலம் அது பெற்று உய்யவும்**
**தத்துவாதீதம் எனும் ஒரு பெரிய தத்துவம்**
**தனையே அடைந்து உய்யவும்**
**புன்மனப் புன்மையர்கள் புன்மொழி அவாவிடும்**
**புன்மையை வரைந்து உய்யவும்**
**புனிறு மரபு என் நீர்மை மருவாது இருக்கும் ஒரு**
**புதுமையை உணர்ந்து உய்யவும்**
**என் செய்கை நின் செய்கை நின் செய்கை என் செய்கை**
**என்னு நிலை உற்று உய்யவும்**
**எண்ணினேன் எண்ணக் குறிப்பினை அறிந்து என்றும்**
**இவன் நமக்கு அடிமை எனவே**
**சின்மயானந்த சிவ அருள் புரிந்து ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*நான் எடுத்துள்ள இந்தப் பிறவியும், எனது முன் பிறப்புக்கள் போலப் பாழாகாமல், பெரும்பயன் அடைந்து உய்ந்திடவும், தத்துவா தீமானது என்று சொல்லப்படும் ஒப்பற்ற பெருமை கொண்ட மெய்ப்பொருளை நான் அடைந்து உய்ந்திடவும், இழிந்த உள்ளம் கொண்ட கீழ் மக்களின் இழிசொற்களை விரும்புகின்ற சிறுமை நீங்கி உய்ந்திடவும், நாற்றப்புலால் உடம்பை மீண்டும் அடையாது இருக்கும் ஒப்பற்ற புதுமையை அறிந்து உய்ந்திடவும், வேண்டி நீ யாது அருள் செய்தாய் யானும் அதுவே வேண்டினல்லால் வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே என்றிடும் நிலையை அடைந்து உய்ந்திடவும் எண்ணியுள்ளேன். இந்த என் உள்ளக்குறிப்பை நின் திருவுளத்தில் அடைத்தருளி, “என்று நீ அன்று நான் உன்னடிமை” என்ற ஆன்றோர் மொழியின்படி என்னை ஏற்றுக்கொண்டு சின்மயானந்த சிவமே! அருள் வழங்கி ஆட்கொள்வாயாக.*

96. தவறாய விளரிமுழு துந்தவிர வுங்கருத
றவிரா திருப்பதற்கும்
சத்தின்மு னெலாஞ்சூனி யங்கொலென் றறையுமா
தரிசித்து நிற்பதற்கும்
கவலைமா கடலிலே குடையாம னின்னருட்
கடலிலே குடைவதற்கும்
கருவூரை யின்னுமடை யாமலின் னமுதவார்
கலியூரை யடைவதற்கும்
இவனவ னெனுஞ்சிந்தை யிறையுமின் றலர்வண்டி
னியல்பாக வமர்வதற்கும்
எண்ணினே னெண்ணக் குறிப்பினை யறிந்தென்று
மிவனமக் கடிமையெனவே
சிவஞான கைவல்லிய வருள்புரிந் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

தவறு ஆய விளரி முழுதும் தவிரவும் கருதல்
தவிராது இருப்பதற்கும்
சத்தின் முன் எலாம் சூனியம்கொல் என்று அறையுமா
தரிசித்து நிற்பதற்கும்
கவலை மாகடலிலே குடையாமல் நின் அருள்
கடலிலே குடைவதற்கும்
கருவூரை இன்னும் அடையாமல் இன் அமுத ஆர்
கலி ஊரை அடைவதற்கும்
இவன் அவன் எனும் சிந்தை இறையும் இன்று அலர் வண்டின்
இயல்பாக அமைவதற்கும்
எண்ணினேன் எண்ணக் குறிப்பினை அறிந்து என்றும்
இவன் நமக்கு அடிமை எனவே
சிவஞான கைவல்லிய அருள் புரிந்து ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*குற்றமாகிய வேட்கைப் பெருக்கம் முழுதும் நீங்கவும், உன்னைத்தியானம் செய்வது இருக்கவும், சத்துப் பொருட் காட்சியிலே உணர் உருவாகிய 'அசத்து எல்லாம் பாழே' என்று கூற உள்ள பெருமையைக் கண்டு நிலைக்கவும், கவலையாகிய பெருங்கடலில் ஆழ்ந்து தத்தளியாமல் உனது திருவருட்கடலிலே ஆழ்ந்து திளைக்கவும், பெண்களின் கருப்பையாகிய ஊரை அடையாமல் இனிய பேரின்பக்கடல் நிரம்பிய ஊரை அடைவதற்கும் இவன் 'சீவான்மா' அவன் 'பரமான்மா' என்று வேறுபடுத்தும் (துவித) எண்ணம் அணுவளவும் இல்லாமல் 'மலரின் தேன் உண்ணும் வண்டுபோல'* ***இயல்பாக உன்னில் கலந்திருக்கவும் எண்ணி உள்ளேன்.*** *இந்த என் உள்ளக் குறிப்பை நின் திருவுளத்தில் அடைத்தருளி "என்று நீ அன்று நான் உன்னடிமை" என்ற ஆன்றோர் மொழியின் படி என்னை ஏற்றுக்கொண்டு சிவஞான கைவல்லியத்தை அருளி என்னை ஆட்கொள்வாயாக.*

97. பாசநிட் டாபரர்கள் போலவே யந்நிட்டை
பண்ணா துளேசெல்லவும்
பசுஞான நிட்டையுந் திடமன் றெனாவதிற்
படியாது மேலேறவும்
மாசற்ற பதிநிட்டை தன்னிலே நானறிவு
மயமா யிருந்தவிரவும்
மறைஞான சம்பந்த முனிசொன்ன முடிவாக
மௌனமே கைக்கொள்ளவும்
ஏசிலா துள்ளவிந் நிலையன்றி வேறுநிலை
யிலையெதிலு மென்றமரவும்
எண்ணினே னெண்ணக் குறிப்பினை யறிந்தென்று
மிவனமக் கடிமையெனவே
தேசசு மலிந்தவடி யருள்புரிந் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

பாச நிட்டஅபரர்கள் போலவே அந்நிட்டை
பண்ணாது உளே செல்லவும்
பசுஞான நிட்டையும் திடம் அன்று எனா அதில்
படியாது மேல் ஏறவும்
மாசு அற்ற பதிநிட்டை தன்னிலே நான் அறிவு
மயமாய் இருந்து அவிரவும்
மறை ஞான சம்பந்த முனி சொன்ன முடிவு ஆக
மௌனமே கைக் கொள்ளவும்
ஏசுஇலாது உள்ள இந்நிலை அன்றி வேறுநிலை
இலை எதிலும் என்று அமரவும்
எண்ணினேன் எண்ணக் குறிப்பினை அறிந்து என்றும்
இவள் நமக்கு அடிமை எனவே
தேசசு மலிந்த அடி அருள் புரிந்து ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*பாச நிட்டை புரிபவர்கள் மூச்சைப் பிடித்துச் செய்யும் கன்மயோகத்தை நானும் பண்ணாமல், அதனால் அறிதுயிலாகிய ஆனந்த நித்திரை வருவதில்லை என்று அறிந்து கொண்டு உள்ளத் தாமரையினை நோக்கிச் செல்லவும், நானே பிரமம் என்னும் பசுஞானிகள் மேற்கொள்ளும் நிட்டை உறுதியான முத்தி நிலையைப் பயவாது என்று அதில் தங்காமல் மேலே செல்லவும், குற்றமற்ற பதிநிட்டையிலே நான் ஞான மயமாய் இருந்து விளங்கவும், ஒரு நெறிய மனம் வைத்துணர் மறைமுனிவரான திருஞான சம்பந்தப் பெருமான் 'சும்மா இரு' என்று முடிபு கூறியவண்ணம் மோனநிலையைக் கைக்கொள்ளவும், பழிப்பில்லாத இந்த நிலையல்லாத வேறு உயர்ந்தநிலை எச்சமயத்திலும் கிடையாது என்று நான் பொருந்தியிருக்கவும் எண்ணியுள்ளேன். இந்த என் உள்ளக் குறிப்பை நின் திருவுளத்தில் அடைத்தருளி, "என்று நீ அன்று நான் உன்னடிமை" என்ற ஆன்றோர்*

*மொழியின்படி என்னை ஏற்றுக்கொண்டு ஒளி நிரம்பிய நின் திருவடியை வழங்கியருளி என்னை ஆட்கொள் வாயாக.*

98. நெஞ்சம் பதைப்பற்ற நெஞ்சமா கத்தேறி
நெஞ்சையந் நெஞ்சறியவும்
நிலவுநன் மனவெளியி லொருநினைவு சலமின்றி
நிலையாக நின்றுன்னவும்
துஞ்சாத வெனையங்க ணேகண்டு திருவருட்
டுணைவலியை நானுணரவும்
சுத்தவியல் பாமருளி லென்செயலு மறிவுஞ்
சுதந்திர மிழந்துறையவும்
எஞ்சிறுமை நூறிறைவ னாயவுன் னொடுநா
னிருந்தபடி யாநிற்கவும்
எண்ணினே னெண்ணக் குறிப்பினை யறிந்தென்று
மிவனமக் கடிமையெனவே
செஞ்சரண வன்பர்விழை யருள்புரிந் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

நெஞ்சம் பதைப்பு அற்ற நெஞ்சம் ஆகத் தேறி
நெஞ்சை அந்நெஞ்சு அறியவும்
நிலவு நன்மன வெளியில் ஒரு நினைவு சலம் இன்றி
நிலையாக நின்று உன்னவும்
துஞ்சாத எனை அங்கணே கண்டு திருவருள்
துணை வலியை நான் உணரவும்
சுத்த இயல்பு ஆம் அருளில் என் செயலும் அறிவும்
சுதந்திரம் இழந்து உறையவும்
எம் சிறுமை நூறு இறைவன் ஆய உன்னொடு நான்
இருந்தபடியா நிற்கவும்
எண்ணினேன் எண்ணக் குறிப்பினை அறிந்து என்றும்
இவன் நமக்கு அடிமை எனவே

**செம்சரண அன்பர் விழை அருள் புரிந்து ஆள் அரோ**
**தித்திக்கும் முத்தி முதலே**
**தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்**
**சிவ சுப்பிர மணிய தேவே.**

*நெஞ்சம் அலைபாய்வதை விட்டுத் தெளிவுற்று அதனுள் இருக்கும் திருவுள்ளத்தை அறிந்திடவும், விளங்குகின்ற நல்ல மனமாகிய வெளியிலே வேறெந்த சிந்தனையுமின்றி உன்னைச் சிந்திக்கும் செயலிலேயே நிலையாக இருந்து எண்ணிடவும், அழிவு அற்ற என்னை அந்நிலையிலே உணர்ந்து அவ்வாறு உணரும்படி உதவிய திருவருள் துணையின் உதவியை நான் நன்கு தேர்ந்திடவும், தூய்மையே இயற்கையாக உடைய திருவருளில் என் இச்சையும் என் கிரியையும், என் ஞானமும் அகன்று யாவும் சிவனின் இச்சையே, கிரியையே, ஞானமே என்ற நிலையில் வாழவும் என் இழிவைத் துடைக்கும் இறைவனாகிய உன்னுடன் நான் இருந்தபடி இருக்கவும் எண்ணியுள்ளேன். இந்த என் உள்ளக் குறிப்பை நின் திருவுளத்தில் அடைத்தருளி, "என்று நீ அன்று நான் உன்னடிமை" என்ற ஆன்றோர் மொழியின்படி என்னை ஏற்றுக்கொண்டு, நினது சிவந்த திருவடிக்கண் அடியவர்களாய் உள்ளவர்கள் விரும்பும் அருளை வழங்கியருளி என்னை ஆட்கொள்வாயாக.*

99. சளசள வெனப்பேசு நாவினை யடக்கிச்
சவம்போ லொடுங்கிடற்கும்
சகலகே வலம்வந்து தாக்காம லங்ஙனே
சாகாது செத்திடற்கும்
மளமள வெனக்கருணை மழையினா லபிடேக
மதிமகன் செய்திடற்கும்
மாசற்ற சுடலைதனி லுடன்முழுது மொருஞான
வன்னியர வீற்றிடற்கும்

இளவலெம் பிதிரா முனோடெனை யிணைப்பதற்
கேசில்பிண் டம்போடவும்
எண்ணினே னெண்ணக் குறிப்பினை யறிந்தென்று
மிவனமக் கடிமையெனவே
தெளிவுள சுகானந்த வருள்புரிந் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே. (மரண முடிவு)

சளசள எனப் பேசு நாவினை அடக்கிச்
சவம்போல் ஒடுங்கிடற்கும்
சகல கேவலம் வந்து தாக்காமல் அங்ஙனே
சாகாது செத்திடற்கும்
மளமள எனக் கருணை மழையினால் அபிடேகம்
மதிமகன் செய்திடற்கும்
மாசுஅற்ற சுடலை தனில் உடல் முழுதும் ஒரு ஞான
வன்னியால் நீற்றிடற்கும்
இளவல் எம் பிதிராம் உனோடு எனை இணைப்பதற்கு
ஏசுஇல் பிண்டம் போடவும்
எண்ணினேன் எண்ணக் குறிப்பினை அறிந்து என்றும்
இவன் நமக்கு அடிமை எனவே
தெளிவுஉள சுக ஆனந்த அருள் புரிந்து ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*(உலகைத் துறந்து இறைவனைப் பற்றுவோர் நீத்தார் உடலைத்துறந்து உயிர்போவதால் உலகைத் துறந்தவர் உலகை நீத்தார். எனவே, இப்பாடலில்* **ஸ்ரீமத் சுவாமிகள் நீத்தாருக்கு ஒருபுடை ஒற்றுமை கருதிச் செத்தவர்கட்குச்** *செய்யும் கருமங்கள் நிகழ்வதைச் சுவைபடக் கூறியருளுகின்றார்).*

*ஓயாது சளசள எனப்பேசும் இயல்புடைய நாவை அடக்கி, பிணத்தைப்போல ஒடுக்கமுற்றிருந்திடவும்,*

*ஆணவ மலத்தால் கட்டுப்பட்ட கேவலாவத்தையும், அம்மலம் கலாதத்துவத்தால் தனது காரணம் கெடாமல் காரியத்தில் (சாக்கிர சொப்பனங்களில்) சிறிது நீங்கி நிற்கும் சகலாவத்தையும், என்னைவந்து தாக்காமல் உலகர் செத்திடலைப் போலச்சாவது செத்துக்கிடக்கும் தன்மை அடைந்திடவும், ஞானமாகிய எனது மகன் மளமள எனப்பொழியும் கருணையாகிய மழையினால் எனக்கு அபிடேகம் செய்திடவும், குற்றமற்ற சுடுகாட்டில் என்உடலாகிய மாயா மலமும் கன்ம மலமும் மூல மலமும் ஒப்பற்ற ஞானம் என்ற கொள்ளி வைக்கப்பட்டு, நீறு ஆக்கப்பட்டிடவும், நினது பின்னவனாகிய என்னை மூதாதையாகிய (பிதிர்த் தெய்வம்) உன்னோடு சேர்ப்பதற்கு, (இதைப் பெரியவர்களோடு சேர்த்தல் என்பார்கள்) பழிப்பில்லாத பிண்டம் போட்டிடவும் எண்ணியுள்ளேன். இந்த என் உள்ளக் குறிப்பை நின் திருவுள்ளத்தில் அடைத்தருளி, "என்று நீ அன்று நான் உன்னடிமை" என்ற ஆன்றோர் மொழியின்படி என்னை ஏற்றுக்கொண்டு தெளிவுள்ள பேரின்பநிலை கூட்டும் அருளை வழங்கியருளி என்னை ஆட்கொள்வாயாக.*

100. சரியையுங் கிரியையும் புதுமணக் கோலச்
சடங்கென நினைந்துகொளவும்
சகயோக மணவறையுண் மணமகளு மகனுமுள
தரமென வறிந்துகொளவும்
அரியமெய்ஞ் ஞானமபி மானமச் சந்துறந்
தணைதலென வுய்த்துணரவும்
அங்கணுண் டாகுமின் பதையிருவ ருஞ்சொலா
வதிகுய்ய மெனவோரவும்
எரிநிரய யாதனையை நூறருண கிரிநிலையு
மிதுவே யெனத்தெளியவும்
எண்ணினே னெண்ணக் குறிப்பினை யறிந்தென்று
மிவனமக் கடிமையெனவே

திரிபுகே டில்லினிய வருள்புரிந் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே. (விவாக முடிவு)

சரியையும் கிரியையும் புதுமணக் கோலச்
சடங்கு என நினைந்து கொளவும்
சகயோக மண அறையுள் மணமகளும் மகனும் உள
தரம் என அறிந்து கொளவும்
அரிய மெய்ஞ்ஞானம் அபிமானம் அச்சம் துறந்து
அணைதல் என உய்த்து உணரவும்
அங்கண் உண்டாகும் இன்புஅதை இருவரும் சொலா
அதிகுய்யம் என ஓரவும்
எரிநிரய யாதனையை நூறு அருணகிரி நிலையும்
இதுவே எனத் தெளியவும்
எண்ணினேன் எண்ணக் குறிப்பினை அறிந்து என்றும்
இவன் நமக்கு அடிமை எனவே
திரிபு கேடு இல் இனிய அருள் புரிந்து ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவ சுப்பிர மணிய தேவே.

*(தலைவனும், தலைவியும் திருமணத்தால் ஒன்று கூடுகிறார்கள். அதுபோல இறைவனாகிய தலைவனும்* ***உயிராகிய தலைவியும் ஒன்றுகூடும் வீட்டு நிலையைத் திருமண நிகழ்ச்சியாக ஸ்ரீமத் சுவாமிகள் இப்பாடலில்*** *விவரித்தருளுகின்றார்).*

*சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று இறைவனைக் கூடும் படிகள் நான்கு உள்ளன. அவற்றுள் சரியை, கிரியை என்ற இரண்டின் பயனும் புதுமணக் கோல ஆடம்பர மகிழ்ச்சி என்று நினைந்துகொள்ளவும், சகயோகத்தின் பயன் மணஅறையினுள் மணமகனும், மணமகளும் அமர்ந்திருக்கும் தரம் ஆகும் என்று*

அறிந்துகொள்ளவும், கிடைத்தற்கு அரியதான மெய்ஞ்ஞானத்தின் பயன் அம்மணமகனும், மணமகளும் திருமண விழாக் கூட்டத்தையும், சடங்குகளையும், விட்டு அகன்று, தனித்து, அறையினுள்சென்று, இரகசியமாய் இருந்து, அபிமானம் அச்சம் என்பவைகளை நீக்கி, ஒருவரோடு ஒருவர் கூட நுகரும் இன்பநிலை என்று உய்த்து, உணரவும், அந்த இருவரும் அணைந்து, பெற்ற இன்பம் இத்தன்மைத்து என்று சொல்ல ஒண்ணாத மிக்க மறைவுடையது எனவும், வெம்மையான நரகத் துன்பத்தை அழித்த **அருணகிரிநாத முனீந்திரர் பெற்ற அனுபூதி நிலையும் இதுவே** என்று தெளிவு அடையவும் எண்ணியுள்ளேன். இந்த எண்ணக் குறிப்பை நின் திருவுளத்தில் அடைத்தருளி, “என்று நீ அன்று நான் உன்னடிமை” என்ற ஆன்றோர் மொழியின்படி என்னை ஏற்றுக்கொண்டு மாறுதல் தன்மையும் கெடும் தன்மையும் இல்லாத பேரின்பமாகிய அருளை வழங்கியருளி என்னை ஆட்கொள்வாயாக.

ஓம் குகமயம்

ஓம் குஹப்ரஹ்மணே நம:

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:

# மஹாதேஜோ மண்டலத்தார் கடமை

**அத்தியாச்சிரம சுத்தாத்வைத வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்** தம்முடைய பிரசங்கங்கள் பலவினும் எடுத்துரைத்தவாறு, சைவ சாத்திரங்களில் காணப்படும் முரண்பாடுகளைக் களைந்து, நல்லன கொண்டு நடந்து, கடைத்தேறல் ஒருவர்க்கு எளிதில் இயலுவதன்று. ஆகலின், ஆண்டவனுடைய தொடர்பை நேரே பெற்று அனுபவித்த பெரியோர்களுடைய வாழ்க்கையைப் பின்பற்றி நடத்தலே நமது கடமையாதல் வேண்டும்.

நம் இந்திய நாட்டிலே நல்லமுறையாகிய ஒரு தெய்வம்-ஏகமூர்த்தி, வழிபாட்டில் திடமாக நிற்பவர் ஒருவர் கூட காண்பது அருமையாம். அது கருதியே புறம்போந்த பிற மதத்தினர், இன்றும் செய்கின்ற இகழ்ச்சிகளுள் தலையாயது அஃதொன்றே என்பதை எவரும் அறிவர். நமது தமிழ்நாட்டிலே சைவ சமயத்திலே ஆசிரியன்மாராய்த் திகழ்ந்தவர்களுள் ஏகமூர்த்தியைச் சத்திய பக்தியோடு தொழுதுத் தோத்தரித்துப் பிறர்க்குப் பயன் விளைத்தோர் யாவர் என்று நோக்கின் நால்வரையும், முற்றும் உணர்ந்த திருப்புகழைப் பாடி

அருளி பேரின்பப்பேறு பெற்ற ஸ்ரீமத் அருணகிரிநாத முனீந்திரரையும், நமது குருநாதராகிய பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளையுமே காண்போம்.

செவ்வேள் பரமனது திருவருள் நெறியை விடாமல் பற்றுகின்ற பெருமை மிகுந்த பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள், மக்கள் அனைவரும் பயன் பெறுமாறாகவே இவ்வழிபாட்டு முறையை மிகுதியாக எடுத்துப் போதித்தார்கள். அவர்கள் அருளிய திருப்பாவின் உரையாகிய திட்பத்திலே உரிய நியாயம் காட்டி விரிவாகவும் எழுதி வைத்தார்கள். இன்னும், மக்கள் இந் நன்னெறியிலே உறுதியாக நின்று உய்யுமாறு மஹாதேஜோ மண்டலம் எனப் பெயரிய மஹாசபை ஒன்றை நிறுவினார்கள். அச்சபையோர் எத்தேசத்தாராய் இருப்பினும், தம் தேசம், பாஷை, சமயம், சாதி முதலிய வற்றிலுள்ள துரபிமானத்தை அறவே நீக்கி, அளவிலாத தேஜோ மண்டல வடிவ இறைவனாகிய முருகநாதன் ஒருவனுக்கே அடிமையாய் அவனுடைய திருவடியைப் பற்றி நின்று உய்தல் வேண்டும் என்பது ஸ்ரீமத் சுவாமிகளின் உள்ளக் கிடக்கை. சுவாமிகளுடைய கிருபா நோக்கங்களுள் தலையாய இதனை, யாண்டும் பரவச் செய்தலே **மஹாதேஜோ மண்டலத்தார் அவருக்குச் செய்யும் நன்றியறிதலான கடப்பாடாகும்.**

இனிய நடையுடைய கந்தரனுபூதி அருளிய ஸ்ரீமத் அருணகிரிநாத முனீந்திரருக்கு வயலூரில் அறுமுகச்சிவன் ஞானோபதேசம் செய்து அருளியது போல நம் குருநாதராகிய பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளையும் செவ்வேள்பரமன் ஆட்கொண்டு தகரவித்தையினை சுவாமிகள் 35 நாட்கள் நிட்டைச் சாதித்த தவப்பீடமான பிரப்பன் வலசையம் பதியில் அருட்செய்தார்.

*பாம்பன் சுவாமிகள் ஏக தெய்வ வழிபாட்டில் உறுதியாய் நின்றவர். வழிப்பாட்டிற்குரிய தலைமை யானதும், முத்தி அளிக்க வல்லதும் அறுமுகப் பரமனாகிய முருகன் எனும் தெய்வமே.*

*பாம்பன் சுவாமிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஏக தெய்வ வழிபாட்டை ஏற்று முருகன் ஒருவனே நிறைவுற்ற பரம்பொருள், அவனே அனைத்து உயிர்களின் இதய குகைகளிலும் சதாசர்வ காலமும் பரிமளிக்கிறான் என்பதை உணர்பவர்கள் அனைவரும் மஹாதேஜோ மண்டலத்தார் ஆவார்கள்.*

*மஹாதேஜோ மண்டல குரு பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் தம் நூலின் பல பகுதிகளில் மஹாதேஜோ மண்டலத்து அடியவர்களுக்கான இலக்கணத்தை இயம்பியிருக்கிறார்கள்.*

*உதாரணத்திற்கு* **‘செக்கர்வேள் செம்மாப்பு’** *எனும் நூலிலுள்ள 93ம் பாடலைக் காண்போம்.*

வகைப்படா திருக்கும் வைவேல் வலியதா யிலங்கு மாறு
பகைப்படா வைந்து மொன்றும் பகுபடா தொருங்கு கூடித்
தகைச்சடா னனனாய் நிற்றல் சரதபூ ரணனென் றோர்வார்
தொகைப்படா மாதே சோமண் டலத்தராய்ச் சுடரு நீரார்

*“இச்சை, கிரியை, ஞானம் ஆகிய மூன்று சத்திகளும் பிரிவுடாது ஒருங்கு கூடியிருக்கும் கூரிய வேற்படையானது வலியது ஆக விளங்குமாறு சிவமே சத்தியாயும், சத்தியே சிவமாயும் விளங்கும் திறத்தால் முரண்படாத சிவபிரானின் ஐந்து திருமுகங்களும் தேவியின் ஒரு திருமுகமும் தனித்தனி நில்லாது ஒருங்குகூடிய தன்மையால் ஆறு திருமுகங்களுடைய யவனாய் முருகன் விளங்குதல் என்றும் யாண்டும் நிறைவுற்ற பரம்பொருள் இவனே என்று உணர்வார் எண்ணற்ற மகாதேஜோ மண்டலத்து அடியவராய் விளங்கும் தன்மையர் ஆவார்.”*

*மேற்கூறிய நூலில் அடுத்ததாக சுவாமிகளின் 128ஆம் பாடலைக் காண்போம்.*

அவனரு ளொன்றே வேட்டெவ் வரந்தைவந் துறினு நிற்போர்
எவணுறு பதியிற் றோன்றி யெங்கிருந் திடினுஞ் சாதி
எவனென வினவு வார்முன் யாதுரைத் திடினு மன்னோர்
கவனமின் மாதே சோமண் டலத்தராய்க் களிப்பார் மன்னோ

*"எத்தகைய துன்பு நேர்ந்திடினும் தளராமல் அவன் அருள் ஒன்றையே விரும்பி ஒழுகுவோர் எங்கோ ஓர் ஊரில் பிறந்து எங்கோ ஓர் ஊரில் வாழ்ந்திடுபவராயினும், நும் சாதி யாது என்பார்க்கு எந்த விடை கூறுபவராயினும் அன்னோர் (தனக்கு உவமை இல்லாதவன் தாள் சேர்தலின்) மனக்கவலை மாற்றிய மகாதேஜோ மண்டலத்தைச் சேர்ந்தவராகி இன்புறுபவரே என்று தெளிக."*

*கீழ்வருவது 'செக்கர் வேளிறுமாப்பு' எனும் நூலின் 57வது பாடல்.*

நீண்டவிப் பேறி யாண்டு நிகரறு மின்பே யாகக்
காண்டலி னிறுமாப் பென்று கழறலா மிதனை யேற்பார்
யாண்டுநின் றிடினு மெம்மான் யாணரே பராய்நின் றேதந்
தாண்டிடு மாதே சோமண் டலத்தாராந் தகைமை யோரே

*"முடிவில்லாத இவ்வுலகப் பேறு யாண்டும் ஒப்பில்லாத இன்பமே கொண்டு விளங்கலின் இதனை இறுமாப்பு என்றும் கூறலாகும். இதனை அடைந்தோர் எங்கு இருப்பினும் எம்பெருமானின் அருளையே புகழ்ந்திருந்து எவ்வகைத் துன்பங்களையும் கடந்திடும் மகாதேஜோ மண்டலத்தவராக விளங்கும் தகைமையினர் ஆவர்."*

*மேலும், ஸ்ரீமத் சுவாமிகள் அருளிய ஐந்தாவது மண்டலநூலாகிய திருப்பாவில் கடவுள் வணக்கத்துப் பாடலுக்குரிய 'திட்பம்' என்னும் உரையில் மஹாதேஜோ மண்டலவடிவ குமாரபகவான் ஒருவனையே*

"வழிபடுவார் எத்தேசத்தாராய் எக்குலத்தாராயிருப்பினும் அவரெல்லாம் மஹாதேஜோ மண்டலத்தராய் ஆவரென்று நிர்ணயித்த பரமதரும மொன் றுளதென்பது கொளக்கிடக்கின்றது"

*யாங்ஙனமெனின்,*

*"அளவிலாத் தேஜோ மண்டல இறைவன் ஒருவனையே ஆசாரத்தோடு மன்போடும் வழிபடூஉம் அடியாரனைவரும் எத்தேசத்தாராய் எக்குலத்தாராய் இருப்பினும் அவர், "மஹாதேஜோ மண்டலத்தார்" ஆவராகலின், யாமவரை இப்பெயர் தரித்துநிற்குங் கடன்மைக்குட் படுத்தி யுள்ளோம்"*

*இதுவரை கண்ட பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளின் நூல்களில் உள்ள எடுத்துக்காட்டுகளின் மூலம் அறிவது யாதெனில், முருகப்பெருமானை நிறைவுற்ற பரம்பொருளாகக் கொண்டு அவன் ஒருவனையே ஏக தெய்வ வழிபாடாகக் கொண்டிருக்கும் அனைவரும் மஹாதேஜோ மண்டலத்தார் என்பது.*

*அளவிலாத் தேஜோ மண்டல இறைவனாகிய முருகனையே ஏன் நாம் ஏக தெய்வமாக கைக்கொள்ள வேண்டும் என்பதற்கு ஸ்ரீமத் சுவாமிகள் தெள்ளத் தெளிவாக தம் நூல்கள் முழுமையிலும் காரணங்கள் ஆதாரத்தோடு எடுத்து இயம்பி இருக்கிறார்கள். உதாரணத்திற்கு ஸ்ரீமத் சுவாமிகளின் 'உள்ளூர்ச் சிவசுப்பிரமணியர் சதகம்' என்ற நூலின் 39வது பாடலைச் சுவையுங்கள்.*

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளின் முதன்மையான போதனையே இதுதான். உலகனைத்தும் உள்ள இந்துக்கள் அனைவரும் ஒருதெய்வ வழிப்பாட்டை அதாவது, ஏக தெய்வ வழிப்பாட்டை கடைப்பிடிக்க வேண்டும். ஏனெனில், "சுப்பிரமணியக் கடவுளாகிய*

அவன் ஒருவனே அழிவிலான், அடியார்க்கு இறங்கி அருள்வோன், எல்லாப் பாவங்களையும் எருக்கி அருள்வோன்."

செவ்வேள் பரமனான அறுமுகச் சிவமும், ஐம்முகச் சிவமும் வெவ்வேறல்ல. இருவரும் ஒருவரே. வலிய, கொடிய சூரபன்மனை ஆட்கொள்ளும் பொருட்டு ஐம்முகச் சிவத்திலிருந்து அறுமுகச் சிவமாக வெளிப்பட்டு அறுமுகச்சிவத்திற்கு மேலான தெய்வம் இல்லையென என்பதனை, பரமேஸ்வரனே எடுத்து ஓதியுள்ளார். ஆகவே, பல்வகை உடம்புகளில் உள்ள உயிர்களை திருமேனியாகக் கொண்டுள்ள அறுமுகச் சிவனை ஏக தெய்வமாகக் கொள்வது மிகவும் சிறப்புடைத்ததே ஆகும்.

முருகப்பெருமானைக் கண்களால் காணுந்தோறும் நல்அறிவால் நினைக்குந்தோறும் இன்பம் நிறையும் என்பதை அறியாதவர்கள் சிறுசிறு தெய்வங்களைச் சிந்தை செய்கிறார்கள். அவர்கள், "அறியாமை வயப்பட்ட சிறுதெய்வங்களை வழிப்பட்ட பித்தர்கள்" என ஸ்ரீமத் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளி இருக்கிறார்கள். அத்தகைய அடியார்களுக்கு பரம்பொருளாகிய குமார பரமேஸ்வரன் பரத்துவத்தை பாம்பன் ஸ்ரீமத் சுவாமிகள் வழியில் நின்று, 'செத்து பிறக்கும் தெய்வங்கள் பிறப்பு, இறப்பு அற்ற செவ்வேட் பரமனுள் அடங்கும்' என்பதை உணரச் செய்யவேண்டும்.

பண்பாடும் பாரம்பரியமும் மிக்க இந்துமதம் தழைத்தோங்க சிந்தை கொண்ட பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் தகுந்த ஆதாரத்தோடு தமது முதன்மையான போதனையாகிய ஏக தெய்வ வழிப்பாட்டின் முக்கியத்துவத்தை உலகனைத்தும் உள்ள இந்துக்கள் அனைவரும் அறிந்து ஏற்றுக்கொள்ளும் வண்ணம் தாம் இயற்றிய அத்துணை நூல்களிலும் இழையோட விட்டிருக்கிறார்கள்.

சிறுசிறு தெய்வங்களை சிந்தைச் செய்வோர் அருகி பரம்பொருளான குமார பரமேஸ்வரனை ஏக தெய்வமாக ஏற்றுக் கொண்டவர்கள் எண்ணிக்கை கடலென பெருகவேண்டும் என்பது பாம்பன் சுவாமிகளின் சிந்தனை என்பதை நாம் அறிவோம்.

இந்நாளில் அறுமுகச் சிவனை ஏக தெய்வமாக ஏற்றுக் கொண்டவர்கள் எண்ணிக்கைப் பெருகி இருந்தாலும் பாம்பன் ஸ்ரீமத் சுவாமிகளின் எண்ணத்தை பூர்த்தி செய்யும் அளவுக்கு இல்லை என்பதை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

இங்குதான் மஹாதேஜோ மண்டலத்தாரின் 'கடன்' மற்றும் 'பணி' துவங்குகிறது. "யாம் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்" என்ற முதுமொழிக்கு இணங்க எம்பெருமான் செவ்வேள் பரமனின் அருளையே புகழ்ந்திருந்து எவ்வகைத் துன்புகளையும் கடந்திடும் ஆற்றல் பெற்றுள்ள மஹாதேஜோ மண்டலத்தார் அனைவரும் ஒன்று சேர்ந்து பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளின் முதன்மை போதனையான ஏக தெய்வ வழிப்பாட்டை அனைத்து இந்துக்களும் ஏற்றுக் கடைப் பிடிக்க வழிவகைகளை ஆராய்ந்து செயல்படுத்துவோம். ஸ்ரீமத் சுவாமிகளின் நூல்கள் அனைத்தும் சிறுசிறு படிகளாகப் பிரிக்கப்பட்டு அச்சிட்டு இலவசமாகவோ அல்லது மலிவு விலையிலோ 'இறைவன் ஒருவன் உளான்' என்பதை முழுமையாக நம்பும் அனைத்து மக்களுக்கும் தருவதற்கு முன்வருவோம்.

மஹாதேஜோ மண்டலத்தாராகவும், ஸ்ரீசுப்பிர மணியக் கடவுளை வழிபடுகிறவர்களாவும், பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளின் போதனைகளையும், விதிகளையும், அபிமானிக்கிறவர்களாகவும், சிறந்த பண்பாளராகவும் உள்ள சொற்பொழிவாளர்களைக்

கொண்டு ஏக தெய்வ வழிபாட்டை கைக்கொள்வதன் மூலம் அடியார்கள் பெற இருக்கும் பேறுகளை உணர்த்தும் வகையில் பிரசங்கங்கள் நடத்தப்பட ஆவன மேற் கொள்வோம்.

மேலும், பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் போதித்த நெறி தவறாமல் வாழ்ந்து வருபவர்களையும், பல அரிய பெரிய சாதனைகளைச் செய்து சுவாமிகளின் புகழ் பரப்பி வருபவர்களையும் நாம் எப்பொழுதும் மனதில் கொள்ள வேண்டும். அவர்களைப் பற்றி அடிக்கடி அடியார்கள் மத்தியில் உரையாடுதல் வேண்டும். மற்றும் அவர்கள் பெருமைகள் அழிந்துப்படாமல் இருக்க அவைகளுக்கு நூல்வடிவம் தருவதும் நம் சந்ததியினர்க்கு பெரும்பயன் அளிப்பதாக இருக்கும்.

அத்தகையோருள் மிகவும் குறிப்பிடத்தக்கவர் குகஸ்ரீ N. ஜெயராமனார் ஐயா அவர்கள். அவர் நம்மிடையே இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் மஹாதேஜோ மண்டலத்தாருள் மாணிக்கம். தம் வாழ்நாளில் பெரும் பகுதியை ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் தொண்டுக் காகவே அர்ப்பணித்துக் கொண்டவர். பிறவிப்பயன் என்றுதான் சொல்ல வேண்டும்-அவருடைய மூதாதையர் செய்த தவப்பயன் என்றும் கொள்ளலாம்-அவருடைய முந்தையப் பிறவியின் நல்வினைப் பயனாக இத்தகைய செயற்கரிய காரியங்களை செய்ததாகவும் இருக்கலாம். என்ன என்பதை சொல்லவில்லையே, செப்புகிறேன் செவிமடுங்கள்.

மஹாதேஜோ மண்டலத்தாராகிய நாம் அனைவரும் அறிவோம் 1894ம் ஆண்டு பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் 35 நாட்கள் தொடர்ந்து, பிறப்பை அறுக்கும் பிரப்பன் வலசையில் 6 அடி சதுரக்குழி அமைத்து தவமியற்றி ஞானோபதேசம் பெற்றார்கள் என்று.

அந்தநிட்டைச் சாதித்த தலத்தில் ஒரு கோவிலை நிர்மாணிக்க வேண்டும் என்ற எண்ணம் குகஸ்ரீ N. ஜெயராமனார் அவர்கள் உள்ளத்தில் உதித்தது.

அந்த எண்ணத்திற்கு வடிவம் கொடுக்க பெரு முயற்சி எடுத்துக்கொண்டார்கள் அவர்கள். இடையில் பல இன்னல்கள், சோதனைகள், இருப்பினும், ஸ்ரீமத் சுவாமிகளின் அனுகிரகத்தால் அவைகள் 'தீயினில் தூசுப்போல்' மறைந்து ஒழிந்தன. பின்பு ஸ்ரீமத் சுவாமிகள் எந்த இடத்தில் சதுரக்குழி அமைத்து உட்கார்ந்து தவமியற்றினார்களோ அதே இடத்தில் திருக்கோவில் அமைக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் முயற்சி மேற்கொண்ட போது, தவறான இடத்தில் அது அமைய இருந்தது. ஸ்ரீமத் சுவாமிகள், இராக்கன் சேர்வை என்ற 85 வயதுள்ள முதியவர் கனவில் தோன்றி, அவர்கள் குறிப்பிட்டுள்ள இடம் சரியல்ல என்றுக்கூறி, வேறு ஒரு இடத்தை குறிப்பிட்டு அதை வெட்டிப்பார்த்தால் 6 அடி சதுரகுழி உள்ளே களிமண்ணால் சுவர்போல பூசப்பட்டிருக்கும் எனக் குறிப்பிட்டார்கள். ஸ்ரீமத் சுவாமிகளின் கூற்றுப்படி சரியான இடம் கண்டுபிடிக்கப்பட்டதால் அங்கேயே திருக்கோவில் நிருமாணம் செய்ய முடிவெடுக்கப்பட்டது. பின்பு, ஸ்ரீமத் சுவாமிகள் பெரும் கருணை கொண்டு உணர்த்திய நிட்டைச் சாதித்த இடத்தை குகஸ்ரீ N. ஜெயராமனார் அவர்கள், தமது துணைவியார் 'பெண்டிற்குல திலகம்' J.அரங்கநாயகி அம்மையார் அவர்களின் பெயரில் அந்நிலத்தை ஆர்ஜிதம் செய்தார்கள்.

கோயில் கட்டும் திருப்பணிக்காக ஆயத்தம் மேற்கொண்டார்கள் குகஸ்ரீ N. ஜெயராமனார் மற்றும் அவரது போற்றுதலுக்குரிய துணைவியார் ஆகியோர் உள்ளடக்கிய திருப்பணிக்குழு அமைக்கப்பட்டு, அவ்வரிய ஞானக் கற்கோயிலை சிறப்பான முறையில்

பலரும் போற்றும்வண்ணம் கட்டி முடித்தார்கள். அன்றிலிருந்து இன்றுவரை விழாக்கள் மணக்க சீரும் சிறப்போடும் அக்கோயில் காக்கப்பட்டு வருகின்றது. அதை தரிசிக்க மக்களின் வெள்ளம் பெருகிக்கொண்டே இருக்கிறது. பல ஊர்களிலிருந்தும் பல அடியார்கள் கால்நடையாகவே வந்து தவப்பீடமான பிரப்பன் வலசைக் கோயிலை தரிசிக்கிறார்கள். அதில் குறிப்பிடத் தக்கவர்கள் சென்னையைச் சேர்ந்த மஹாதேஜோ மண்டலத்தார் ஆவார்கள். அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் சித்திரை பௌர்ணமி விழாவுக்கு மதுரையிலிருந்து புனித தலமாகிய பிரப்பன் வலசையம்பதிக்கு கால்நடையாகச் சென்று தரிசனம் செய்கிறார்கள்.

இரண்டாவதாக, பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் வசிந்து வந்த வீடு முதுமை நிலையடைந்து, இடிந்து விழுந்து விட்ட நிலையில் அதனைக் கண்ணுற்ற ஐயா குகஸ்ரீ N. ஜெயராமனார் அவர்கள் அவ்இல்லத்தை செப்பனிடச் சிந்தை செய்தார்கள். அதன் முடிவாக திருப்பணிக் கமிட்டி அமைக்கப்பட்டு ஐயா அவர்கள் தலைமை பொறுப்பேற்று பல லட்ச ரூபாய்கள் செலவில் திருப்பணி முடிக்கப்பட்டது. இதில் குறிப்பிடத்தக்கது குகஸ்ரீ N.ஜெயராமனார் அவர்களே நிதியில் பெரும் பகுதியை தனது நன்கொடையாகவே அளித்துள்ளார்கள். கட்டி முடிக்கப்பட்ட பாம்பன் சுவாமிகளின் நினைவாலயம் 1998ம் ஆண்டில் மிக விமரிசையாக விழா எடுக்கப்பட்டு பல தலைசிறந்த அறிஞர் பெருமக்கள் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டு பாம்பன் அடியவர்கள் தரிசனத்திற்காக அர்ப்பணிக்கப்பட்டது.

இன்று, பாம்பன் சுவாமிகளின் நினைவாலயம், காண்போர் கண்ணை கவரும் வகையில் சிறப்பாகவும் காணவரும் அடியார்களை மேலும், மேலும் அங்கு வர தூண்டுவதாகவும் உள்ளது. இதுவரை சுவாமிகளின்

*நினைவாலயத்தை தரிசிக்காதவர்கள் இன்றே-ஆயத்தமாகுங்கள், மீதமுள்ள வாழ்நாளை புனிதமாக்கிக் கொள்ளுங்கள், அவ்வாலயத்தை தரிசிப்பதன் மூலம்.*

*இரண்டு புனிதத் தலங்களாகிய, பிரப்பன் வலசையும், பாம்பன் பதியும் எத்தகைய போற்றுதலுக்குரியது என்பதனை மஹாதேஜோ மண்டலத்தார் அனைவரும் அறிவார்கள். அத்தகைய தலங்களின் மேன்மையை அனைத்து உலகமக்களும் உணரும் பொருட்டு பிரப்பன் வலசையில் பாம்பன் சுவாமிகளுக்குச் சிறப்பான கோவிலையும், பாம்பன் பதியில் சுவாமிகளுக்கு நினைவாலயத்தையும் நிர்மாணிக்கப் பெரிதும் காரணமாய் இருந்த குகஸ்ரீ N. ஜெயராமனார் அவர்களை மஹாதேஜோ மண்டலத்தாராகிய நாம் என்றும் நினைவில் வைத்துப் போற்றவேண்டும்.*

*கி.பி.1991ம் ஆண்டு துறவற வேட்கையால் ஆட்கொள்ளப்பட்ட நமது குருநாதர் பழநிப்பதியை நோக்கிச் செல்ல இருந்த தம் முடிவை தன் நண்பருக்கு கூற, இது 'குமாரக் கடவுள் கட்டளையோ' என அவர் வினாவ, அதற்கு சுவாமிகள் "ஆம்" என்று தம் சிரசை சற்றே அசைத்தார். அன்று மாலைப் பொழுதில் ஸ்ரீமத் சுவாமிகள் தமது இல்லத்தின் மேல் மாடியில் 'அமரர்கோ' என்னும் "பிரபந்தம் முதல் அமிர்தமதி" என்றற்றொடக்கத்துப் பத்து வரையிலும் பாடியுள்ள பாட்டுக்களை, 'தேவனே! இவற்றை நீ கேட்டு அருளல் வேண்டும்; யான் நாளை, இவ்வூரைவிட்டுத் துறவற நிலையை அடைய உள்ளேன் என'ச் சிந்தித்து, படித்து, முடித்துத் தென்புறந் திரும்பியவுடன், எதிர்முகமாக இறைவன் தோன்றி, "எனது கட்டளையென்று பொய் கூறினையென்று" தனது வலக்கரச் சுட்டு விரலை நிமிர்த்தசைத்து, பல்லைக் கடித்து, அச்சுறுத்திக் கோபிப்பதை சுவாமிகள் கண்டு தம்முடைய கண்களை*

*மூடிக்கொண்டு உள் நடுங்கி, உடம்பு நடுங்கி, 'என்னப்பனே! என் கடவுளே!' நிலம்பொலம் விழைந்து பொய் புகலவில்லை, ஆன்மலாபம் எய்த வேண்டும் என்பது பற்றியே, அது தோன்றுவதாயிற்று பொறுத்து அருள்க! என மனத்தினாலேயே விடையிறுத்தினார். அது தெரிந்து கொண்ட பெருமான் "அந்த இலாபம் என்னாலாகாதா?" என்று திருவாய் மலர்ந்தருளி இனி, "யான் வருகவென்று கூறுங்காறும், பழநிக்கு நீ வரவொண்ணாது, வருவதில்லை யென்று கூறு!" என்று கூறலும் அவன் அடியவராகிய ஸ்ரீமத் சுவாமிகள் அப்படியே என்று மனத்தினாலேயே விடையிறுத்தவுடன் இறைவன் அந்தர்த்தானமாய் மறைந்து விட்டனன். இந்நிகழ்ச்சியில் "அவனொருவனுளன் என்பதும், அவனெங்குமிருந் தெல்லா மறிபவது என்பதும், அவன் அடியார்மீது கிருபையுடையான் என்பதும், ஆன்மலாபம் என்னும் வீடுபேறு அவனாலேதான் ஆகத்தக்கது என்பதும்', பூணூல் அணிந்த, மேல் ஜாதியினர் என்று தம்மை சொல்லி கொள்கிறவர்களுக்கே வீடுபேறு ஏயும் என்பார் வியவகாரஞ் சாலா தென்பதும்" ஐயம் திரிபற அறிந்து கொண்ட ஸ்ரீமத் சுவாமிகள், இறைவனுக்குந் தமக்கும் நிகழ்ந்த செய்கை யாவையும் பின்னர்க் கூறித் துதித்தவாறெல்லாம் அவர் பாட்டு நூல்களுள் ஆங்காங்குக் காணக் கிடக்கின்றன.*

*முருகப்பெருமானின் திருவிளையாடலைச் சார்ந்து விளங்குகின்ற இத்தகைய அரிய நிகழ்ச்சிக்கு வடிவம் கொடுத்து அதனை ஒருவிழாவாக 1998ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும், சிவந்த மாணிக்கம் போலும், திருமேனியுடைய முருகவேளின் திருவடிகளை சிந்திக்கும் அடியவரான நம் சுவாமிகளின் நினைவாலயத்தில் சீரும் சிறப்புமாக குகஸ்ரீ N. ஜெயராமனார் அவர்களின் தனித்த பெரும் செலவில் செய்யப்பட்டு வருகிறது.*

மற்றொன்றும், குகஸ்ரீ N. ஜெயராமனார் அவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டும். இன்று நம் கையில் தவழ்ந்து கொண்டிருக்கும் பாம்பன் சுவாமிகளின் நூல்களில் பெரும்பகுதி அவர்களால் அச்சிடப்பட்டவை. சுவாமிகளுடைய நூல்களின் முக்கியத்துவத்தையும் அவைகள் பொன்னெனப் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியவை என்பதையும் அவர்கள் உணர்ந்தார்கள். ஆதலால், சுவாமிகள் இயற்றியருளிய 6666 பாடல்கள் அடங்கிய புத்தகங்கள் பலவும் அச்சிட்டு மலிவு விலையில் கிடைக்க ஆவண மேற்கொண்டு நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். இப்படிப்பட்ட பணிகளையெல்லாம் சாதாரண நிலையில் உள்ளவர்களால் செய்வது இயலாத நிலையாகும். பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளின் போதனைகளையும் விதிகளையும் சிறிதும் பிசகாமல் கடைப்பிடித்து வருபவரும் சுவாமிகளின் அருளாசி பெற்றவருமான மூத்த மஹாதேஜோ மண்டலத்தாரான N. ஜெயராமனார் போன்றவர்களாலேதான் முடியும் என்பதை நாம் உணரவேண்டும்.

குகஸ்ரீ N. ஜெயராமனார் அவர்களைப் பாம்பன் சுவாமிகளுக்காக எடுக்கப்படும் ஒவ்வொரு விழாவிலும் பல அறிவில் சிறந்த சான்றோர்கள் அவரது செயற்கரிய சேவையைப் பாராட்டி வருகிறார்கள். இருப்பினும், உதாரணத்திற்கு ஒன்று சொல்வேன். சமீபத்தில் ஒரு சிறிய நிகழ்ச்சியின் போது முருகப்பித்தனாகிய ஒருமூத்த IAS அதிகாரி அவர்கள், குகஸ்ரீ N. ஜெயராமனார் அவர்கள், "பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளின் உண்மையான தலைச்சிறந்த சீடர் ஆவார்" என்று மஹாதேஜோ மண்டலத்தாராகிய எங்கள் முன்னிலையில் பாராட்டிப் பேசினார்கள் என்பதை கூறிக்கொள்வதில் பெருமிதம் கொள்கின்றேன்.

*கடைசியாக ஒன்று, இதை நான் கூறாமல் விட்டுவிட்டால், நான் போற்றிப் பாதுகாத்து வருகின்ற என் கடமையிலிருந்து தவறியவன் ஆவேன். தெய்வீக மகிமைப் பொருந்திய பிரப்பன் வலசையம்பதியில் சுவாமிகள் நிட்டைச் சாதித்தபோது, உபயோகித்து வந்த அதிசய மண் விளக்கொன்று, திருக்கோயில் கட்டுவதற் காக பள்ளம் தோண்டும்போது 6 அடி ஆழத்தில் கிடைத்தது. மிகவும் பெருமை பொருந்திய அவ்விளக்கு இராமநாதபுரத்தில் மஹாதேஜோ மண்டலத்து அடியவர் வீட்டில் இருந்து வந்தது. அத்தூய்மையான விளக்கு குகஸ்ரீ N. ஜெயராமனார் அவர்களின் பெரும் முயற்சியால், அச்சிறந்த அடியவர்களாலேயே சுவாமிகள் நினைவாலயத்திற்கு கடந்த சித்ராப் பௌர்ணமி அன்று கொண்டு வரப்பட்டு, ஒப்படைக்கப்பட்டு, இன்று அது காட்சிப்பொருளாக இருந்து வருகிறது. இவ்வதிசய விளக்கின் வயது ஏறக்குறைய 106 ஆண்டுகள் ஆகும்.*

*மேலே எடுத்து இயம்பப்பட்ட மந்திர மகிமை வாய்ந்த சுவாமிகளின் போதனைகளை உணர்ந்தவர் களாகிய மஹாதேஜோ மண்டலத்தார் தம்முன்னர், 'எத்தகைய கடமை எதிர்க்கொண்டிருக்கிறது என்பதை உள்ளங்கை நெல்லிக்கனியென அறிவார்கள்' என்று நம்புகிறேன். நாமும் நம்மால் இயன்ற வகையில் பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளின் முதன்மை போதனையான ஏக தெய்வ வழிப்பாட்டை உலகமக்கள் அனைவரும் அறிந்து-பின்பற்றும் வண்ணம் செய்தல் நமது கடமையாகும். அதுமட்டுமல்ல இச்செயலின் மூலம் நாம், நம் குருநாதராகிய பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளுக்கு குருகாணிக்கை செலுத்துகிறோம் என்பதையும் உணர்வோமாக.*

ஓங்குக அறுமுகச்சிவன் புகழ்
ஓங்குக சண்முகசிவன் புகழ்
ஓங்குக சுப்பிரமணிய கடவுள் புகழ்
ஓங்குக செவ்வேட் பரமன் புகழ்
ஓங்குக குமார பரமேஸ்வரன் புகழ்
ஓங்குக குமார பகவான் புகழ்

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச முனீந்திரர் அடிமை

ஆறுமுகம் கதிர்வேலனார்,M.A., PGDPM.

# செய்யுள் அகராதி


| செய்யுள் தொடக்கம் | செய்யுள் எண் | பக்க எண் |
|---|---|---|
| அடியும் நடுமுடியும் | 13 | 36 |
| அட்டமா சித்தி | 86 | 158 |
| அட்டாங்க நிட்டையிலும் | 19 | 44 |
| அண்டம் எனும் | 5 | 24 |
| அம்கயல் கண்ணி | 85 | 156 |
| அவல நுவல் | 15 | 38 |
| ஆக்கைக்கும் ஆவிக்கும் | 2 | 19 |
| ஆசு அற்ற | 70 | 130 |
| ஆணவ மறைப் | 27 | 58 |
| ஆதாரம் ஆறிற்கும் | 8 | 28 |
| ஆதித்தர் கடவுளாய் | 11 | 33 |
| ஆதியில் சுத்தனா | 78 | 144 |
| ஆற்றல் உடை | 87 | 160 |
| இவ்வளவு எனச் | 18 | 43 |
| இறப்பு உறு | 20 | 46 |
| ஈர்ஏழு லோகம் | 9 | 30 |
| எங்கள் மதம் | 39 | 80 |
| எல்லாம் அறிந்தவர் | 32 | 69 |
| ஏசு அறு | 50 | 97 |
| எவ்வுயிரும் அறிவு | 41 | 83 |
| ஒட்டாரும் நட்டார்கள் | 79 | 146 |
| ஒன்பது மணிப் | 88 | 161 |
| ஓங்கார சத்தத்தில் | 14 | 37 |
| ஓவுதல் இலாத | 72 | 133 |
| கலையிலே தோன்றி | 23 | 52 |
| கல்லினும் கடிய | 80 | 148 |
| கறை நெஞ்சு | 73 | 135 |
| கன ஆடகம் | 46 | 91 |
| காசு ஆசை | 31 | 67 |
| காமஆதிகளை விட்டு | 59 | 111 |
| காற்றுக் கயிற்றில் | 58 | 110 |
| கிஞ்சிஞ்ஞன் ஒன்றினும் | 29 | 63 |

| செய்யுள் தொடக்கம் | செய்யுள் எண் | பக்க எண் |
|---|---|---|
| கைதவம் திமிராது | 55 | 105 |
| கோவில் வாவிகள் | 67 | 125 |
| சகல புத்தேள்களும் | 12 | 34 |
| சரியையும் கிரியையும் | 100 | 181 |
| சருவ வல்லமை | 54 | 104 |
| சளசள எனப் | 99 | 179 |
| சற்குணர் தொழும் | 62 | 117 |
| சன்மம் முன் | 95 | 173 |
| சாம மறை | 76 | 140 |
| சிங்கல்இல் அதீத | 71 | 131 |
| சிந்தை திகழும் | 90 | 164 |
| சுத்தமா மாயையின் | 24 | 53 |
| சுத்தமை அசுத்த | 25 | 55 |
| செம்பில் களிம்பு | 28 | 61 |
| சென்றதையும் வருவதையும் | 65 | 122 |
| ஞான நூலின்படி | 48 | 95 |
| தங்காது எழுந்து | 53 | 192 |
| தவறு ஆய | 96 | 175 |
| தாணுநிழல் கொண்ட | 61 | 115 |
| தாய் ஆய | 81 | 150 |
| திரு ஏறும் | 1 | 17 |
| தீங்கு ஆம் | 93 | 170 |
| துட்டத் தனங்கட்கு | 40 | 82 |
| துப்பு இதழ்ச் | 89 | 163 |
| தொக்கது என்றும் | 22 | 49 |
| தொம் பதம் | 77 | 143 |
| நல்ல மனிதன் | 44 | 88 |
| நன் நெறியில் | 38 | 78 |
| நாம ரூபங்கள் | 69 | 128 |
| நிலம் என்றும் | 21 | 47 |
| நில்லாத பிரபஞ்ச | 7 | 27 |
| நெஞ்சம் பதைப்பு | 98 | 178 |
| பகிர்முக மனத்தை | 52 | 101 |
| பஞ்சின் மெல் | 83 | 153 |

| செய்யுள் தொடக்கம் | செய்யுள் எண் | பக்க எண் |
|---|---|---|
| பத்தி வயிராக்கியப் | 75 | 139 |
| பரமுத்தன் ஆன | 63 | 119 |
| பற்றிடும் அனாதி | 26 | 57 |
| பாச நிட்டஅபரர்கள் | 97 | 176 |
| பாடும் படிக்குப் | 57 | 108 |
| பித்து ஏறு | 91 | 166 |
| பூதம் முதல் | 30 | 65 |
| பேய்களைப் பூசை | 37 | 77 |
| பேராசை இல்லா | 56 | 107 |
| பொய்யாத தாரகப் | 16 | 40 |
| பொருள் தேடி | 92 | 168 |
| பொருள் நட்பில் | 43 | 87 |
| பொருவு அற்ற | 34 | 72 |
| பொற்புஉறு சிவஆனந்த | 68 | 127 |
| போத வெளியாய் | 4 | 22 |
| போய் வருதல் | 45 | 90 |
| மதபேத வம்புகளும் | 66 | 124 |
| மனமாக அறுக்கவல்ல | 82 | 152 |
| மாசற்ற உள்ளூர் | 17 | 41 |
| மானம் அறு | 3 | 21 |
| மிணுமிணு எனாமணி | 74 | 137 |
| மின்ஒளி அனந்தம் | 84 | 155 |
| முக்குணம் இலாத | 10 | 31 |
| முதலைக் கனாவினும் | 49 | 96 |
| முத்தர்கள் தெவிட்டப் | 6 | 25 |
| மேல்ஊர் வியோம | 94 | 172 |
| வஞ்சி நிகர்உக்கமட | 33 | 70 |
| வந்தவரை வம்மின் | 47 | 93 |
| வந்தவழி எந்தவழி | 51 | 99 |
| விடய வாதனை | 60 | 113 |
| வேத ஆகமங்கள் | 35 | 74 |
| வேத நிஜ | 42 | 85 |
| வையத்து மாந்தரை | 36 | 75 |
| வையம் துறந்த | 64 | 121 |

## பாம்பன் சுவாமிகள் செய்த செய்யுள் நூல்களின் விவரம்:-

**6666 பாடல்கள் சுவாமிகளால் இயற்றப் பெற்றுள்ளன. அவை ஆறு மண்டலங்களாகத் தொகுக்கப் பெற்றுள்ளன.**

| நூல் பெயர் | | மண்டலம் | பாடல் தொகை |
|---|---|---|---|
| தலப்பாடல்களும் உள்ளூர்ச் சிவசுப்பிரமணியம் சதகம் முதலியனவும் | | முதல் மண்டலம் | 1266 |
| திருவலங்கற்றிரட்டு முதல் கண்டமும் இரண்டாங் கண்டமும் | | இரண்டாவது மண்டலம் | 1135 |
| காசி யாத்திரை | 608 | மூன்றாவது மண்டலம் | 955 |
| பரிபூரணானந்தபோதம் | 230 | | |
| தகராலய ரகசியம் | 117 | | |
| சிறுநூற்றிரட்டு | 258 | நான்காவது மண்டலம் | 1014 |
| சேந்தன் செந்தமிழ் | 50 | | |
| பத்துப் பிரபந்தம் | 30 | | |
| குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி | 100 | | |
| குமாரஸ்தவம் | 44 | | |
| செக்கர்வேள் செம்மாப்பு | 198 | | |
| செக்கர்வேள் இறுமாப்பு | 64 | | |
| சீவயாதனாவியாசம் | 235 | | |
| திருத்தலங்களில் பாடிய கட்டளைக் கலித்துறை | 35 | | |
| திருப்பா | | ஐந்தாவது மண்டலம் | 1101 |
| ஸ்ரீமத் குமாரசுவாமியம் | 1192 | ஆறாவது மண்டலம் | 1195 |
| ஆனந்தக்களிப்பு | 1 | | |
| சமாதான சங்கீதம் | 1 | | |
| தங்க ஆனந்தக்களிப்பு | 1 | | |
| | பாடல் தொகை | | 6666 |

**பாம்பன் சுவாமிகள் செய்த உரைநடை நூல்கள் விவரம்:-**

1. சுப்பிரமணிய வியாசம்
2. குருசிஷ்ய சம்பவ வரலாற்று வியாசம்
3. சமயங்களைக் குறித்த வியாசம்
4. சிவஞான தேசிகம், கடவுளைக் குறித்த வியாசம்
5. சிவஞான தேசிகம் 11ஆம் பாகம் தேவர்களைக் குறித்த வியாசம்
6. வேதத்தைக் குறித்த வியாசம்
7. பரமசிவம் என்பதைக் குறித்த வியாசம்
8. பிரம்மாவின் சிருஷ்டியைக் குறித்த வியாசம்
9. சுவர்க்க நரகத்தைக் குறித்த வியாசம்
10. சத்தியின் பூர்வத்தைக் குறித்த வியாசம்
11. தேவர் ஆராதனையைக் குறித்த வியாசம்
12. திருலீலைகளைக் குறித்த வியாசம்
13. மாயையைக் குறித்த வியாசம்
14. கடவுள் காருண்யத்தைக் குறித்த வியாசம்
15. கடவுள் வல்லமையைக் குறித்த வியாசம்
16. மதி விதிகளைக் குறித்த வியாசம்
17. பிறவியைக் குறித்த வியாசம்
18. சூதைக் குறித்த வியாசம்
19. லாகிரியைக் குறித்த வியாசம்
20. வலக்கரத்தைக் குறித்த வியாசம்
21. ஜீவ வதையைக் குறித்த வியாசம்

22. கள்ளத்தைக் குறித்த வியாசம்
23. வியபிசாரம் முதலியவற்றைக் குறித்த வியாசம்
24. அறத்தைக் குறித்த வியாசம்
25. சிற்றின்பம் பேரின்பங்களைக் குறித்த வியாசம்
26. மோக்ஷத்தையும் சுவர்க்கத்தையும் குறித்த வியாசம்
27. கல்வியைக் குறித்த வியாசம்
28. சரியையாதி நான்கு பாதங்களைக் குறித்த வியாசம்
29. பெரியாரைக் குறித்த வியாசம்
30. குருவைக் குறித்த வியாசம்
31. சீடரைக் குறித்த வியாசம்
32. ஐம்பொறி யடக்கத்தைக் குறித்த வியாசம்
33. சண்முக சகச்சிர நாமார்ச்சனை
34. நாலாயிரப் பிரபந்த விசாரம்
35. செவியறிவுறூஉ
36. சிவஞான தீபம்
37. சைவ மகிமையும் அனுஷ்டான விதியும்
38. சைவ சமய சரபம்
39. ஸ்ரீ அருணகிரிநாதர் சரிதம்
40. சுத்தாத்வைத நிர்ணயம்